www.tamilarangam.net

# எரிமலை

மே 2004

நேர்காணல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்
திரு.கரிகாலன்
அவர்களுடனான நேர்காணல்



சூரியத்தேவனே
தமிழினத்தின் வாழ்வும் – வளமும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உலகத் தொழிலாளர்நாள்

# மே 1

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிமலை

## உள்ளே...


### கட்டுரைகள்

ஐ.நாவில் தமிழர் மனித உரிமை - கலாநிதி க.சோமாஸ்கந்தன் பக்கம் - 10

### அணையாத தீபங்கள்

லெப். கேணல் அகிலா- மா.சித்தா பக்கம் - 48

### உண்மைப் பதிவு

சுனித்தீவு - மணலாறு விஜயன் பக்கம் -14

தீயின் ஒரு துளி - செ.புரட்சிகா பக்கம் -34

தீச்சுடர்-5 - தமிழ்க்கவி பக்கம் -44

### கவிதை

சமாதானம்- பிரியா ஜெயக்குமார் பக்கம் - 09

ஒரு ஜீவனின் பாடல்- விஷ்ணு பக்கம் - 25

என் வாழ்வு - அம்புலி பக்கம் - 43

இனிய காற்றின் வருடலுக்காய் - கொற்றவை பக்கம் - 47

### சிறுகதை

விரும்பாதது - பரந்தனூரான் பக்கம் - 16

ஏக்கம் - மண்டைதீவு கலைச்செல்வி பக்கம் - 26

உறுதி - தமிழ்க்கவி (மொழிபெயர்ப்பு) பக்கம் - 28

மீண்டும் பூர்வீக கிராமத்திற்கு வருகை - சு.மகேந்திரன் (மொழிபெயர்ப்பு) பக்கம் - 36

நெருப்புக்காலத்தில் ஒரு துளிர் - சந்திரபோஸ் சுதாகர் பக்கம் - 40

### தொகுப்பு

நினைவுக்குறிப்பு பக்கம் - 52

மீள்பார்வை பக்கம் - 53

பதிவுகள் பக்கம் - 54

## நேர்காணல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு.கரிகாலன் அவர்களுடனான நேர்காணல்

04





## பண்பலை ஒலிபரப்பு

18






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...



"போராட்டப் பளுவை ஒரு தோளிலும்,
பொருளாதாரப் பளுவை மறுதோளிலுமாக,
உறுதி தளராது சுமந்து நிற்கும்
தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தை
நான் பாராட்டுகிறேன்."

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்

## மே 1 உலகத்தொழிலாளர் நாள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

இருபத்திமூன்றாம் ஆண்டு

மே

2004

திருவள்ளுவர் ஆண்டு 2035

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrenees,

75020 Paris.

Tel: 01 - 43 58 11 42

Fax: 01 - 43 58 11 91

e.mail:editor@erimalai.com

www.erimalai.com

# தலைவாசல்

## பயனுள்ள பேச்சுவார்த்தை

அண்மையில் பதவிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு சபாநாயகர் தெரிவில் தோல்வி கண்டபின் திடீரென்று புலிகளுடன் பேசுவதற்கு தீர்மானித்துள்ளது. அதன் அடிப்படையில் நோர்வே அரசுடன் சந்திரிக்கா தொடர்பு கொண்டுள்ளார். மனமில்லாவிட்டாலும் புலிகளுடன் பேசும் தேவை அரசுக்கு இருக்கின்றது. மேற்கு நாடுகளும் ஜப்பானும் உறுதி மொழி வழங்கிய நிதி உதவிக்கு பேச்சுவார்த்தை முன்நிபந்தனையாக போடப்பட்டுள்ளது. பேசும்படி அமெரிக்கா கட்டளை இட்டுள்ளது. இருபத்திரண்டு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசின் தலைவிதியை தீர்மானிக்கும் பலத்துடன் இருக்கின்றனர். இவர்களைத் திருப்திபடுத்த வேண்டிய தேவையும் இருக்கின்றது.

பேச்சுவார்த்தை என்றால் அது சந்திரிக்காவின் திட்டப்படி நடத்த இயலாது. ஈழத்தமிழர்களின் சுய நிர்ணய உரிமை, வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகம், ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெற வேண்டும். புலிகளே தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்ற தீர்ப்பை ஈழத் தமிழர்கள் அண்மைத்தேர்தல்கள் மூலம் வழங்கிவிட்டார்கள். புலிகளே மக்கள், மக்களே புலிகள் என்பதே தேர்தலின் முக்கிய பெறுபேறு, புலிகளுடன் மாத்திரமே பேச வேண்டும்.

ரணில் அரசின் ஆட்சிக்கலைப்புக்கு முக்கிய காரணமான புலிகள் வழங்கிய இடைக்கால நிர்வாக ஆலோசனைகள் பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலில் முதலிடம் வகிக்கவேண்டும். புலிகளின் ஆலோசனையைத் தட்டிக்கழிக்கவோ, கிடப்பில் போடவோ முடியாது பேச்சுவார்த்தை என்பது கைகுலுக்கலும், தேனீர்குடித்தலும் அல்ல. சத்தான அர்த்தமுள்ள விடயங்களைப் பேசித்தீர்ப்பதற்கே பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன. நாம் எம்மை ஆளுவதற்கு வகைசெய்யும் பேச்சுவார்த்தையே பயனுள்ள பேச்சுவார்த்தையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நேர்காணல்

## தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு.கரிகாலன் அவர்களுடனான நேர்காணல்

நேர்கண்டவர்: ஜெயா

சுவிஸ் நாட்டில் நடைபெற்ற பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்ள சுவிஸ் நாட்டிற்கு வருகை தந்திருந்த, தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. கரிகாலன் அவர்களுடன், செவ்வி காணும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது.

கருணா சம்பந்தப்பட்ட விடயங்கள் உட்பட, பல விதமான கேள்விகளோடு அவரைச் சந்தித்தோம்.

எரிமலை வாசகர்களுக்காக விரிவாகவும், ஆழமாகவும் அவர் வழங்கிய பதில்களை இங்கே தருகின்றோம்.

பணிச்சுமைகளுக்கு மத்தியில், எமக்காக நேரம் ஒதுக்கி, இந்த நீண்ட செவ்வியை தந்தமைக்காக, எமது வாசகர்கள் சார்பில், திரு. கரிகாலன் அண்ணா அவர்களிற்கு எமது நன்றிகள்.

இனி... அவருடன் நாம்..

**புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களின் உள்ளக்கிடக்கைகளை, அவர்களின் உணர்வு நிலையை அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இங்குள்ள மக்கள் தொடர்பில், நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?**

புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் ஐரோப்பாவெங்கும் பரந்து வாழ்ந்துகொண்டிருந்தாலும் தாயகத்து உணர்வோடு தமிழீழ விடுதலையை நெஞ்சத்தில் சுமந்து தாயகம், தேசியம், தன்னாட்சி இறைமை எனும் அடிப்படைக்கொள்கைகளைத் தங்களது இலட்சியமாக வரித்துக்கொண்டு தமிழ் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் காலத்திலேயே தமிழீழ இலட்சியக் கனவை நனவாக்கிவிட வேண்டும் எனும் உள்ளத் துடிப்போடு அல்லும் பகலும் அயராது உழைத்து, குடும்ப சுகங்களையும் கட்டுப்படுத்தி தங்களது முழுப்பலத்தையும் தமிழீழ விடுதலைப் போருக்காக அர்ப்பணிப்போடு செயல்பட்டுக்கொண்டிருப்பதை நேரடியாகக் கண்ணுற்று மிகுந்த பெருமிதமடைந்தேன்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*“புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் எமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பையும், பாசத்தையும். பற்றையும் பார்த்தேன். தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டபோது புலம்பெயர் தமிழ் மக்கள் கொதித்தெழுந்து தங்களது ஆவேச உணர்வை வெளிப்படுத்தி தாயக மண்ணின் பாசத்தை, பற்றை வெளிப்படுத்தியிருந்தார்கள்.”*



05.04.2004 அன்று, ஜெனீவாவில் இடம்பெற்ற பொங்கு தமிழ்ப் பேரணியில் ஐ.நா முன்றலில் திரு.கரிகாலன் அவர்கள் உரைநிகழ்த்துகிறார்

**.தாயகத்தில். பொங்குதமிழ் அனுபவங்களுக்கும். இங்கு சுவிஸ் நாட்டில் நீங்கள் கலந்துகொண்ட பொங்குதமிழ் நிகழ்வில் நீங்கள் பெற்ற அனுபவத்திற்கும் என்ன வேறுபாட்டை அல்லது ஒற்றுமையைக் காண்கின்றீர்கள்?**

தாயகத்தில் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்வானது முதன் முதலாக யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்டு மக்களின் அணிதிரட்டலோடு உணர்வுபூர்வமாக நடாத்தத் திட்டமிடப்பட்டு பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது இராணுவத்தினரதும், ஒட்டுப்படையினதும் அச்சுறுத்தல்கள், அடாவடித்தனங்களால் பொதுமக்கள் கலந்துகொள்ள முடியாது தடுப்புக் காவல்களும், பயமுறுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டது. ஆனாலும் இறுதி நேரத்தில் பொதுமக்கள் அணிதிரண்டு வந்து இராணுவ காவல்களையும் மீறி கம்பிவேலிகளைக் கடந்து பல்கலைக்கழக வளாகத்தினுள் புகுந்து பொங்குதமிழ் நிகழ்வில் உணர்வெழுச்சியோடு கலந்துகொண்டார்கள்.

தாயகத்தில் தமிழீழ மக்கள் தங்களது சொந்த நிலத்தை இராணுவ அடக்குமுறைக்கு பறிகொடுத்துவிட்டு அகதிகளாக வாழ்ந்துகொண்டிருப்பதையும் தமது சொந்த மண்ணிலேயே அகதி நிவாரணத்தில் அடிமைகளாக, அடக்குமுறைகுட்பட்டு வாழும் தமிழ் மக்கள் தங்களது தன்னாட்சி இறைமையை சொந்த மண்ணில் நின்றுகொண்டே ஆத்மார்த்தமாக வெளிப்படுத்தும் உணர்வெழுச்சியாகவே அந்தப் பொங்குதமிழ் நிகழ்வு இருந்தது. “நாங்கள் எங்கள் வீடுகளுக்குச் செல்ல இராணுவத்தினரே நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்” எனக் கோசமெழுப்பி இராணுவத்தினருக்கெதிரான தங்களது ஆக்கிரோச உணர்வெழுச்சியினை வெளிப்படுத்திக் காட்டியதன் மூலம் தமிழ் மக்களின் மண்பற்றையும், அடிமை வாழ்வின் அவலத்தின் வெளிப்பாட்டையும் கண்டோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்பொங்குதமிழ் நிகழ்வு மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, வவுனியா என விரிவடைந்து தமிழ் மக்களின் தேசிய உணர்வெழுச்சியினையும், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதையும், புலிகளே தமிழர்! தமிழரே புலிகள்! எனவும் வெளிப்படுத்திக் காட்டினர்.

புலம்பெயர் தமிழ் மக்களால் சுவிஸ் நாட்டில் நடாத்தி முடிக்கப்பட்ட பொங்குதமிழ் நிகழ்வு தங்களது சொந்தமண்ணை விட்டு அன்னிய நாட்டு மண்ணில் அகதி அந்தஸ்த்தில், அன்னிய கலாச்சார வாழ்வுக்குள் தங்கள் சுயத்தை இழந்துவிடாது சொந்த மண்ணின் விடுதலைக்காக தாயகம், தேசியம், தன்னாட்சி இறைமை எனும் அடிப்படை உரிமைகளை அடிநாதமாகக் கொண்டு சூரியத்தேவனே! எங்கள் தேசியத் தலைவன், அவர் ஒரு சுட்டெரிக்கும் சூரியன் என்பதை எல்லா மக்களும் ஒரே குரலில் உரக்கக் கூறி ஐ.நா.சபையின் அதிகாரிகளின் செவிப்பறை கிழியும் வண்ணம் பேரிரைச்சலோடு தங்கள் உணர்வலைகளை வெளிப்படுத்திக் காட்டினார்கள்.

தமிழ்த் தேசிய விடுதலைப் பேராட்டத்தைப் பிளவுபடுத்தி நசுக்க நினைக்கும் தேசவிரோத சக்திகளுக்கெதிராக புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு தேசியத் தலைவரின் கரத்தைப் பலப்படுத்த அர்ப்பணிப்போடு செயல்படுவோம் என்ற செய்தியை அனைத்துலகங்களுக்கும் ஐ.நா.சபையின் முன்னால் அணிவகுத்துக் காட்டினார்கள்.

புலம்பெயர்வாழ் தமிழ் மக்கள் தங்கள் வசதியான வாழ்வுக்கும் அப்பால் சொந்த மண்ணின் பாசத்தையும், பற்றையும், தேசிய உணர்வையும், தேசிய தலைமையையும் நேசிக்கும் உணர்வுபூர்வமான உள்ளத்து உணர்வுகளை சுவிஸ் நாட்டு பொங்குதமிழ் மூலம் வெளிப்படுத்தி எல்லோரையும் புல்லரிக்க வைத்துவிட்டதை பெருமிதத்தோடு உணர்ந்தேன்.

**கருணாவினால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினை, இவ்வளவு நுட்பமாக, அதிலும் விரைவாக, பொதுமக்களுக்கோ போராளிகளுக்கோ பாதிப்பு ஏற்படாமல் தீர்க்கப்பட்டிருப்பது தமிழீழ மக்களுக்கெல்லாம் பெரும் மனநிம்மதியை ஏற்படுத்தியிருக்கிறது. சர்வதேச ஊடகங்கள், சிங்கள ஊடகங்கள் பெரும் அனர்த்தம் நிகழப்போவதாக இது தொடர்பில் செய்திகளை, கட்டுரைகளை வெளியிட்டிருந்தபோதும், இப்பிரச்சனை விரைவாகவும், பாதிப்புக்கள் இன்றியும் தீர்க்கப்படும் என விடுதலைப் புலிகள் ஆரம்பத்தில் அறிவித்தது போன்றே அதனைச் சாதித்தும் காட்டியிருக்கிறார்கள். வெளியாரின் கணிப்பீடுகளுக்கு முற்றிலும் மாறாக, இந்த உத்தரவாதத்தை தெரிவிக்கவும், அதனைச் செய்து முடிக்கவும் விடுதலைப் புலிகளால் எப்படி முடிந்தது?**



ஜெனீவாவில் பொங்கு தமிழ்ப் பேரணி நடைபெற்ற தினத்தன்று காலையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பங்குபற்றுகின்றார் திரு.கரிகாலன் அவர்கள்

கருணாவினால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினையென்பது அவரது தனிப்பட்ட பலவீனங்களை மூடிமறைத்து தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகத் தன்னை ஒரு பிரதேச வாதியாக தளபதிகளுக்கும், போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் காட்ட முனைந்தார்.

இவரது பிரதேசவாதத்துக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து விலகித் தனித்துச் செயல்படும் முடிவுக்கும் துணைபோகாது பல முக்கிய தளபதிகள் தேசியத் தலைவர் அவர்களின் அழைப்பை ஏற்று வன்னிக்குச் சென்றனர்.

மட்டு-அம்பாறை மக்களையும் இவரது பிரதேச வாதத்திற்கு பலாத்காரமான முறையில் ஈடுபடுத்த முயன்றும் மக்கள் அவரது முயற்சிக்குத் துணைபோகவில்லை. போராளிகளும் ஆயுதமுனையில் அச்சுறுத்தப்பட்டு சூழ்நிலைக் கைதிகளாக்கப்பட்டிருந்தனர்.

கருணா தொலைக்காட்சிகளுக்கும், பத்திரிகைகளுக்கும் விடுத்த செய்திகள் முன்னுக்குப் பின் முரணாகவும், பயத்தின் காரணமாக தன்னை ஒரு பலசாலியாக காட்டிக்கொள்ள மேற்கொண்ட ஆயுதக் கண்காட்சியும், அறிவிப்புக்களையும் கொண்டு எமது தேசியத் தலைவர் அவர்கள் கருணாவின் முடிவு எவ்வாறு இருக்கும் என்பதை துல்லியமாகக் கணித்து வைத்திருந்தார்.

இதனால்தான் கருணாவினால் முன்னெடுக்கப்பட்டுள்ள பிரச்சினை எமது இயக்கத்தினுள் ஏற்பட்ட பிரச்சினை என்றும், இதற்கு விரைவில் போராளிகளுக்கு பாதிப்புகளின்றி விரைவில் தீர்க்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்.

கருணாவிடமிருந்து தப்பிவரமுடியாது அவர்களின் விருப்பத்துக்குமாறாக காவலரண்களில் நிறுத்தப்பட்ட போராளிகளைப் பாதுகாக்கும் நோக்கில் தாக்குதல் வியூகங்களை அமைத்துக் கொடுத்தார். போராளிகளைப் பத்திரமாக மீட்டெடுப்பதற்கான பாதையைத் திறந்து ஒரு பயமுறுத்தல் தாக்குதலையை நடாத்துமாறு பணித்திருந்தார்.

தாக்குதலுக்குத் தயாராக இருந்த தளபதிகளும், போராளிகளும் கருணாவின் பிரதேச வாதத்திற்கு துணைபோகாது, ஒரு சகோதர யுத்தத்தை விரும்பாது விடுதலைப் புலிகளோடு வந்து இணைந்து கொண்டனர். கருணா தப்பி ஓடிவிட்டார். தேசியத் தலைவர் அவர்களின் கணிப்பும், நடவடிக்கையும் சரியாகவே இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கருணாவின் துரோகத்தனத்தை கண்டிக்கும் வகையில் வன்னியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் திரு.கரிகாலன் அவர்கள். கூட இருப்பவர் விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் அவர்கள்

**இப்பிரச்சினை நடந்த காலகட்டங்களில், தலைவரின் அருகிருந்திருக்கிறீர்கள். கருணாவின் பிடியில் இருந்து ஒருவாறு தப்பி வன்னி சென்ற நீங்கள், தலைவரை சந்திக்கின்றபோது தலைவரின் மனோநிலை எப்படியிருந்தது. இப்பிரச்சினை தலைவரிடத்தே எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது?**

நான் தலைவர் அவர்களிடம் வந்து சேரும் முன்னர் பல தளபதிகள் தலைவரிடம் வந்து அங்குள்ள நிலைமைகளைத் தெளிவுபடுத்தி இருந்தார்கள். நான் சந்தித்தபோது நீங்கள் இவ்வளவு பேரும் வந்தது எனக்குப் போதும். இனிமேல் நான் நடவடிக்கை எடுப்பேன் என சிரித்துக்கொண்டே நிமிர்ந்து நின்றார். கருணாவின் செயற்பாடுகள் பற்றியும், ஏன் இவ்வாறு செய்தார் என்றும் தலைவர் அவர்களால் நம்பமுடியாமல் இருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. "நான் பல துரோகத்தனங்களைச் சந்தித்திருக்கிறேன். துரோகிகளுக்கு என்ன தண்டனை என்றும் எனக்குத் தெரியும். ஆனால் ஒரு விசரனுக்கு என்ன தண்டனை என்று இனிமேல்தான் தீர்மானிக்கப் போகிறேன்" என சிரித்துக்கொண்டே தலைவர் அவர்கள் தெரிவித்தபோது கருணாவின் துரோகத்தனம் எமது விடுதலைப் போராட்டத்தையோ, தேசியத் தலைமையையோ எந்த விதமான பாதிப்பையும் ஏற்படுத்தி விடப்போவதில்லை என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

**கருணாவினால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினை, திடீரென தோற்றம் கொண்டதாகக் கருத முடியாது. இதற்கு நீண்ட காலத் திட்டம் இருந்திருக்கக்கூடும் என்ற கருத்து நிலவுகிறது. அதற்கான அறிகுறிகள் ஏற்கனவே தெரிந்ததா? இதற்குப் பின்னணியில் இனங்காணக்கூடிய சக்திகள் இருந்தனவா? இந்தப் பிரச்சினையை சிங்களத் தரப்பு எப்படி கையாள எண்ணியது?**

கருணாவினால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினை நீண்டகாலமாகத் திட்டமிடப்பட்டிருந்ததாக கருதமுடியாது. ஏனெனில் அவரது இறுதி முடிவு அத்தகைய ஒரு பின்புல உறுதிப்பாட்டோடு செயல்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. கருணா கடந்த காலங்களில் மட்டு-அம்பாறை படையணிகளுடன் நின்று செயற்பட்டவர். அதிகமான காலப் பகுதியை காடுகளுக்குள் படையணிகளை ஒழுங்குபடுத்துவதிலும், அவர்களுக்கான கல்வி, பயிற்சி, தங்குமிட வசதிகளான அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வதற்கான திட்டங்களை வகுத்துச் செயற்படுவதிலேயே அதிகமான நேரத்தை செலவு செய்து வந்தார்.

இந்த சமாதான காலத்தில்தான் அவர் வெளியில் வந்து மக்களைச் சந்திக்கவும், பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள கிழக்காசிய நாடுகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று பல அறிமுகங்களைத் தேடிக்கொண்டார். இந்தக் காலப்பகுதிக்குள்தான் ஸ்ரீலங்கா இராணுவத்தின் நெருங்கிய தொடர்புகளும் பேச்சுவார்தைகள் மூலமாகக் கிடைத்தது.

இதைத்தவிர வேறு எந்தப் பின்புல சக்திகளும் இவரின் பின்னணியில் நின்று செயற்பட்டதற்கான எந்த அறிகுறிகளையும் அவர் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

கருணாவின் தனிப்பட்ட மோசடிகளும், பலவீனங்களும் தேசியத் தலைமைக்குத் தெரியப்படுத்தப்பட்ட பின்னர் அவசர அவசரமாகப் படைகளை களநிலைத் தளபதிகளோடு ஒழுங்குபடுத்தி முக்கிய தளபதிகளையெல்லாம் தூர விலக்கிவைத்து தனக்கு நம்பிக்கையானவர்களுக்கு மாத்திரம் தனது முடிவைத் தெரிவித்து தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

பிரதேசவாதத்தை போராளிகளுக்கு ஊட்டுவதற்கும் அரச அதிகாரிகளைப் பயன்படுத்திக்கொண்டார். இராணுவ உயர் அதிகாரி பலேகல்லவுடன் அடிக்கடி தொடர்புகளை வைத்துக்கொண்டார்.

இதனைத் தவிர தளபதிகளையோ, போராளியையோ ஒரு நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில் உள்வாங்கப்பட்டுத் தயார்படுத்தப்பட்ட அவரது முடிவுக்கு இறுதிவரை நின்று செயற்படக்கூடியவாறு விசுவாசமாக இருக்கவில்லையென்பதை அவரது இறுதி முடிவு எடுத்துக்காட்டுகிறது.

கருணாவைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் இயக்கத்தை இரண்டாகப் பிளவுபடுத்தி விடலாம், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை இல்லாமல் செய்துவிடலாம், இருதரப்பாகப் பேச்சுவார்த்தை நடாத்தப்படவேண்டும் என சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக்காட்டலாம் எனும் திட்டத்துடன் ஸ்ரீலங்கா இராணுவம் பின்னணியில் இருந்து செயற்படுத்தியது.

இறுதியில் கருணா மட்டு-அம்பாறை மாவட்டத்தை தக்கவைத்துக்கொள்ள முடியாத நிலையில் தப்பி ஓடி ஸ்ரீலங்கா இராணுவத்திடமே தஞ்சமடைந்து அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு எதிரான முடிவை ஏற்படுத்தியிருக்கின்றார்.

**தமிழர் தரப்பு தேசியத் தலைவருக்குப் பின்னால் ஓரணியில் நின்றது என்ற அழுத்தமான செய்தி உரைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்தேசியம் ஒன்றுபட்டு தனது அபிலாசைகளை சனநாயக வழிமுறை மூலம் தெரியப்படுத்தியிருக்கின்றது. தமிழ்த் தேசியத்திற்குள் பிளவை ஏற்படுத்த முனைந்த பிரதேசவாதப் பேய் விரட்டப்பட்டிருக்கின்றது. எல்லா வகையிலும் தன்னைப் புடம்போட்டு அசைக்க முடியாத மாபெரும் சக்தியாக தேசியத் தலைவருக்குப் பின்னால் அணிதிரண்டிருக்கின்ற தமிழ்த் தேசிய இனம், சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சனைக்கு தீர்வொன்றைக் காண காத்திருக்கின்றது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> "'தாயகம், தேசியம், தன்னாட்சி இறைமை எனும் தாரக மந்திரத்தில் தளராத உறுதியோடு தலைவரின் பின்னால் அணிவகுத்து நிற்கின்றோம்' எனக் கூறுமாறு, புலம்பெயர் தமிழ் மக்கள் கூறிய செய்தியை என் மனதில் சுமந்து செல்கிறேன்"



**ஆனால், சிங்களம் இதற்கு இணங்குமா?**

தமிழீழ மக்கள் தமிழ் தேசியத்தைப் பிரதேசவாதப் பேய்களின் பிடியிலிருந்து பாதுகாத்து, தமிழ் தேசியத் தலைமையை ஏற்று, விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதையும் வலியுறுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக்காண சனநாயக வழியில் தமிழ் மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை நடைபெற்று முடிந்த தேர்தல் மூலம் சிங்கள அரசுக்கும், அனைத்துலக சமூகத்திற்கும் அழுத்திக் கூறியிருக்கின்றார்கள். ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சி பீடத்தை அமைத்திருந்தாலும் இருவேறு துருவங்களாகப் பலமிழந்த நிலையில் சனாதிபதி சந்திரிக்கா விடுதலைப் புலிகளோடு பேச்சுவார்த்தை நடாத்த தயாராக இருப்பதாக நோர்வே அரசுக்கு அறிவித்துள்ளார். இதய சுத்தியோடு தமிழ் மக்களின் ஆணையை, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையினை அமுல்படுத்த இணங்குவாரா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

**சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி கூட்டணி ஆட்சி நிலைக்குமா? இந்த ஆட்சி சமாதான முயற்சிகளில் எத்தகைய சாதக பாதக நிலைகளைத் தோற்றுவிக்கும்?**

சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி கூட்டணி ஆட்சி நாடாளுமன்ற அவையின் சபாநாயகர் தேர்விலேயே தங்கள் பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க முடியாது பலத்த இழுபறிக்கு மத்தியில் எதிர்க்கட்சிக்கு தாரைவார்த்துவிட்டு முதல் கோணலைச் சந்தித்து நிற்கிறது.

ஜே.வி.பியின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களான காணி, நீர்ப்பாசன விவசாய கால்நடை அமைச்சு, மீன்பிடி நீர்வள அமைச்சு, சிறிய கிராமிய பொருளாதார அமைச்சு, கலாச்சார தேசிய உரிமைகள் அமைச்சுக்களையும், பிரதி அமைச்சுக்களையும் சந்திரிகா தானம் செய்துவிட்டு பிச்சைப் பாத்திரத்தோடு நிற்கிறார்.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் சமர்பிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபையினை ஏற்றுக்கொள்ளப்போவதில்லையெனக் கூறிய ஜே.வி.பி. யும், பண்டா-செல்வா ஒப்பந்தமூலம் தமிழ் மக்களுக்கான நிரந்தர தீர்வைக்காண முனைந்த சந்திரகாவின் தந்தையை சுட்டுக்கொன்ற பௌத்த பிக்குகள் போதிமரத்தை விட்டு எழுந்து வந்து பாராளுமன்ற அரியாசனத்தில் அமர்ந்திருக்கும்போது, தமிழ் மக்களுக்கான தீர்வு யோசனையைத் துணிவோடு பேசித்தீர்க்க முன்வருவாரா? என்பதும் கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது.

சனாதிபதி சந்திரிகாவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணிலும் பேசிக்கொண்டதற்கிணங்க ஒரு தேசிய நல்லிணக்க சபையினை நிறுவி பிரதமர் சந்திரிகா 1994 ஆம் ஆண்டு தமிழீழத்தில் ஆரம்பித்துவைத்த சமாதானப் பேச்சுவார்த்தையை சனாதிபதி தனக்குள்ள இரண்டாண்டு கால ஆட்சிக் காலத்திற்குள் தமிழ் மக்களின் நிரந்தரத் தீர்வுக்கான முன் முயற்சியாக தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான திட்ட வரைவை அனைத்துலகங்களின் அனுசரணையோடும், அனைத்து சிங்கள, தமிழ், முஸ்லீம் அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தோடும், சிங்கள மக்களின் ஆசீர்வாதத்தோடும் அமுல்படுத்த உறுதிபூணுவாராக இருந்தால் இந்த நூற்றாண்டின் இணையற்ற சமாதானத் தலைவியாக உலக மக்கள் அனைவராலும் ஏற்றுப், போற்றிப் புகழப்படும் ஒரு பெரும் தலைவியாக வரலாற்றில் பதியப்படுவார்.

புத்த தர்மத்தின் உண்மையான காருண்யத்தை உலகெங்கும் போதிக்கும் பெருமைக்குரியவாராக பௌத்த மக்கள் வணங்கி நிற்பார்கள்.

இதனைவிடுத்து சந்திரகாவுக்கு இருக்கும் சனாதிபதி பதவியின் இறுதி இரண்டாண்டு காலத்தை சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இழுத்தடிக்க நினைப்பாராக இருந்தால் மக்களுக்குள் ஊடுருவிப் பணிசெய்து ஆதரவைத் திரட்டவல்ல முக்கிய அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்டுள்ள ஜே.வி.பி. கட்சி அடுத்த தேர்தலில் அமோக வெற்றியீட்டி ஸ்ரீலங்கா அரசியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடக்கிவைப்பார்கள்.

தமிழீழ மக்களும் பிரிந்துசென்று தனியரசை அமைப்பதைத் தவிர வேறுவழி இல்லையெனும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

**இறுதியாக, எரிமலை இதழ் வாயிலாக புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**
**அதேவேளை, இந்த மக்களிடம் இருந்து தேசியத் தலைவருக்கு என்ன செய்தியைக் கொண்டு செல்கிறீர்கள்?**

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு இந்த எரிமலை இதழ் வாயிலாக நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் தங்கள் உள்ளத்து உணர்வுகளை அவ்வப்போது நடைபெறும் பொதுநிகழ்வுகளில் வெளிப்படுத்திக் காட்டுவதுபோன்று எழுத்து வடிவிலும் தங்கள் ஆற்றலை இந்த எரிமலை இதழின் வாயிலாக வெளிப்படுத்தி அனைத்துலக மக்களினதும் அறிவினையும், உணர்வினையும் வாசிப்பினூடாக வலுப்படுத்துவதற்கு முன்வரவேண்டும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆயுத முனைக்குச் சமமாக பேனா முனையாலும் புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் தேசிய விடுதலைப் போரையும், தேசியத் தலைமையையும் பாதுகாத்து, பலப்படுத்தி, வலுப்படுத்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் எமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் மீது கொண்டுள்ள அளவற்ற அன்பையும், பாசத்தையும். பற்றையும் பார்த்தேன். தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டபோது புலம்பெயர் தமிழ் மக்கள் கொதித்தெழுந்து தங்களது ஆவேச உணர்வை வெளிப்படுத்தி தாயக மண்ணின் பாசத்தை, பற்றை வெளிப்படுத்தியிருந்தார்கள். 'தாயகம், தேசியம், தன்னாட்சி இறைமை எனும் தாரக மந்திரத்தில் தளராத உறுதியோடு தலைவரின் பின்னால் அணிவகுத்து நிற்கின்றோம்' என கூறுமாறு கூறிய செய்தியை என் மனதில் சுமந்து செல்கிறேன். (முற்றும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமாதானம்

பிரியா ஜெயக்குமார்

அளவுக்கதிகமான
குங்குமம் குழைத்து
திலகமிட்டு
மகிழ்கிறது வானம்
தெறித்துப் பறந்த குங்குமச்
சிதறலில் சிக்குண்டு
ரணகளமாகி பிரிந்து
விரையும் முகில்கள்
அலைந்தலைந்தே மடிகிறது
சற்று நேரத்தில்
ஆழிவாய் இறங்கா
முங்கியெழும் வானம்
திலகம் கரைந்து
இரவுடன் புணர
ஜனித்து பின் உயிர்க்கும்
மூன்றாம் பிறை
நம்பிக்கையின் நாள்பட்ட
சிறு கீற்றைப் போல.

உள்ளங்கை பார்த்து
பிறை முகம் நோக்கும்
என் விழிகள்
அறிந்திருந்தும்
அற்பமென அதன்
ஆயுள்
ஆதலினால்
அஸ்தமனங்களை சபித்து
உதயங்களுக்காகவே
காத்துக் கொண்டிருக்கிறேன்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




மனித உரிமைகளுக்கான தமிழர் மையம்
(Tamil Centre For Human Rights)

# ஐ.நாவில் தமிழர் மனித உரிமை

(ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 60வது கூட்டத்தொடருக்கு வெளியிட்டுள்ள அறிக்கை பற்றிய ஒரு மதிப்பீடு)

கலாநிதி க.சோமாஸ்கந்தன்

தனது தலைமைச் செயலகத்தை பிரான்ஸ் தலைநகர் பாரிசில் கொண்டுள்ள மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் (Tamil Centre For Human Rights) 1990 இல் நிறுவப்பட்டது.

ஒரு அரச சார்பற்ற அமைப்பாக பதிவுசெய்யப்பட்ட இந்த மையம் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் ஜெனிவா அமர்வுகளிலும் ஐ.நா ஆதரவில் நடைபெறும் உலகளாவிய மனித உரிமை மாநாடுகளிலும் பங்குபற்றுகின்றது. அவ்வப்போது மனித உரிமைகள் சம்மந்தமான அறிக்கைகளையும், நினைவூட்டல்களையும், தேவைப்படின் கண்டனங்களையும் மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் வெளியிட்டு வருகின்றது.

இனப்பாகுபாடுகளுக்கு எதிரான ஐ.நாவின் 2001 வருட அமர்வுகள் அவ்வருட ஆகஸ்ட் 28 தொடக்கம் செப்டெம்பர் 01வரை தென்னாபிரிக்கா நாட்டின் டேர்பன் நகரில் நடைபெற்றன. அவ்வமயம் மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் ஒரு அங்கீகாரம் பெற்ற அரச சார்பற்ற நிறுவனமாகப் பங்குபற்றியது. இந்த மையம் வழங்கிய ஒத்துழைப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. அமர்வுகள் நடைபெற்ற ஐந்து நாட்களின்போது அது ஒரு தகவல் மற்றும் காட்சி அரங்கை அவ்விடத்தில் நடத்தியது.

ஐ.நா ஆதரவோடு உலகளாவிய மனித உரிமைகளுக்கான மாநாடு அவுஸ்திரியா தலைநகர் வியன்னாவில் 2003 ஜுன் 14-25 நாட்களில் நடைபெற்றது. இதன்போது மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் ஒரு தகவல் அரங்கையும் புகைப்படக் கண்காட்சியையும் அங்கு நடத்தியது. ஈழத் தமிழர்கள் மீது சிறீலங்கா ஆயுதப் படைகளால் நடத்தப்படும் மனித உரிமை மீறல்களையும் பலதரப்பட்ட வன்முறைகளையும் இப்புகைப்படக் கண்காட்சி பார்வையாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் (UN HUMAN RIGHTS COMMISSION) 60ஆம் அமர்வுகள் 15.03.2004 தொடக்கம் 23.04.2004 வரை ஐ.நாவின் ஜெனிவாக் கட்டிடத் தொகுதியில் நடைபெற்றன. அதில் மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் பங்குபற்றியதோடு காத்திரமான அறிக்கையையும் வெளியிட்டது. தமிழர்களின் உரிமைக் கோரிக்கை பற்றிய விடயங்களுடன் தென்பகுதியில் சிங்கள பௌத்த அடிப்படைவாதிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிறீஸ்த்தவ தேவாலயங்கள் மீது நடத்தும் தாக்குதல்கள் பற்றிய விவரங்களும் இவ் வறிக்கையில் இடம்பெற்றன.

அறிக்கையின் முகப்புரையில் பொதுச் செயலாளர் திரு ச.வி. கிருபாகரன் பின்வருமாறு மனுச் செய்துள்ளார். சென்ற வருடம் (2003) தமிழர் மையத்தின் பிரதிநிதிகள் தமிழர் கூடுதலாக வதியும் வடக்கிற்கு(சிறீலங்கா) ஏப்பிரல், டிசெம்பர் மாதங்களில் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டனர். அவர்கள் சேகரித்த முக்கிய தகவல்கள் இவ்வறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன. தமிழர் வாழும் பகுதிகளில் நிலவும் தட்டுப்பாடுகளும், நிலக்கண்ணி ஆபத்தால் மக்கள் எதிர்நோக்கும் நாளாந்திரப் பிரச்சினைகளும் அவ்வறிக்கையில் இடம்பெறுகின்றன. தமிழர்களுக்கான அரசியல் தீர்வின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் தமிழர் மையப் பொதுச்செயலாளர் தனது மனுவில் வலியுறுத்தியுள்ளார்.

பொதுச்செயலாளர் மனுவாக சமர்ப்பித்த அறிக்கையின் முக்கிய அம்சங்களாவன.

**(1) தமிழீழ விடுதலைப் புலிகள் நோர்வே மத்தியஸ்த்தர்கள் ஊடாகச் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக ஆலோசனைகள்:** ஆலோசனைகளின் முழுப்பிரதியும் அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளது. அத்தோடு அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் இது சம்மந்தமாக தெரிவித்த ஆக்கபூர்வமான கருத்துக்களும் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. சிறீலங்காவில் நிலவும் கட்சி அரசியலை அமெரிக்காவின் பேராசிரியர் ஒபேர்ஸ்ற் (Prof. Oberst) மிகவும் துல்லியமாக இனங்கண்டு விமர்சித்துள்ளார். மாறிமாறி பதவிக்கு வந்த அரசுகள் தமிழர்களுடன் பேசுவதும், முன்பு பேச்சில் ஈடுபட்ட இப்போதைய எதிர்க்கட்சி பேச்சுக்கு பேச்சுக்கு முட்டுக்கட்டை போடுவதுமாக இந்நாட்டின் சோகவரலாறு இடம்பெறுவதை பேராசிரியர் ஒபேர்ஸ்ற் ஆய்வு செய்துள்ளார்.

ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனான், ஐரோப்பிய ஒன்றியச் செயலாளர் ஆகியோர் தெரிவிக்கும் கருத்துக்களும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. அரசு பேச்சில் ஈடுபடும் அதே வேளையில் தனது ஆயுதப்படைகளுக்கு ஆட்சேர்ப்பில் ஈடுபடுவதை எதுவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது என்று திரு.கிருபாரகன் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைத் தீவில் இருநாடுகளும், நாடுகளுக்குரிய தனித்தனி நிர்வாக அமைப்புக்களும், சட்ட ஒழுங்கமைப்புக்களும் இருப்பதை தனது அறிக்கை மூலம் அவர் சர்வதேச சமூகத்திற்கு மீண்டுமொருமுறை நினைவூட்டியுள்ளார். இலங்கைப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு மாத்திரமே பொருத்தமானது என்று இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**(2) பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் பற்றிய நிலவர அறிக்கை:** மதம் சார்ந்த விடயங்கள். புலிகள் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக ஆலோசனைகளின் 5ம் சரத்து "வட கிழக்கில் ஒரு மதத்திற்கேனும் மேலிடம் வழங்கப்பட மாட்டாது"' என்று கூறுகின்றது. பூரண மதச் சுதந்திரம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிலவுகின்றது. 1972இல் பிரகடனப்படுத்தப்பட்ட சிறீலங்கா அரசியல் சாசனமும் அதைத் தொடர்ந்து 1977இல் வெளிவந்த இப்போதைய ஜனாதிபதி முறை அரசியல் சாசனமும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குகின்றனர்.

மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் திரட்டிய தரவுகளின்படி கடந்த இருபது வருடமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக வட கிழக்கிலுள்ள 2076 இந்துக் கோவில்களும் 299 கிறீஸ்த்தவ தேவாலயங்களும் குண்டுவீச்சு மூலம் அழிக்கப்பட்டுள்ளன. இதற்கு மறுவளத்தில் அரசுக்குச் சொந்தமான நிலங்களிலும், தனியார் நிலங்களிலும் புத்த மதக் கோயில்கள் அரச செலவில் துரித வேகத்தில் நிறுவப்படுகின்றன. ஜனவரி 01, 2004 இல் மூன்றாம் கட்டை, முள்ளியடி, திருகோணமலையைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான வேதவனம் வைத்திலிங்கம் என்பார் இலங்கை மனித உரிமை ஆணையத்திற்கு தனது நிலம் அபகரிக்கப்படுவதைப் பற்றி முறைப்பாடு செய்துள்ளார். 1990 தொடக்கம் தனக்குச் சொந்தமான நிலத்தில். இராணுவத்தினர் ஒரு புத்த கோவிலை அமைத்து வழிபட்டு வருகின்றனர். இப்போது எனது நிலத்தின் பெரும்பகுதியை நிரந்தரமாக ஆக்கிரமிக்கும் நோக்குடன் ஒரு பாரிய புத்த கோவிலை நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளனர். இது அப்பட்டமான உரிமை மீறலாகும்.

அண்மைக்காலமாக புதியதோர் ஆபத்து சிங்களவர் வாழும் பகுதித் தேவாலயங்களுக்குத் தோன்றியுள்ளது. புத்தத் துறவிகள் தலைமையில் கிளம்பியுள்ள கும்பல்கள் கிறீஸ்த்தவ வழிபாட்டு இடங்கள் மீது கற்கள் வீசுதல், தீ வைத்தல், விக்கிரகங்களை உடைத்தல் போன்ற நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். பொலிஸ் படையினர் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை. மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் திரட்டிய தரவுகளின் படி 89 கிறீஸ்த்தவ தேவாலயங்கள் மீது பாரதூரமான தாக்குதல்கள் ஒரு சில மாத இடைவெளிக்குள் நடைபெற்றுள்ளன. கொட்டதெனியாவா என்ற தென்பகுதி சிறுநகரிலுள்ள கிறீஸ்த்தவ தேவாலயத்தை தாக்கிய கும்பல்கள் நான்கு தேவாலய பெண் பணியாளர்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சி செய்துள்ளார்.

**(3) இராணுவம் அமைத்துள்ள யாழ் குடாவின் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள்:** இத்தகைய பாதுகாப்பு வலயங்கள் காரணமாக 19920 பொதுமக்களுக்குச் சொந்தமான வீடுகள் வலயங்களுக்குள் அகப்பட்டுள்ளன. இங்கு மீளக்குடியமர முடியாதவாறு இராணுவம் தடைகளைப் போட்டுள்ளது இதன் காரணமாக 18736 தமிழ்க் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பொருளாதார நட்டங்கள் பல கோடிகளைத் தாண்டுகின்றன. போர் நிறுத்தம் ஏற்பட்டு இருவருடங்கள் சென்று விட்டாலும் மக்கள் இன்றும் அகதி முகாம்களில் வாழுகின்றன. அதே சமயத்தில் சிங்கள மக்களைத் துரிதகதியில் குடியேற்றம் செய்வதற்கு இராணுவம் சிறந்த ஒத்துழைப்பு வழங்குகின்றது. பாரம்பரிய தமிழ்க் கிராமமான முல்லைத்தீவு மாவட்டத்தின் நெலுக்குளத்திற்கு தெற்கில் இருந்து கொண்டு கொண்டு வரப்பட்ட சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

**(4) பாதை திறப்பின் தாக்கம், வன்னியில் விலைவாசி உயர்வு:** மரக்கறி போன்ற உணவுப் பொருள்கள் யாழ் குடா நாடு, வவுனியா சந்தைகளுக்கு எடுத்துச் செல்லப்படுவதால் வன்னிப்பிரதேசத்தில் விலையேற்றம் காணப்படுகின்றது. கடலுணவு கிடைப்பதற்கு அரிதாகியுள்ளது. முன்பு ஒரு கிலோ 80 ரூபாவாக விற்கப்பட்ட மீன் இப்போது 150 ரூபாவை எட்டியுள்ளது. இது இரட்டிப்பு விலையாக இடம்பெறுகின்றது. பொருளாதார வசதி குறைந்த வன்னி மக்களால் ஈடுசெய்யமுடியாத அளவிற்கு உணவுப் பொருட்கள் யாவும் விலையேறிவிட்டன.

**(5) நிலக்கண்ணி ஆபத்து தொடர்கின்றது:** மனித உரிமைகளுக்கான தமிழர் மையத்தின் பிரதிநிதிகள் கண்ணிகள் நெருக்கமாகப் புதைக்கப்பட்ட பகுதிகளையும், நிலக்கண்ணி அகற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பணி நடைபெறும் இடங்களையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். தமிழர் மையம் திரட்டிய தரவுகளின் புள்ளி விபரங்கள் இங்கு சுருக்கித் தரப்பட்டுள்ளது.

| மாவட்டம் | பாதிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை | நிலக்கண்ணி அகற்றப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை | குடியேறக் காத்திருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 93 | 12 | 19,314 |
| முல்லைத்தீவு | 127 | 21 | 6,767 |
| கிளிநொச்சி | 92 | 30 | 6,408 |
| வவுனியா | 75 | 14 | 3,606 |
| மன்னார் | 38 | 02 | 1,408 |
| திருகோணமலை | 07 | 02 | கிடைக்கவில்லை |

நிலக்கண்ணி அகற்றும் பணிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஒரு முக்கிய பகுதியான மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு மிகவும் தீவிரமாக ஈடுபடுகின்றது. நிதிஉதவிகளை நோர்வே அரசு வழங்குகின்றது.

தமிழர் பகுதியில் நிலக்கண்ணி அகற்றும் பணிகளில் ஈடுபடும் பிற அரச சார்பற்ற நிறுவனங்களின் பட்டியல் அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளது.

* நோர்வே மக்கள் நடவடிக்கைக் குழு - Norwegian People's Action (NAP)
* பிரித்தானியாவின் மெக் நிறுவனம்- MAG
* அமெரிக்க ராணுவ ஆதரவுபெற்ற றொன்கோ (RONCO)
* ஐ.நா மேம்பாட்டுத் திட்ட அமைப்பு(UNDP) ஆதரவு பெற்ற மைன் ரெக் (Mine Tech)
* சர்வதேச அமைப்பான கேலோ நிதியம் (HALO TRUST)

நவம்பர் 2003இல் டென்மார்க் நாட்டின் கண்ணி அகற்றும் நிறுவனத்தினர் யாழ் குடாவின் கரையோரக் கிராமமான கற்கோவளத்தில் பணியில் ஈடுபட்ட வேளையில் பணியை நிறுத்தும்படி சிறீலங்கா இராணுவம் உத்தரவிட்டது. இதற்கமைவாக அந்த நிறுவனம் வெளியேறிவிட்டது. பின்பு சில நிபந்தனைகளோடு பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டதால் அது மீண்டும் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுகின்றது.

டிசம்பர் 2003இல் புதிதாக நிலக்கண்ணிகளைப் புதைக்கும் பணிகளை யாழ் குடாவின் தென் - கிழக்கு கரையோரக் கிராமமான மணல்காட்டில் இராணுவம் ஆரம்பித்தது. இதற்கு மணல்காட்டு கிராமத்தினர் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர். டிசம்பர் 09, 2003ல் மணல்காட்டு மக்கள் இலங்கை மனித உரிமை ஆணையம் யாழ் கிளையில் இது சம்மந்தமான முறைப்பாடுகளைச் செய்தனர். அதற்கு முன்னரே அவசர அவசரமாக புதைக்கப்பட்ட கண்ணிகளை இராணுவம் அகற்றிவிட்டது.

**மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் விடுக்கும் சில கோரிக்கைகள்:**

* யாழ் குடாவில் இராணுவத்தினரால் கைதாகிய பின் காணமற்போனோர் பிரச்சினைக்கு இன்றுவரை முடிவு காணப்படவில்லை. 651க்கும் மேலானோர் சிறீலங்கா இராணுவம் யாழ் தீபகற்பத்தை கைப்பற்றிய பின் காணமற் போயுள்ளனர். இது பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணையங்கள் தீர்ப்புக் கூறாமல் தட்டிக் கழித்துள்ளன. ஆணையங்கள் அரசினால் நியமிக்கப்படுவதால் மூடிமறைத்தல் முதற் குறியாக இருக்கின்றது. செம்மணியில் புதைக்கப்பட்ட தமிழர்கள் பற்றிய விவகாரம் முடிவுக்கு வரவில்லை. சர்வதேச சமூகம் இதில் தகுந்த கவனம் எடுக்க வேண்டுமென தமிழர் மையம் கோரிக்கை விடுகின்றது. அனைத்துலக அபய ஸ்தாபனம் 1997இல் வெளியிட்ட அறிக்கைப்படி இராணுவம் கைப்பற்றிய யாழ். குடாவில் 600 தமிழர்கள் காணாமற்போயுள்ளனர். இவர்கள் 'படுகொலை செய்யப்படுமுன் கடும் சித்திரவதைக்கு உள்ளாகினர்' என்று அபய ஸ்தாபன அறிக்கை கூறுகின்றது.

* கிளிநொச்சியில் இராணுவம் நிலைகொண்டிருந்த காலத்தில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற தமிழர்கள் கண்ட மாத்திரத்தில் சுட்டுக்கொல்லப்பட்டனர். மலசலக்கூடக் குழிகள், கைவிடப்பட்ட கிணறுகள் போன்றவற்றிலிருந்து சடலங்கள் இன்றும் மீட்கப்படுகின்றன.

* மனித உரிமை மீறல்களுக்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை சிறீலங்கா அரசோ அதன் இராணுவமோ இதுவரை எடுக்கவில்லை. இராணுவத்தினரின் அத்துமீறல்களை மூடி மறைப்பதையே அரசு குறியாகக் கொண்டுள்ளது. செம்மணிப் படுகொலைகளுக்கு அரியாலையில் முகாமிட்டிருந்த இராணுவத்தினரும், கிளிநொச்சிப் படுகொலைகளுக்கு இந்த மாவட்டத்தை 1996 - 1998 காலப்பகுதியில் ஆக்கிரமித்திருந்த இராணுவத்தினரும் பொறுப்பாவர். எனினும் இதுவரை விசாரணைகள் நடைபெறாத காரணத்தால் தண்டனை பற்றிய பேச்சுக்கு இடமில்லாது போய்விட்டது.

* சிறீலங்காவின் சிறைச்சாலைகளில் விசாரணையின்றி 76அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்களும் சிறுவர்களும் அடங்குவர். இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும். அல்லது இவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

இவ்வறிக்கையில் மனித உரிமைகளுக்கான தமிழர் மையம் மறைந்த ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் மறைவுக்கு அஞ்சலி செலுத்துகின்றது. ஆகஸ்து 19, 2003, மனித உரிமைகள் சம்மந்தமான வரலாற்றில் மிகவும் கொடூரமான முறையில் கரிநாள் என்பதில் ஐயமில்லை. உயர் ஸ்தானிகர் சேர்கியோ வெயரோ டி மெலோவும் ( Sergio Viera De Mello) 15 ஐ.நா அதிகாரிகளும் ஈராக்கில் நடந்த குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் அஞ்சலி செலுத்தும் தமிழர் மையம் இவர்கள் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றது.

தமிழர் மனித உரிமை மையத்தின் பொதுச் செயலாளராக திரு. ச.வி.கிருபாகரன் பதவி வகிக்கின்றார். மனித உரிமை ஆர்வலரான இவர் தமிழர்களின் மனித உரிமைகள் விவகாரத்தில் தீவிர அக்கறை காட்டி வருகின்றார். இத்துறை சார் பணிகளை தனது வாழ்க்கைப் பணியாக கொண்டுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஓடுவதெங்கே...?

ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்டிருக்கும் யாழ்ப்பாணம் மானிப்பாயிலுள்ள ஒரு கல்லூரியின் அறிவித்தல் பலகையில் ஆசிரியர் ஒருவரால் எழுதி ஒட்டப்பட்ட கவிதை இது

மாணவ மணவியே!
எங்கே நீ ஓடுகின்றாய்?...
உன்னை எடைபோட
உனக்கே... தெரிகிறதா...?
விதை நிலத்திலே..
நெல் மணியாய் தூவப்படும் நீ
நாளைய விளைச்சலாக
எதைத் தரப்போகிறாய்...?
அகதி அஞ்சல்களாய்
அந்நிய தேசத்தைத் தெருக்களில்
முகவரிகளைத் தேடப் போகிறாயா?
அன்றே...
சொந்த மண்ணின் சுதந்திரப் பூவாக.
சுகந்தம் வீசப் போகிறாயா?
எங்கே நீ போகிறாய்?
எங்கே நீ ஓடுகிறாய்?
இந்த உலகத்தை நீயே உருட்டித் தள்ளும்
நெம்பு கோல் நீயல்லவா?

இது உனக்குத் தெரியாதா...?
நீயோ....
சந்தனக்காடு.
வெறும் வைக்கோற் குவியலல்ல....
உன் இதயத்திலே
தீப்பிடிக்க விடாதே
அங்கே
உன் தேசத்தின் வரலாற்றைத் தேக்கவை.
இன்றைய எழுது கோல்.
உன் பார்வையை...
நேராக்கு.
நீ கீழே விழுவது...
மீண்டும்... மீண்டும்....
எழுவதற்காகவே.
விழித்தெழு!
ஒவ்வொரு விடியலையும் தரிசிக்க...
விரைந்து நீ புறப்படு.
வரலாறு உன்னை
வாழ்த்தட்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போரும் வாழ்வும்

மணலாறு விஜயன்



கூனித்தீவு

## கூனித்தீவு

## உண்மைப் பதிவு 8

சூடைக்குடா....பசுமையான கண்ணாமரங்கள். அளவுக்கதிகமான இரையை உண்ட களைப்பில் குரல்வளையை மடக்கி வெள்ளைக் கொக்குகள் தூங்கிக்கொண்டிருந்தன. நீர்க்கரையில் குதிரைமலைக் கோட்டான்கள் ஓடித்திரிந்தன. பவளக்காலிகள் தம் நெடுத்த, சிவந்த கால்களை ஊன்றி நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன.

தமிழீழ விடுதலைப்போரை தென் தமிழீழத்தின் பல கிராமங்களுக்கும் விரிவாக்கத் தொடங்கினோம்.

ஐந்துபேர் கொண்ட எமது அணி சில நாட்கள் நடைப்பயணத்தின்பின் சூடைக்குடாவினூடாக கூனித்தீவுக் காட்டினை அடைந்தோம். கூனித்தீவிலே எமக்கென சில ஆதரவாளர்களைத் தேடிப்பிடிக்க வேண்டியிருந்தது. அதற்காக எமது போராளிகள் ஒருவரைக் கூனித்தீவுக் கிராமத்துக்குள் அனுப்பி வைத்தோம்.

சென்ற வீரன் நான்கு கிராமத்தவர்களுடன் திரும்பி வந்தான். வந்தவர்களை உறுதியான ஆதரவாளர்கள்தானா என பரீட்சிக்கவேண்டியிருந்தது. இதனால் நான்கு ஐந்து இடங்களுக்கு அடிக்கடி எமது முகாமினை மாற்றியமைத்துக்கொண்டிருந்தோம். வந்த நான்கு கிராமவாசிகளும் சலிக்காமலே எம்முடன் நின்றனர். இதற்குத் தேவையான பொருட்களை நாள்தோறும் சுமந்து வந்தனர்.

இவர்களில் ஒருவன் ஏகாம்பரப்பாவின் மகன். இவர் ஒருகுடும்பஸ்தராக இருந்தார். இவரது தொடர்பால்தான் ஏகாம்பரப்பாவின் வீட்டிற்குச் சென்றுவரத்தொடங்கினோம். ஏகாம்பரப்பா கூனித்தீவுக் கிராமத்தின் ஒரு பெரும் சண்டியன். ஆனால் வீணாக வம்புக்குச் செல்லமாட்டார். நீதி நியாயங்களுக்கு உட்பட்டதாகவே அவரது சண்டித்தனமிருந்தது. சண்டித்தனமிருந்தாலும் ஆழமான தமிழ்ப்பற்றுக்கொண்டவர். செங்கற்கள் சுட்டு விற்பதை ஒரு பெரும் தொழிலாகச் செய்துவந்தார். தமிழன் தேசிய மேலங்கியினையே என்றுமே அணிந்துகொள்வார்.

கட்டி முடிக்கப்படாத ஒரு பெரிய கல்வீடு. வீட்டின் அருகே நிழல்தரும் மிகப்பெரிய புளியமரமொன்று, வீட்டிற்குச் சற்றுத் தள்ளி குளமொன்று இருப்பதால் மெல்லிய குளிர்காற்று வீசிக்கொண்டிருக்கும். இந்தப் புளியமர நிழலுக்காக, குளத்திலிருந்து வரும் குளிர் காற்றுக்காக எத்தனைதரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டுமானாலும் ஏகாம்பரப்பாவின் வீட்டிற்குச் செல்லலாம்.

ஏகாம்பரப்பாவின் தொடர்பு நெருக்கமடைந்து கொண்டே வந்ததால் எமது போராளிகள் அங்கேயே தங்கிவிடும் பழக்கத்தையும் ஏற்படுத்திக்கொண்டனர்.

காட்டில் இருந்த பாசறைக்கு ஏகாம்பரப்பா வீட்டுக் கிணற்றிலிருந்தே தண்ணீர் கொண்டு சென்றோம். ஏகாம்பரப்பாவுடன் ஏற்பட்ட நெருக்கம் அவரது மகன் பாலுவை எம்முடன் முழுநேர போராளியாக இணைய வழியமைத்தது.

சில மாதங்கள் சென்றன. சூனித்தீவுக் காட்டிலிருந்த முகாம் பயிற்சிப் பாசறையாக மாற, ஏகாம்பரப்பாவின் வீடு உண்மையான பாசறையாக மாறியது.

வாக்கிடோக்கி கதைக்கும்போது வீட்டு முகட்டில் ஏறிநின்றே கதைப்போம். அச்சமயங்களில் பல ஓடுகள் உடைவதுண்டு. அப்பொழுதெல்லாம் ஏகாம்பரப்பாவின் மனைவி "பிள்ளையள் ஓடு உடையுது போல கிடக்குது" அடியேய், ஓடுதான் உடஞ்சது, பிள்ளையள் விளேயில்லைத்தானே" என்று யோக்காகக் கூறுவார் ஏகாம்பரப்பா.

ஊரார் பிரச்சனைகளைத் தீர்ப்பது, தாக்குதல் திட்டங்கள் வகுப்பது, பெரும்பகுதி நேரம் தங்கியிருப்பது, எல்லாமே இவரது வீட்டில்தான் நடந்தது. காட்டுக்குச் சென்று நாம் திரும்பி வரத் தாமதமாகினால் சாப்பாட்டுடன் தேடி வந்துவிடுவார். வரும்போதெல்லாம் தனது சிறிய மகனைக் கூட்டி வரமாட்டார். அதற்குக் காரணமிருந்தது. தன்னைத் தவிர வேறு எவருக்கும் பாசறை தெரியக்கூடாது என்பது ஒருகாரணம். தான் இல்லாத வேளைகளில் மகன் தேவைப்பட்ட பொருட்களை கொண்டு செல்ல வேண்டுமென்பது இன்னொரு காரணம்.

காட்டுக்குச் செல்லும் பாதையிலே மூன்று இடங்களில் பெரும் எண்ணிக்கையில் செங்கற்களை அடுக்கி வைத்திருப்பார். அந்த இடத்தை மாற்றுவதில்லை. செங்கல் வாங்குவோர் அந்த இடத்துக்கு வந்தே வாங்கவேண்டும். அந்த இடம் மக்களுக்குப் பழக்கப்பட்ட இடமாக இருந்தது.

அப்பா சில வேளைகளில் நாம் சிந்திக்காத சில வேலைகளைச் செய்துவிடுவார். ஒருநாள் எம்மை அழைத்து இரகசியமாக ஒரு விடயத்தைக் கூறினார்.

"தம்பி செங்கல்லுக் குவியலுக்கு கீழே ஒரு ஆழமான பங்கர் அமைத்திருக்கிறன். மறைத்து வைக்கவேண்டிய சாமான்களை அதுக்குள்ள வைக்கலாம். இந்த இடத்தை யாருமே சந்தேகிக்கமாட்டார்கள்" என்று கூறிவிட்டு எங்களை அழைத்துச் சென்றார். செங்கற்களை மளமளவென எடுத்துவிட்டு ஒருபெரிய பலகையைத் தூக்கினார்.

வாயிலே கைவைத்து நின்றோம் நாம். பஞ்சுபோல் தலைநரைத்தும் எந்தளவு உடற்பலத்துடன் இருந்தார் என்பதை அந்த பங்கர் எடுத்துக்காட்டியது.

"இஞ்ச வாருங்கோ இன்னுமொரு விசயத்தையும் சொல்லி வைக்கோணும்" எனக்கூறி எங்களை வீட்டுக்கு அழைத்துச் சென்றார். வீட்டுக்குள் சென்றதும் நின்று காதுக்குள் மெதுவாக பல இரகசியங்களைப் பற்றிக் கூறினார். அவர் கூறியதைக் கேட்டு பிரமித்து நின்றோம்.

எங்களுடைய பொருட்களைப் பாதுகாக்க தனது சொந்த வீட்டுக்குள்ளேயே மறைவிடங்கள். எந்தளவு துணிவு வேண்டும். எந்தளவு தியாக உள்ளம் வேண்டும். அப்பா எல்லாம் நல்லம் இப்பிடிக்கட்டி என்ன பிரியோசனம். ஒருநாளைக்கு பொம்பர் வந்து அடிச்சுத் தரமட்டமாக்கிப் போடுவானெல்ல எனக் கிண்டலாகக் கூறினோம். " பின்ன என்ன வாழுறதுக்கெண்டா கட்டினது. ஏதோ இருக்கும் வரைக்கும் இருந்திட்டுப் போறது" என்று சாதாரணமாகவே பதில் சொன்னார். அப்பாவினுடைய மாட்டு வண்டில் ஒருநாளும் ஓய்வாக நின்றதில்லை. எந்த நாளும் எமது பாசறைக்குரிய சாமான்களை இழுத்துக்கொண்டேயிருந்தது. வண்டியைத் தானே செலுத்துவார். காலையில் எழுந்ததும் பம்பரமாய்ச் செயற்பட்டு அன்றைய தினம். எமக்கு சாப்பாட்டுக்குத் தேவையானவற்றை மனைவியிடம் கொடுத்துவிட்டே அடுத்த வேலையைக் கவனிப்பார்.

எல்லாவற்றுக்கும் மேலாக போராளிகள் தங்கி நிற்கும் நாளில் இரவு முழுவதும் கண்மூடாது, காவல் கடமையில் ஈடுபடுவார். விடிந்ததும் சற்றுத் தூரம் சென்று ஏதாவது வித்தியாசமான அடிச்சுவடுகள் உண்டா என்பதைப் பார்த்து வந்த பின்வுதான் போராளிகளை எழுப்பி விடுவார்.

லெப்.கேணல் புலேந்திரன், லெப்.கேணல். குமரப்பா, மேஜர் கணேஸ் முதலிய தளபதிகள் வந்தால் ஏகாம்பரப்பாவின் வீட்டில் வந்து தங்கி நிற்காமல் போவதில்லை. அந்தளவிற்கு உயர்பாதுகாப்பான இடமாக இவரது வீடு இருந்தது.

ஏகாம்பரப்பாவின் வீடு பாதுகாப்பு மறைவிடம் மாத்திரமல்ல, ஒருகுட்டி வைத்தியசாலையும்கூட. சின்னமுத்து, கொப்பளிப்பான், காய்ச்சல் போன்ற வருத்தங்கள் வந்த போராளிகளை அவர்களே பாராமரித்தார்கள். அம்மாவும் பிள்ளையளும் கண்ணிமைக்காது காத்திருந்து அன்போடு உபசரித்தார்கள்.

மாற்று இயக்கங்கள் மலிந்திருந்த காலம் அக்காலம். அதுவும் சூனித்தீவில் மக்களை விடுதலைப்புலிகள்மீது நம்பிக்கை கொள்ளச் செய்வதற்கு படாதபாடுபட்டார். அவையெல்லாம் சொல்லில் வடிக்க முடியாதவை.

அவசரமாக சிலவேளைகளில் உணவுப் பொருட்கள் தேவைப்பட்டால் தன்னந்தனியாக அத்தனை செங்கல்லையும் எடுத்துவிட்டு ஏணிவைத்து இறங்கி மூடைகளை தனியாகவே சுமந்து ஏணி ஏறி வருவார். அந்தளவு அசுர பலம் அவருக்கிருந்தது. எமது போராளிகளால் கூட முடியாத காரியங்களை அவர் சாதித்தார்.

தென் தமிழீழத்தில் முதலில் இராணுவத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பிரதேசம் மூதூர். தென் தமிழீழத்தின் முதன் முதலில் சிங்கள விமானப்படையின் கெலிகொப்டர் சுட்டுவீழ்த்தப்பட்ட இடம் மூதூர். தென் தமிழீழத்தின் முதலில் விமானப்படையின் குண்டு வீச்சுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்ட இடமும் மூதூரே. தென்தமிழீழத்தில் விடுதலைப்புலிகள் எதிரியிடம் எல்.எம்.ஜி ரகத் துப்பாக்கியை கைப்பற்றிய இடமும் மூதூர். இந்தப் பெருமைகளுக்கெல்லாம் தளமும், களமும் ஏகாம்பரப்பாவின் வீடும், குடும்பமுந்தான். தென்தமிழீழத்தின் முதல் கண்ணிவெடித் தாக்குதலுக்கான திட்டம் ஏகாம்பரப்பாவின் வீட்டில்வைத்தே திட்டமிடப்பட்டது. கட்டைப் பறிச்சானில் நடைபெற்ற இத்தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். இந்த வெற்றிகரமான தாக்குதல் அப்பாவுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

"இன்னும் ஐம்பது -நூறு என கொல்லவேணும் அப்பதான் இவங்கட திமிர் அடங்கும்" என்று உற்சாகமாகக் கூறினார்.

தொடர்ந்து நடந்த பல தாக்குதல்கள் எல்லாம் அப்பாவின் வீட்டில் வைத்தே திட்டமிடப்பட்டது. தடயங்கள் எதுவும் விடக்கூடாது என்பதில் எங்களைவிட அப்பாவே அதிக அக்கறையாக இருந்தார்.

வீட்டில் நாம் தங்கி நின்று விட்டுச் செல்லும்போது ஒருபேப்பர்துண்டுகூட இல்லாமல்ச் செய்துவிடுவார். எங்களுக்கு ஒரு உதாரண புருசராக அவர் நடந்துகொண்டார்.

1985ம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்தே இராணுவம் ஏகாம்பரப்பாவினை தேடத்தொடங்கியது. இத்தனைக்கும் இவர் சூனித் தீவைவிட்டு எங்குமே செல்வதில்லை இதனால் இராணுவத்தின் கைகளுக்கு எட்டாப் பழமாகவே இருந்துவிட்டார்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அகற்றும் முயற்சியாக குண்டு துளைக்காத கவச வாகனம் ஒன்றைச் செய்யத் தொடங்கினோம். தொடங்கியது தான் நாங்கள், செய்து முடித்தது அப்பாதான். காட்டினுள்ளே உயர்ந்த மரங்களில் பரன்களை அமைத்துச் சாப்பாட்டுச் சாமான்களை அடுக்கிவிடுவார். தேவைப்படும் காலங்களில் அதில் ஏறி இருந்து காவல்கடமை புரிவதுமுண்டு. 1986ம் ஆண்டு இறுதிப் பகுதியில் எமது இரகசியங்களை அறிந்துகொண்ட தேசத்துரோகி ஒருவன் இராணுவத்துடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**விடுதலையை வீட்டில் வைத்தே வளர்த்த அந்த உத்தம புருசன் வீட்டுப் படியிலேயே வீழ்ந்து கிடந்தார். இறுதி மூச்சிலும் தன் விடுதலை பற்றைக் காட்டிய அந்த மறவரை எப்படி மறக்க முடியும்?....**

சேர்ந்து கொண்டான். அன்றிலிருந்து ஏகாம்பரப்பாவின் வீட்டில் தங்குவதை ஓரளவு நிறுத்திக்கொண்டோம்.

1987ம் ஆண்டின் தொடக்ககாலம், மறக்கமுடியாத அந்தக் கொடூரச் சம்பவம் நிகழ்கிறது. துரோகியின் துணையோடு இராணுவத்தால் ஏகாம்பரப்பாவின் வீடு சுற்றிவளைக்கப்படுகிறது. வழமைபோல் ஏகாம்பரப்பா காவல் கடமையை முடித்துக்கொண்டு வித்தியாசமான நடமாட்டங்கள் இருக்கிறதா என்பதை அவதானிப்பதற்காக வெளியே வந்தார். வாசல்ப் படியைத் தாண்டியிருக்கமாட்டார். துப்பாக்கிக் குண்டுகள் மழைபோல வந்தன. விடுதலையை வீட்டில் வைத்தே வளர்த்த அந்த உத்தம புருசன் வீட்டுப் படியிலேயே வீழ்ந்து கிடந்தார். இறுதி மூச்சிலும் தன் விடுதலை பற்றைக் காட்டிய அந்த மறவரை எப்படி மறக்க முடியும்?....

மேஜர். கஜேந்திரனுடன் பதினொரு வீரர்களின் உடலை மூடி தகர்ந்து கிடந்த அந்த வீடு இன்னும் கண்களில் அப்படியே தெரிகின்றது.

அன்று தப்பினாலும் இன்று மண்ணில் இல்லாமல்ப் போய்விட்ட தையல்முத்து அம்மாவிற்கு எப்படி வரலாறு எழுதுவது? போராளியாய் மாறி மரணத்தைத் தழுவிய அப்பாவின் மகன் பாலுவைப்பற்றி எழுத எந்தக் கரங்களுக்கு வலுவுண்டு?

கூனித்தீவு விடுதலைத் தீவுக்கு தீனியிட்டதீவு. ஈழவிடுதலைப்போரில் ஏகாம்பரப்பாவின் வரலாறு உறுதியாக எழுதப்படும் என்பது நம்பிக்கை.

போருக்கு வேகம்கொடுத்த இத்தியாகக் குடும்பத்தின் கதையைச் சொல்லிக்கொண்டிருந்த அந்தப் போராளியின் கண்கள் கண்ணீரால் நிரம்பியது. இன்னும் வாழும் அந்த முத்தபோராளியை தரிசித்ததால் பெரும் உண்மையைப் பெற்ற நிலையில் அப்போராளியிடமிருந்து விடை பெற்றுக்கொண்டேன்.

# விரும்பாதது



**பரந்தனூரான்**

விரும்பாத ஒன்றைத்தீர்மானிக்கும் நிர்ப்பந்தத்திற்குள் நின்றார். வேறு வழியே இல்லை. கசப்பான திண்மத்தை தின்றாகியே வேண்டும். ஊசி முனையில் ஏற்றி விடப்பட்ட புழுவானார். ஊசி வெம்மையில் கனல்வதாய்-மனம் பெரும் சித்திரவதைப்பட்டது. மனதிலிருந்து சொரியும் குருதியாக முடிவை வீட்டில் சிந்தினார். மனைவிக்கு சற்று நிம்மதியான பெருமூச்சு (முழு நிறைவற்றது) வந்தது.

"கடவுளே! இப்ப எண்டாலும் இந்த மனுஷனுக்கு கண்திறந்துதே!"

இம் முடிவால் வீட்டில் பெருமாற்றம் நிகழ்ந்து எல்லோர் முகங்களிலும் மகிழ்வு ஒளிரும் என அவர் எதிர்பார்த்தார், இது முழுமையாக நடக்கவில்லை என்றே தோன்றியது. பெரிதும் பூரித்துப்போக வேண்டிய மகளின் முகத்தில்கூட அப்படி பெரிதாய் மாற்றம் நிகழவில்லை. சிறு மகிழ்வே அவள் முகத்தில் இழையோடியது. அதை மேவி பீதி நிறைந்து வழிந்தது. அவரின் முடிவு செயற்பாடாகி காரியம் நிறைவேறுவதற்குள் தன் ஜீவிதத்திற்கே முடிவை "அவர்கள்" தந்து விடுவார்களோ என மனத் திரையில் பயவிருட்சம் கிளைவிரித்தது.

ஒருவகையில் அவர்களது மீளலே தனக்கிசைவான இம்முடிவை எடுக்க காரணம் என எண்ணினாள். ஆனால், இது சுபமாக நிறைவேறி விடவேண்டுமே எனத் தவிப்பு மேலோங்கியது.

அவருக்கு தான் இப்படி தீர்மானம் எடுக்க வேண்டிவரும் என அன்று வானத்தை தலையால் தொட்டுக் குதித்து மறுப்புரைத்தபோது கனவும் வரவில்லை. இப்போது வேறு வழியின்றி அம்முடிவையே எடுக்க வேண்டியதானதை நினைத்து மனம் வெதும்பினார். இதனால் யார் மீதோ இனம் தெரியாத கோபம் பிறந்து பிரவாகித்தது. யார் மேலே இதனைப் பிரயோகிப்பது எனப் புரியமால் தடுமாறினார்.

மகள் மீதுதான் இனம் புரியாத சினம் கூர்மைப்பட்டது. அவளால் தானே இந்த வில்லங்கம். வீட்டிற்குள்ளேயே அமைதிப்பட்டு கிடந்திருந்தால் இப்படியொரு விபரீதம் நேர்ந்திருக்குமா? என எண்ணினார். அவள் மீறி உடைத்தெறிந்துவிட்டதாகக் கருதும் அடக்க ஒடுக்கம் என்ன என்பது அவருக்கே பொருள் புரியாமல் எழும்பியது.

இப்போது எதை வாழ்வியலுக்கு வரம்பாக இடுவது? எல்லாமே சாதாரணம் என்றாகியிருப்பது போல் தோன்றியது. ஆனால், அந்த விஷயத்தைத்தான் அன்று அவரால் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாமல் போயிற்று. அவரது தெருவில் உள்ளோரது வாய்களில் அரைபட்டு முற்றும் இடியாத மாவாக காதில் அந்தக் கதை விழுந்தது. வீட்டிற்கே சிதை மூட்டிவிடுகிறேன் என்பதாய் எகிறிக் குதித்தார்.

ஏற்கனவே அவருக்கு அதுபற்றியோர் சந்தேகம் இருந்தது. அவன் சில காலங்களாக அவரது வீட்டின் தெருவையே அதிகம் உபயோகித்தான். மணிக்கொரு தரமாக இந்தத் தெருவின் கிடங்குகளில் விழுந்தெழும்பி அவனது சைக்கிள் பயணித்தது. 'வீதியில் எத்தனை பேர் போகிறார்கள்' என்று இருந்துவிட அவரால் முடியவில்லை. அவன் அவரது வீட்டைக் கடக்கும்வரை சைக்கிளின் வேகத்தை மிக மந்தப்படுத்துவான். தன் தலையைத் திருப்பி வேலிக்கு மேலால் பார்வையை வீசியபடியே 'பெடலை' மிதிப்பான். இந்த வித்தியாசங்கள்தான் அவருக்கு சந்தேகத்தை ஊட்டியது. சந்தேகத்திற்கு தீர்வு காணும் முகமாக வீட்டிலிருக்கும் மகளை அவதானித்தார். எதுவித சலனமும் புலப்படவில்லை. எந்தநேரமும் சமையலறைக்குள் புகை மண்டிய அடுப்போடு போராடினாள். ஏனைய வேளைகளில் முற்றம் பெருக்கினாள். அல்லது புத்தகங்களோடு பார்வையைப் பொருத்தி இருந்தாள்.

புத்தகங்களே அவரது சந்தேகப் பொருள்!

அவள் வெளியே புறப்பட்டபின் புத்தகங்களைத் தட்டினார். எதுவும் சந்தேகத்துக்குவலு சேர்க்கவில்லை. அவள் வீட்டிற்கு வெளியே என்ற நினைவு எழ தெருவில் எங்கேனும்... எனச் சடுதியாக எண்ணத் தலைப்பட்டார். ஆனால் அதைப் பரீட்சித்து பார்க்கும் அளவிற்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை.

இப்போது ஒருவர் கொண்டுவந்து அவர் காதில் கொட்டிவிட்ட செய்தியால் கொதித்தெழுந்தார். அவர் வீட்டிற்குள் நுழைந்த வேகத்தில் படலை இருதடவை தாங்கு தூணோடு அடித்துக்கொண்டது. வீட்டின் கதவு, ஓடுகள் யாவும் அதிர்ந்தன. இடிந்து சொரிந்து விடுவனபோல, மகளுக்கு பிரமை தட்டியது. கூவி வந்து வீட்டின் முகட்டில் வெடித்து வேகம் கொள்ளும் எறிகணைகள் நினைவில் வந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர் வீரபத்திரரானார். சன்னதம் நிகழ்ந்தது. முழுஉக்கிரமும் மனைவி மேல் தான் விழுந்தது. மனைவி எதுவும் புரியாதவளாக மலைத்துப்போய் நின்றாள். அவள் முகத்தில் வியப்புக் கோடுகள் பரவி அழிந்தன. மீண்டும் பரவின. அவருக்கு தன் உக்கிரப் பிளம்பை முழுமையாய் மகளின் மேல் வீசத் துணிவில்லை. அவள் ஒரு 'ஒற்றை றோட்டு' என்பது அனுபவத் தேர்வு, எடுத்த வேகத்தில் முடிவு கட்டிவிட்டாள் என்றால் சில வேளை அவர் வாழ்வின் பிடிமானமே அழிந்துபோகலாம்.

உக்கிரத்தின் சிறு கதிர்வீசல் மட்டும் அவள் முகத்தில் தெறித்தது. "சொல்லிப்போட்டன் உதை கனவிலும் நினையாத, அவனின்ர கதையையே மறந்திடு".

அவள் வாயில் இருந்து மொழி எழவில்லை. பதிலாக முகத்தை மூடிக்கொண்டு குப்புறக் கிடந்து விசும்பினாள். தாய் அவள் மீது சில கையாயுதத் தாக்குதல்களை நடத்தினாள்: "ரியூசனுக்கும் பள்ளிக்கூடத்துக்கும்போய் இதே படிச்சனி" உன்னைக் கண்டபடி வெளியில விட்டதுதான் பிழை!"

ஆனால் இருவருமே அவளை முற்றாக வீட்டிற்குள் இட்டு வரம்பிடும் முடிவுக்கு வரவில்லை. வழமைபோலவே கல்விசார் இடங்களுக்குப் போனாள் அவள் சில கொண்டாட்டங்களுக்குப் போகும்போதுதான் இடையிடையே தடைக் கற்கள் விழுந்தன. அல்லது அவதானக் கதிர்கள் அவள் மேலே படியவிடப்பட்டன. காலம் கரைந்து ஓடியது. அந்தக் கரைதல்களினூடே நீரடிபட்ட கல்லென அவள் விவகாரம் ஒளிர்ந்தது. அது மண்ணாக அரிக்கப்பட்டதெனவே எண்ணினார் அவர். மூன்றாண்டுகளுக்கு முன் அவன் கனடாவுக்கு என அவரது கண்களுக்குள் இருந்து காணாமல் போனான். சனியன் தொலைந்ததெனப் பெருமூச்சு விட்டிருந்தார்.

ஆறு மாதங்களில் அவனின் தாய் வீட்டிற்கு வந்தாள். "அண்ண .பெடியன் உங்கட பெட்டைய விரும்பியிட்டான் இனி என்ன, செய்து வச்சு விடுவம் அவனே கனடாக்கு கூப்பிடுறன்" என்ற தொனிப்பொருளில் பேச்சைத் தொடங்கியவள் அவர் வீரபத்திரராய் சன்னதம் கொள்ளக் கண்டாள். இறுதியில் அவளும் கோபவார்த்தைகளை பொழிந்துவிட்டு ஒரு சலிப்போடு படலையைக் கடந்தாள். "என்ர பிள்ளைக்கு கலியாணம் செய்து வைக்க எனக்குத் தெரியும்" என அடிக்கடி கறுவிக்கொண்டார் அவர்.

"இவள் ஏதாவது குறுக்கு வழியில போனாலும் போயிடுவாள் போல கிடக்குது கெதியா ஒரு வழியப் பாருங்கோ!" என மனைவி இரகசியமாகக் கூறினாள்.

"அவளுக்கு வயது கிடக்குது இன்னும் ரெண்டு வருஷத்துக்கு ஏதாவது படிக்கட்டும் ஆறுதலா யோசிப்பம்" அவள் அவனை மெல்ல மெல்ல மறந்தே போனாள்! இது அவரது நினைப்பாக இருந்தது.

நீண்டகால வெளியில், மாற்றங்கள் நிகழ்ந்தேறின. புதிய செடிகள் முளைகொண்டன. ஏழு மாதகாலத்துள் அவர்களது வாழிடத்தை ஆளுவோர் வேறாயினர். திரும்பிய திசையெல்லாம் வேற்றுச் சத்தம். சந்திகளில் வாளேந்திய விலங்கின் கொடிகள் பறந்தன. என்றுமே காணாத நீலவர்ண அசையும் காட்சிகள் அதனருகே ஒளிர்ந்தன. வீதிகளில், கால்வைக்கும் இடமெல்லாம் சன்னவரம் அருளும் கோபுரங்கள். அவருக்கும் மனைவிக்கும் முகத்தில் பேயறைந்தது போலாயிற்று. தமது அசைவியக்கம் கட்டுப்பட்டுப் போகுமென மனதார எண்ணினர்.

எல்லாருமே புதிய விலங்குகளோடு சிறைப்பட்டார்கள். வந்த சீருடை நஞ்சுகள் உடனடியாக எந்தப் பால் மீதும் பொசியவில்லை. எல்லாமே தமக்குச் சமம் என்பதாய் நுரைத்துச் சலசலத்தன. கைகளை குலுக்கிக்கொண்டன. அந்தக் குலுக்கல்கள் பின்னர் எறிதல்களாக பெண்கள் மீது விழத்தொடங்கிய போது பலரும் குலைநடுங்கிப் போனார்கள்.

அவருக்கு அத்தோடு தூக்கம் கெட்டது. அவளை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது என்ற யோசனை மனதை அரித்துத் தின்னத் தொடங்கியது. அவர் வீட்டுப் படலையின் முன் நிர்மாணிக்கப்பட்ட கோபுரத்தின் சிற்பம் "ஐயா" என அட்சர சுத்தியாக அவரை அழைத்து அளவளாவியதில் சிறிது திடப்பட்டார். மனைவி மகளோடு அண்ணன் தம்பி என்று உறவு கொண்டான். "அஞ்சற்க" என்று அவன் அபயம் தருவதுபோல கையசைத்து சிரித்துப் பேசிவிட்டுப் போனான். ஆனால் இரண்டு வீடு தள்ளியிருந்த கோபுரத்தின் ரட்சகர் சிற்பம் தொடங்கியிருந்த திருவிளையாடல்தான் அவரின் கழுத்தைப்பிடித்துத் திருகத் தொடங்கியது.

அவள் வகுப்பிற்குப் போய்த்திரும்பிக் கொண்டிருந்தாள். சன்னவரம் அருளும் கோபுரத்திலிருந்து வீதிக்கு நடுவே ராஜ நடைபயின்றான் ரட்சகன். நடுமத்தியான வெய்யில் தலையில் இருந்த தொப்பியை ஊடறுத்து உச்சியில் குத்தியது. வியர்வை பிசுபிசுத்தது. வீட்டு நிழலில் இளைப்பாறும் வேகத்தில் வந்தாள் நடு வீதியில் நின்றவனைக் கண்டதும் திகில் பரவியது. என்றும் இல்லாத மாதிரி ஏன் இப்படி?... சைக்கிளை அவனை விலத்தி செலுத்தினாள். சட்டென்று 'கான்ரிலில்' கரம் பதித்து நிறுத்தினான்.

சிவந்த விழிகளோடு உதடுகள் துடிக்க அரைமணி நேரத்தின் பின் வீடு வந்தாள் அவள். அவள்கூறிய செய்தியால் உயிர் நாடியில் விஷம் பரவி ஊர்வதான உணர்வு அவருக்கு. உடனடியாக அவளை இந்தஊரை விட்டே அனுப்பிவிட வேண்டும் என துடித்தார். எங்கே அனுப்புவது? கொழும்புக்கு அனுப்பி விடலாமா என யோசித்தார். யோசிக்கும்போதே ரட்சகன் அவளைத் தேடி வீட்டிற்கு வந்தான். அவரிடம் தனக்கு அவள் வேண்டும் என்றான். அவருக்கு பூமி படு வேகமாக நடுங்கியது. என்ன கூறுவது, என்று தெரியாமல் தடுமாறினார். நொடிப்பொழுதில் அவர் மனதிலிருந்து சில வார்த்தைகள் சுயாதீனமாக எழுச்சிகொண்டன.

தப்பிக் கொள்வதற்காகவே அந்த வார்த்தைகள், எழுச்சிகள். அவனோ விடுவதாயில்லை. தமிழும் சிங்களமும் சகோதர மொழிகள் என்று சொல்லி நீண்ட நேரம் வாதாடி விட்டுப்போனான். அவனது திரும்பிய நடையில் மீண்டும் வருவேன் என்பதான திமிர் தொனித்தது. உடனடியாக முடிவுகட்டியாகவேண்டிய நிர்ப்பந்தம். எங்கே அவளை அடைக்கலப்படுத்துவது என்பதை யோசிக்கவே மண்டைக்குள் பல குண்டூசிகள் ஏறின. இரண்டு நாள்களாக, குழம்பினார். அவள் பீதி நிறைந்தவளாக வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்தாள். மனைவி நொடிக்கொருதரம் ரட்சகர்களைத் திட்டினாள். அவருக்கும் அதுநேர்ந்தது. இறுதியாக இந்த முடிவைக் கைக்கொண்டார்.

"நான் அவனின்ர தாயிட்ட கதைச்சிட்டு வாறன்" இப்போது போய்க் கேட்க அவனின் தாய் என்ன முகத்திலறைந்தாற் போல் பேசுவாளோ என்பது அடிமனதில் பிசைந்தது. எனினும் அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. நிர்ப்பந்தத்திற்குள் திணறி அவர் எடுத்த முடிவு மூச்சுத்திணறி சாகடிக்கவில்லை. ஆகா என்று புன்னகையினோடு வரவேற்கப்பட்டது. அதற்கான காரியங்கள் புயல்வேகம் பெற்றன. கப்பலில் பதிந்து கொழும்பு செல்வதற்கான ஏற்பாடுகள் முடிந்தன சிலநாளில்.

பயணத்திற்கு ஒருநாள் மட்டும் இருந்தது. மாலைநேரம் அயலார் யாவரினதும் காதுகளில் விஷயம் போடப்பட்டு விடைபெறத் திட்டம். அவள் வீட்டின் மையத்திலிருந்து ஒவ்வொரு திசைகளிற்கும் புறப்பட்டாள். அவளின் தாயும் தந்தையும் கோயில்களின் சிலைகள் மீது தொலைவில் நின்று விழிகளாலும் சொற்களாலும் பிரார்த்தனை புரிந்தனர்.

இருள் மெல்ல கவியத்தொடங்கியது. அவர்கள் வீடு திரும்பியபோது அவள் இன்னும் வந்திருக்கவில்லை. ஊர் அடங்கி புதியவிதிகளுக்குள் சிறைப்படும் நேரம் நெருங்கி வந்தது. அவரதும் மனைவியினதும் இதயத்துடிப்புகள் இரட்டித்தன. நாய் ஒன்றின் ஊளை ஒலி சன்னமாய்த் தெறித்தது. அவள் வீடு திரும்பவில்லை. சட்டென அவருக்கு புதிதாய் நிர்மாணிக்கப்பட்ட கோபுரங்களில் உள்ள ரட்சக சிற்பங்கள் நினைவில் எழுந்தன. அவள் வீடு திரும்பவில்லை? அவரின் மனைவியிடம் இருந்த விசும்பல் எழுந்தது. அந்தவிசும்பல் இன்றுவரை காற்றை ஈரப்படுத்திக்கொண்டே....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> “நிகழ்வுகள் செய்தியாகின்றன, நிகழ்வின் தன்மை மாறும்போது ஊடக மாற்றங்களும் நிகழ்கின்றன”

# பண்பலை ஒலிபரப்பு

கலாநிதி க. சோமாஸ்கந்தன்

ஒரு நாட்டின் அபிவிருத்தி மட்டம் உயரும்போது அதன் தொடர்பியல் சாதன வகைகள் வளர்ச்சி அடைகின்றன. தொடர்பியலில் வானொலி தொலைக்காட்சி, பத்திரிகைகள் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. தொலைக்காட்சியின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வானொலி காரணமாக அமைகின்றது. படங்கள் இணைக்கப்பட்ட வானொலி என்று தொலைக்காட்சி அழைக்கப்படுவதுண்டு. அதைப்போல் வானொலியின் தோற்றத்திற்கு தொலைபேசியும் தொலைத்தந்தியும் உந்து சக்தியாக அமைகின்றன.

திரைப்படத்திற்குப் போட்டியாக வானொலி திகழ்ந்த காலம் சென்ற நூற்றாண்டின் இருபதுகளில் நிலவியது. அப்போதைய திரைப்படம் பேசமாட்டாது, வாயை மாத்திரம் அசைக்கும் அதே காலப்பகுதி வானொலி இசைக்கச்சேரிகளையும் தொடர் நாடகங்களையும் ஒலிபரப்பியது. திரையரங்கிற்குச் செல்லாது தமது வீட்டு வானொலிப் பெட்டியுடன் மக்கள் தங்கத் தொடங்கினர். வானொலியின் சவாலை எதிர்கொள்வதற்காகப் பேசும்படம் உருவாக்கப்பட்டது. முதலாவது பேசும் படம் 1927 இல் அமெரிக்கா திரையிட்டது.

வானொலி வளர்ச்சி தொடர்கின்றது. ஊடகத்துறை சம்பந்தமான தொழில்நுட்ப வளர்ச்சிகள் யாவற்றையும் உள்வாங்கும் திறன் அதற்கு உண்டு. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் என்பன கூட்டாக மகிழ்வளிப்புச் சாதனங்கள் (ENTERTAINMENT OUTLETS) என்று வகைப்படுத்தப்படுகின்றன. “மகிழ்வளிப்பு என்பதுதான் சரி, பொழுதுபோக்கு என்பது தவறு” என்று தமிழறிஞர்கள் இயம்புகின்றனர்.

இசையும் நாடகமும் வானொலி மகிழ்வளிப்பின் இரு முக்கிய கூறுகளாகும். தொலைக்காட்சியில் காதால் கேட்கலாம், கண்ணால் பார்க்கலாம், வானொலியில் காதால் கேட்க மாத்திரம் முடியும் நடிகர்களின் குரல் மாத்திரம் வானொலி நாடகங்களில் நடிக்கின்றன. வானொலி இசையில் திரைப்பட இசையும் மெல்லிசையும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பாரம்பரிய இசை வடிவங்களும் அவ்வப்போது ஒலிபரப்பப்படுகின்றன.

பண்பலை ஒலிபரப்பான புலிகளின் குரல் வானொலியில் மகிழ்வளிப்பு வித்தியாசமான கண்ணோட்டத்தில் நோக்கப்படுகின்றது. எமது விடுதலைப் போருக்குப் பக்கபலமாக நிற்கும் இவ்வானொலி விடுதலை உணர்வைத் தூண்டும் இசையையும் நாடகத்தையும் ஒலிபரப்புகின்றது. உலகின் பிறிதோர் வானொலி ஒலிபரப்பாத இசைவடிவமான போராட்டப் பாடல்களை புலிகளின் குரல் ஒலிபரப்புவதை இத்துறைசார் ஆய்வாளர்கள் கவனத்தில் எடுத்துள்ளனர். அயர்லாந்து விடுதலைப் போரை முன்னெடுப்போர் தனித்துவமான இசை வடிவங்களை உருவாக்கியுள்ளனர். புலிகளின் குரல் ஒலிபரப்புப் பாடல்களின் பெருக்கத்திற்கு நிகரான அளவுக்கு அவை அமையவில்லை. ஐ.ஆர்.ஏ இயக்கம் சுயமான இசை மெட்டுக்களைத் தயாரிப்பதில் அக்கறை காட்டவில்லை. கவர்ச்சியான மெட்டுக்களை பிற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இசைவடிவங்களில் இருந்து கடன்வாங்குவதற்கு அவர்கள் தயங்குவதில்லை.

வானொலி ஒலிபரப்பில் ஆரம்பகாலந்தொட்டு நாடகங்கள் நிலையான இடம் பிடித்துள்ளன. அமெரிக்காவில் முப்பதுகளில் தொடர்ச்சியாகப் பலமாதங்கள் நீடித்த தொடர் நாடகங்கள் சென்ற நூற்றாண்டின் முப்பதுகளில் ஒலிபரப்பாகின. நாற்பதுகளில் தொலைக்காட்டி ஊடகம் வலுப்பெற்ற பின்பும் அவை நீடித்தன. அமெரிக்க ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் பல சொற்களும் சொற்டொடர்களும் அக்காலத்திய வானொலி நாடகத்தில் தோன்றின.

உதாரணத்திற்கு கொஸ்டென், கொரெல் (GOSDEN, CORRELL) தயாரித்து வெளியிட்ட அமாஸ் அன்ட் அன்டி (AMOS & ANDY) என்ற தொடர் நாடகத்தில் வரும் கேலிப்பேச்சுக்களும் பல சொற்களை ஒன்றிணைக்கும் ஒற்றைச் சொற்களும் இன்றுவரை பயன்பாட்டில் உள்ளன. முன்கூட்டியே நன்கு கவனமெடுத்துத் தயாரித்த 'திடீர்' பகிடிகளுக்கு அமெரிக்க வானொலி பிரசித்தமானது. ஆடல் பாடல், அமர்க்களமான பின்னணி இசையுடன் ஜிம்மி டுரான்றே ( JIMMY DURANTE), பொப் ஹோப் (BOB HOPE) போன்ற வல்லுநர்கள் வானொலியை வளம்படுத்தினர்.

வானொலி நாடகம் தலிபான்கள் போன்ற கடும்போக்காளர்களையும் கவர வல்லது. தொலைக்காட்சி பார்த்தல், தம்மைச் சான்ற பத்திரிகைகள் தவிர்ந்த எல்லாவகைப் பத்திரிகைகள் படித்தல், ஆடல் பாடல், பலத்துப் பேசி சிரித்து மகிழுதல் போன்ற எல்லாவற்றையும் அவர்கள் தடைசெய்தனர். ஆனால் வானொலி கேட்பதை மாத்திரம் அவர்கள் தடைசெய்யவில்லை.

1994ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை பீபீசி தனது ஆப்கானிஸ்தானுக்கான சிற்றலை ஒலிபரப்பில் ஒரு தொடர் நாடகத்தை ஒலிபரப்புகின்றது. இரு பிரதான ஆப்கான் மொழிகளான பஷ்ரு, தாரி (PASHTU, DHARI ) ஆகியவற்றில் 'புதிய இல்லம், புதிய வாழ்வு' (NEW HOME, NEW LIFE) என்ற மகுடத்தின் கீழ் இந்த நாடகத்தொடர் இலண்டனில் தயாராகின்றது.

வாழ்க்கை வசதிகள் மிகவும் குறைந்த ஒரு ஆப்கான் குக்கிராமத்தில் வாழும் கல்வியறிவு இல்லாத ஆனால் நிறைந்த சுயபுத்தியுள்ள ஒரு சராசரிக் குடும்பத்தினரைப் பாத்திரங்களாக்கி நாடகம் பின்னப்பட்டுள்ளது. அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நாட்டின் சட்டத்தை மீறாமல் அவர்கள் தேடக்கூடிய பரிகாரங்கள், நிவாரணங்கள் என்ற ரீதியில் நாடகம் நகர்த்தப்படுகின்றது. 21 மில்லியன் மக்கள் நிறைந்த ஆப்கான் நாட்டில் 16 மில்லியனுக்கும் மேலானோர் இந்த நாடகத்தை தொடர்ச்சியாகப் பார்ப்பதாக கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இவர்களில் தலிபான் தலைவர்களும் அடங்குவர்.

நாடகங்களை பத்திரிகைகள் பிரசுரிப்பதில்லை. சிலவேளை விமர்சனம் செய்வதுண்டு. குறும்படங்களையும் பழைய திரைப்படங்களையும் தொலைக்காட்சியில் காட்டுகிறார்கள். நாடகம் போடுவதற்கு தொலைக்காட்சி இடம் தருவதில்லை. இது படக்கருவி ஆதிக்கம் செலுத்தும் ஊடகம். மேடை, தெருவெளி, வானொலி இவை மூன்றும்தான் இப்போது நாடகத்திற்குக் கிடைத்துள்ள தளங்கள்.

இன்று வானொலி ஒலிபரப்பு மூன்று அலைவரிசைகளில் நடத்தப்படுகின்றன.

1. சிற்றலை வரிசை - SHORT WAVE
2. மத்திய அலைவரிசை - MEDIUM WAVE
3. பண்பலை வரிசை - FREQUENCY MODULATED(FM)

சில வானொலிப் பெட்டிகளில் நீள் அலைவரிசை (LONG WAVE) என்ற குறியீடு காணப்படுகின்றது. நீள் அலை பொதுமக்கள் பாவனைக்கு உதவுவதில்லை. பறந்துகொண்டிருக்கும் விமானங்களும் கடலில் சென்றுகொண்டிருக்கும் கடற்கலங்களும் தொடர்புத் தேவைகளுக்காக நீள் அலையை பயன்படுத்துகின்றன.

எமது பகுதிகளில் கூடுதலாக காணப்படும் 'ஆர்ரெக்'(ARTECH) எனப் பெயரிடப்பட்ட கையடக்க வானொலிப் பெட்டியில் நீள் அலை வரிசையைக் காணலாம். நாஷனல், சொனி, குருன்டிக், பிஷர் போன்ற ரகங்களில் இந்த வரிசைக்கு இடம் ஒதுக்கப்படவில்லை. எல்லைகளுக்கு அப்பாலுள்ள நாடுகளுக்குத் தமது சேவையை நீட்ட விரும்பும் நாடுகள் சிற்றலையைப் பயன்படுத்துகின்றன. விரும்பிய எத்தூரத்திற்கும் செலுத்தக்கூடிய அலை இதுவொன்றுதான் இந்த வரிசையில் உலகம் தழுவிய சேவைகள் 1930 களில் ஆரம்பிக்கப்பட்டன. இதே காலப்பகுதயில் இரண்டாம் உலகப்போர் தொடங்கியபோது சிற்றலை ஒலிபரப்பு மேம்பாடடைந்தது.

எல்லாவகை வானொலி அலைகளும் நொடிக்கு 340 மீற்றர் வேகத்தில் செல்கின்றன. வேகம் ஒரே விதமாக இருப்பினும் செலுத்தும் விதம் வித்தியாசப்படுகின்றது. இதன் காரணமாக அவை சிற்றலை, மத்தியலை, பண்பலை என்று வகைப்படுத்தப்படுகின்றன. ஒலிபரப்பில் நான்கு முக்கிய கட்டங்கள் அடையாளம் காணப்படுகின்றன அலையாவன

1. ஒலி அலையை உருவாக்குதல் - GENERATION
2. அதை ஒலிபெருக்குதல் - AMPLIFICATION
3. காவிச் செல்லும் அலையுடன் அதைப் பிணைத்தல் - MODULATION
4. வானொலிப் பெட்டியில் கேட்டல் - RECEPTION

வானொலியை அலை என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தமே. கடல் அலையைப்போல் அது எழுந்தும் வீழ்ந்தும் செல்கின்றது. ஒலிப்பாதையில் ஒரு நேர்கோட்டைக் கீறினால் ஒலி அலை அதற்கு மேலாக எழுவதையும், அதே அலைகோட்டின் கீட்புறம் இறங்குவதையும் கற்பனையில் பார்க்க முடியும். மேலெழும் ஒலி அலைகளின் இரு சிகரங்களுக்கு இடையிலுள்ள இடைவெளித் தூரம் 37 தொடக்கம் 150 வரையான அடிகளாக இருந்தால் அது சிற்றலை என்று குறிப்பிடப்படும். குறுந்தூர இடைவெளி ஏற்படக்கூடிய விதத்தில் வானொலி நிலையத்தில் இருந்து ஒலி செலுத்தப்படுகின்றது.

செலுத்தப்படும் ஒலி அலைச் சிகரங்களுக்கு இடையிலுள்ள இடைவெளித்தூரம் கிட்டத்தட்ட 1800 அடியாக இருந்தால் அது மத்திய அலை என்று குறிப்பிடப்படும். குறிப்பிட்டதொரு வானொலி அலையினால் எவ்வளவு தூரம் செல்லமுடியும் என்பதைச் சூரியன்தான் இறுதியில் தீர்மானிக்கின்றது. தரைப்பரப்பில் இருந்து 60 தொடக்கம் 200 மைல் வரையிலான உயரத்தில் இருக்கும் அயன மண்டலத்திற்கு (IONOSPHERE) சூரியன் மின்சக்தி ஊட்டுகின்றது. அயன மண்டலம் ஒலியைப் பிரதிபலிக்கும் வான்பரப்பாகச் செயற்படுகின்றது.

அயனமண்டலத்தில் படும் வானொலி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பண்பலை ஒலிபரப்பு

அலைகள் மீண்டும் பூமிக்கு வருகின்றன. விரும்பிய இலக்கை நோக்கித் தெறிக்கக்கூடிய விதத்தில் அயனமண்டலத்தை நோக்கி ஒலி செலுத்தப்படுகின்றது. சிற்றலைகள் மிகவும் உயரமாக அயனமண்டலத்தில் மோதும் விதமாகச் செலுத்தப்படுவதால் அவை வான்அலைகள் (SKY WAVES)என்று அழைக்கப்படுகின்றன.

இதன்மேல் குறிப்பிடப்பட்ட நீள் அலைகள் (LONG WAVES) அயனமண்டலம் நோக்கி அனுப்பப்படுவதில்லை. அவை முழுக்க முழுக்க தரைப்பரப்பைத் தழுவிய அலைகள் என்ற காரணத்தால் தரை அலைகள் (GROUND WAVES) என்று பெயரிடப்பட்டுள்ளன. மத்திய அலை ஒலிபரப்பில் வான் அலை தரை அலை என்பன கலந்துள்ளன. இதே கலவை பண்பலையிலும் காணப்படுகின்றது. சிற்றலை ஒரு தனி ரகத்தைச் சேர்ந்தது. மத்திய அலையும் பண்பலையும் ஒரே இனத்தவை. இருப்பினும் இரண்டிற்கும் இடையில் ஒரு முக்கிய தொழில்நுட்ப வித்தியாசம் இருக்கின்றது.(இது பற்றிப் பிறிதோர் இடத்தில் பார்ப்போம்)

மிக நெடிய தூரம் செல்லக்கூடியது சிற்றலை. அதற்கு அடுத்தபடியான இடத்தில் மத்திய அலை இருக்கின்றது. மத்திய அலையையும் கணிசமானளவு தூரம் செலுத்தமுடியும். ஆனால் இரு காரணங்களுக்காக அப்படிச் செய்வதில்லை. ஒன்று மத்திய அலை உள்நாட்டுச் சேவைக்கே பெரும்பாலும் பயன்படுகின்றது. நாட்டின் தரை அளவு அதைக் கட்டுப்படுத்துகின்றது. இரண்டாவதாக தூரம் கூடும்போது அலையின் வலு குறைவதால் இரைச்சல் போன்ற ஒலிக் குழப்பங்கள் ஏற்படுகின்றன. பண்பலையை ஒரு குறிப்பிட்ட எல்லை வட்டத்திற்கு அப்பால் செலுத்த முடியாது.

வானொலிச் சேவையின் முக்கிய நோக்கங்களாவன.

1. மகிழ்வளிப்பு - ENTERTAINMENT
2. தகவல் அளிப்பு - NEWS & INFORMATION
3. தேசத்தின் குரல் - VOICE OF THE NATION
4. பிரசாரம் - PROPAGANDA
5. மக்கள் தொடர்பு - CONTACT WITH THE MASSES
6. நிலைய நேர்காணல் - INTERVIEWS (STUDIO BASED)
7. ஊர்சுற்றும் ஒலிவாங்கி - ROVING INTERVIEWS
8. நேர்முக வர்ணனை - மத உற்சவங்கள், விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்புவிழாக்கள், அரசியல் நிகழ்ச்சிகள் இத்தியாகி - RUNNING COMMENTARIES-RELIGIOUS SERVICES, SPORTS COMPETITIONS, AWARDS CEREMONIES, POLITICAL EVENTS ETC.
9. ஆவணப்படுத்தல் தேசியத் தலைவரின் உரைகள். இசை நிகழ்ச்சிகள் நேர்காணல்கள் - DOCUMENTAION
10. காலத்தின் பதிவு - RECORD OF THE TIMES.

சிற்றலை ஒலிபரப்புக்கள் பெரும்பாலும் பன்மொழி ஒலிபரப்புக்களாகவே அமைகின்றன. இந்தவகை ஒலிபரப்புக்களில் ஒவ்வொரு மொழிக்கும் 30 நிமிடங்களுக்கு மேல் ஒதுக்க முடிவதில்லை. ஆகக் கூடிய ஒரு மணி நேரம் மாத்திரமே இந்த சொற்ப நேரத்திற்குள் சொந்தநாட்டுத் தகவல்கள், தமது கண்ணோட்டத்தில் உலகச் செய்திகள், செய்தி ஆய்வுரைகள், ஒலிபரப்புச் செய்யும் நாட்டின் பிரசார நிகழ்ச்சிகள் போன்றவற்றை வெளியிட வேண்டும். இக்குறுகிய காலத்திற்குள் மகிழ்வளிப்பை பெருமளவில் அளிப்பது அசாத்தியம் சில சிற்றலை ஒலிபரப்பு நிலையங்கள் ஞாயிறு போன்ற நாட்களில் சில திரைப்பட பாடல்களையோ தமது நாட்டின் கிராமியப் பாடல்களையோ, வெளியிடுகின்றன. வெரித்தாஸ் வானொலி சாம் தோம் கலைத் தொடர்பு நிலையம் தயாரிக்கும் குறுநாடகங்களை நாளாந்தம் வெளியிடுகின்றது. கிறிஸ்தவ மதப் பிரசார வானொலியான இதனுடன் இந்தவகை நாடகங்கள் ஒத்துப் போகின்றன.

மத்திய அலை பண்பலை ஒலிபரப்புக்கள் மகிழ்வளிப்பை தமது பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளன. மேற்கூறிய 10 அம்சங்களில் மகிழ்வளிப்பு முதலிடம் வகிப்பதற்கு இதுவே காரணம். இதைவிட சிற்றலை ஒலிபரப்பில் இருந்து வேறுபட்ட, மிகவும் தனித்துவமான பிற அம்சங்கள் மத்திய அலை பண்பலை ஒலிபரப்புக்களில் உள்ளடங்குகின்றன.

இவ்விடத்தில் வானொலி பற்றித் தான்தோன்றிக் கவிராயர் பாடிய கண்டனக் கவிதையைப் பார்ப்போம்.

“சொல்வதற்கு ஒன்றுமிலாதோர் பேசக் கேட்ட, வல்லவரும் இடைமறித்துப் பேசாதிருக்க, நல்ல கருவி ஒன்றை விஞ்ஞானம் செய்ததற்கு, வானொலி என்று இட்டார் பெயர்”

வானொலி தொலைக்காட்சிகளில் வாசிக்கப்படும் செய்திகள் பத்திரிகைச் செய்திகளிலும் பார்க்கச் சுருக்கமானவை. ஆனால் இவை பத்திரிகைகளில் பிரசுரமாவதற்கு முன்பே வெளிவருகின்றன. செய்திகளை உடனடியாக அறிய விரும்புவோர் இவற்றை நாடுகின்றனர். இந்த ரகச் செய்திகளில் ஆழமும், பகுப்பாய்வுத் திறனும், பின்னணித் தகவலும் இருப்பதில்லை. விரிவான செய்திகளோடு நீளமான கட்டுரைகளும், பல்துறைசார் நிபுணர்களின் பத்தி எழுத்துக்களும் பத்திரிகைகளில் பிரசுரமாகின்றன.

பத்திரிகைகளில் படித்த செய்தி வானொலியில் முன்பு கேட்ட செய்தி என்று ஒதுக்க முடிவதில்லை. வேகமாக உருவாக்கப்பட்ட வானொலி தொலைக்காட்சி செய்திகளில் முழுமை இருப்பதில்லை. பத்திரிகைகள் அக்குறையை ஈடுசெய்கின்றன.

மிகக் கூடுதலான பிறமொழி ஒலிபரப்பைச் செய்யும் சிற்றலை வானொலி அமெரிக்க நிர்வாகத்தின் இராஜாங்கத் திணைக்களம் நடாத்தும் ‘வொய்ஸ் ஒப் அமெரிக்கா‘ (VOICE OF AMERICA) என்ற பிரசார வானொலியாகும் பன்மொழிச்சிற்றலை ஒலிபரப்பில் முன்னோடியான ஐக்கிய இராச்சியத்தின் பிபிசி, வானொலி வரலாற்றுடன், நெருங்கிய தொடர்புடையது.

அமெரிக்காவின் தனியார் நிறுவனமான வெஸ்ரிங் ஹவுஸ் கொம்பனி (WESTING HOUSE COMPANY ) 1920 இல் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட குறுகிய வீச்சுக்கொண்ட வானொலி சேவையை ஆரம்பித்தது. பிபிசி 1924 இல் தொடங்கப்பட்டு 1927 இல் முழு அளவில் செயற்படத் தொடங்கியது. பிபிசி அரசுக் கட்டுப்பாட்டில் இயங்கும் அரசுக்குச் சொந்தமான வானொலி ஆனால் ஒரு தனியார் கூட்டுத்தாபனம் போல் நிர்வகிக்கப்படுகின்றது.

பிபிசியிலும் பார்க்க ஒரு கால்நூற்றாண்டிற்கும் சற்றுக் குறைந்த வொய்ஸ் ஒப் அமெரிக்கா ஆங்கிலம் தவிர்ந்த 42 உலக மொழிகளில் ஒலிபரப்புகின்றது. இவ்வானொலி மூலம் தாம் நடத்தும் பிரசார நடவடிக்கையை அமெரிக்கா அரசு ‘பப்ளிக் டிப்புளமெசி’ (PUBLIC DIPLOMACY) என்று அழைக்கின்றது. ‘பொதுமக்கள் தொடர்பான இராச சந்திரம்’ என்பது பொருள். வொய்ஸ் ஒப் அமெரிக்காவுக்குப் பொறுப்பாக ஒரு உப-இராஜாங்கச் செயலர் (UNDER-SECRETARY OF STATE FOR PUBLIC DIPLOMACY)செயற்படுகிறார். இவருடைய முழுநேரக் கவனிப்பில் றேடியோ பிறீ யூரொப் (RADIO FREE EUROPE)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதாவது சுதந்திர ஐரோப்பிய வானொலி அதையொத்த ஆசியாவுக்கான வானொலி என்பனவும் இயங்குகின்றன.

உலகின் முதலாவது பறக்கும் வானொலி நிலையத்தை அமெரிக்கா அண்மையில் உருவாக்கியுள்ளது. தலிபான் படைகளுக்கு எதிரான தாக்குதல்களின்போது இந்த விமானம் பிரசாரப் போர் நடத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்டது. அமெரிக்க விமானப்படைக்குச் சொந்தமான சி 120 ரக ராட்சத சரக்கு விமானம் 70 மில்லியன் டாலர் செலவில் பறக்கும் வானொலி நிலையமாக மாற்றியமைக்கப்பட்டது.

ஆப்கான் வான்பரப்பில் பறந்தபடி இந்த விமானம், தலிபான்கள் தடைசெய்த திரைப்பட இசைப் பதிவுகளையும் அமெரிக்க சார்பு பிரசாரச்செய்திகளையும் ஒக்டோபர் 2001 தொடக்கம் பண்பலை வரிசையில் ஒலிபரப்புகின்றது. தலிபான்களின் உரையாடல்களை ஒட்டுக்கேட்டல், அவர்கள் வழங்கும் களமுனை உத்தரவுகளை ஒலித்தடை (JAMMING) செய்தல் போன்ற ஆயுதப் போருக்கு உதவும் நடவடிக்கைகளையும் இந்த விமானம் செய்கின்றது. இதற்கு 'கொமான்டோ சோலோ' (COMMANDO SOLO) என்று அமெரிக்கர்கள் பெயர் சூட்டியுள்ளனர். தனியாகப் போரிடும் கொமான்டோ படையாள் என்பது இப்பெயரின் அர்த்தம்.

அமெரிக்கப் பிரிட்டிஸ் விமானங்கள் குண்டுமாரி பொழிவதோடு ஆப்கான் மண்ணில் இலவச வானொலிப் பெட்டிகளையும் போடுகின்றன. இந்த நடவடிக்கையை சிஐஏ உளவமைப்பு மேற்பார்வை செய்கின்றது. தரைப்படைகள் மூலமாகவும் வானொலிப் பெட்டி விநியோகம் நடைபெறுகின்றது. மத்திய அலை, பண்பலை ஒலிபரப்புக்களை மாத்திரம் கேட்கக்கூடிய வகையில் இந்த வானொலிப் பெட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

சிற்றலை வரிசையில் பன்மொழி ஒலிபரப்புச் செய்வதில் வொய்ஸ் ஒப் அமெரிக்காவுக்கு அடுத்த இடத்தில் பிபிசி இருக்கின்றது. வொய்ஸ் ஒப் அமெரிக்கா தன்னைப் பிரசார வானொலியாக இனங்காட்டுகின்றது. நடுநிலையும், நம்பகத்தன்மையும் எமது கோட்பாடுகள் என்று பிபிசி பறைசாற்றுகின்றது. இருபகுதிக் கூற்றுக்களையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகவே பார்க்க முடியும்.

ருஷ்யா, சீனா ஆகிய நாடுகளும் பன்மொழிச் சிற்றலை ஒலிபரப்புச் செய்கின்றன. முன்பு இரு நாடுகளும் தமது தமிழ்ச் சேவைப் பணியாளர்களை இலங்கை, இந்திய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்தன. இன்று தமிழைத் துறைபோகக் கற்றுணர்ந்த இந்த நாடுகளைச் சேர்ந்தவர்களே தமிழ் ஒலிபரப்புச் செய்கின்றன. சீனாவின் தமிழ் ஒலிபரப்பை ஒரு சீனப் பேராசிரியர் நடாத்துகிறார். இவர் தமிழைக் கையாளும் விதம் தமிழர்களுக்கே முன்மாதிரியாக இருக்கின்றது. நியூசிலாந்து தொடக்கம் தென் அமெரிக்கா வரையிலான நாடுகளுக்கு இந்தியா சிற்றலை ஒலிபரப்பை ஆங்கிலம், ஹிந்தி, ஆகிய மொழிகளில் செய்கின்றது.

சிறீலங்காவின் சிற்றலை ஒலிபரப்பு மிகவும் சக்தி வாய்ந்தது. இவ்வளவு வலுமிக்க ஒலிசெலுத்திகள் (TRANSMITTERS) இப்பிராந்தியத்தில் வேறு நாடுகளிடம் இல்லை. இந்த நாட்டின் சிற்றலை ஒலிபரப்பை தெற்கு ஆசிய நாடுகள் யாவற்றிலும் கேட்க முடிகின்றது. இரண்டாம் உலகப் போரின்போது தெற்காசியாவுக்கான பிரிட்டிஷ் படைகளின் தலைமைச் செயலகம் கண்டியில் இயங்கியது. போர் முடிந்தபின் பிரிட்டிஷ் படைகள் பயன்படுத்திய ஒலிபரப்புக் கருவிகள் இலங்கைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன. இலங்கை வானொலி 1950 இல் தொடங்கப்பட்டது.

உலகின் அதியுயர் மலைச் சிகரமான எவரெஸ்ரில் கால்பதித்த முதலாவது மனிதர் சேர் எட்மன்ட் ஹிலரி (SIR EDUMUND HILLARY) என்பவராவர். மே 29, 1953 இல் அந்த மலை உச்சியில் நின்றபோது இலங்கை சிற்றலை ஒலிபரப்பை தான் எடுத்துச் சென்ற வானொலிப் பெட்டியில் கேட்டதாக ஹிலரி கூறுகிறார்.

ஒரு ஒலிபரப்பு நிலையத்தின் முக்கிய பணிகளில் செய்தி சேகரிப்பு முதலிடம் வகிக்கின்றது. மகிழ்வளிப்பு நிகழ்ச்சிகளை முன்கூட்டியே தயாரிக்கலாம் ஆனால் செய்திகளுக்கு அந்த வசதியில்லை. பத்திரிகை நிருபர்களைப்போல் வானொலிக்குச் செய்தி வழங்கும் நிருபர்களும் காணப்படுகின்றனர். தனது செய்தி சேகரிப்பிற்காக பிபிசி 42 செய்தி சேகரிப்பு அலுவலகங்களையும் 250 நிருபர்களையும் பிரித்தானியாவுக்கு வெளியே வைத்திருக்கின்றது. உலகின் மிகப் பரந்த செய்தி சேகரிப்பு நிறுவனம் என்று மார் தட்டுவதில் பீபீசி பெருமைப்படுகின்றது. செய்தி சேகரிப்பு, ஒலிபரப்புச் செயற்பாடுகளில் போட்டி அமைப்பாக அமெரிக்காவின் சி.என். என். நிறுவனம் அமைகின்றது.

பத்திரிகைகளுக்குச் செய்தி வழங்குவதே தமது தொழிலாகக் கொண்ட பிரித்தானியாவின் றோயிற்றர்ஸ் (REUTERS) பிரான்சின் ஏ.எப்.பி.(AGNCY FRANCE PRESSE-AFP) இந்தியாவின் பி.ரி.ஐ(PRESS TRUST OF INDIA - PTI ) சீனாவின் சின்குவா(XINHUA A NEWS AGENCY) அமெரிக்காவின் ஆர்.பி.ஐ (RADIO PRESS INTERNATIONAL - RPT) போன்றவை வானொலிகளுக்குச் செய்தி வழங்குகின்றன. சிறீலங்காவின் வானொலிச் செய்தி வழங்கும் நிறுவனம் லங்காபுவத் (LANKA PUVATH) எனப்படும். அமெரிக்கத் தூதரகங்களில் இருந்தும், சிஐஏ போன்ற உளவமைப்புக்களில் இருந்தும், மேற்கூறிய செய்தி நிறுவனங்களில் வொய்ஸ் ஒப் அமெரிக்கா தனது செய்திகளைப் பெறுகின்றது. உலகின் வானொலி செய்தி முகவர்கள் பலர், பீபீசி உட்பட உளவுப் பணியிலும் ஈடுபடுகின்றது.

சிற்றலை ஒலிபரப்பின் எதிர்காலம் சூனியமாக இருக்கிறது. இன்னும் சில வருடங்களில் அது மறைந்துவிடுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. அதற்கான சில காரணங்களை இங்கு பார்ப்போம்.

1. சிற்றலை ஒலிபரப்பு நிலையங்களை பொதுமக்கள் பாவனையில் இருக்கும் வானொலிப் பெட்டிகளில் தேடிப் பிடிப்பது மிகவும் கடினம். வழமையாக நாம் ஓரிரு நிலையங்களை மாத்திரம் கேட்டு வருகிறோம். தேடிப் பிடிக்கும் கடினம் காரணமாக வேறு ஒலிபரப்பு நிலையங்கள் எமது அறிவிற்கு அப்பால் கிடக்கின்றன.

2. அயனமண்டலத்தின் மீதான சூரியனின் தாக்கம் முழுமையாக இருக்கிறது. சூரியன் வெளியேற்றும் மின் அணுக்கள் அயன மண்டலத்தில் காந்தப் புயலை ஏற்படுத்துகின்றன. இதன் காரணமாக சிற்றலை ஒலிபரப்பு தெளிவாக இருப்பதில்லை. சூரியனின் தாக்கம் மத்திய அலை ஒலிபரப்பிலும் ஓரளவுக்கு இருக்கின்றது. சூரியப் புள்ளிகள் ஏற்படும் காலத்தில் சிற்றலை ஒலிபரப்புடன் கூடப்பிறந்த இரைச்சல்களும், ஒலிக் குழப்பங்களும் மேலதிகமாகின்றன. சில சமயங்களில் ஒலிபரப்பு தடைப்படுகின்றது.

3. சிற்றலை ஒலிபரப்பு பகலில் மோசமாகவும் இரவில் ஓரளவு திருத்தமாகவும் இருப்பதற்கு அயன மண்டலம் காரணமாக அமைகின்றது. பகல் உயரத்திலும் பார்க்க அயன மண்டலத்தின் இரவு உயரம் கூடுதலானது. அதாவது அயன மண்டலம் இரவில் கூடுதலான உயரத்திற்குச் சென்றுவிடும் இதன் காரணமாக அயன மண்டலத்தை நோக்கி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பண்பலை ஒலிபரப்பு

அனுப்பும் சிற்றலைகளை கூடுதலான தூரத்திற்குச் செலுத்த முடிகின்றது. இதனால் வானொலிப் பெட்டிகளில் சிற்றலையை இரவில் பிடிப்பது சற்று எளிதாகின்றது.

4. கண்டத்திற்குக் கண்டம் நேர வித்தியாசம் காணப்படுவதால் சிரமம் ஏற்படுகின்றது. எமக்குச் சௌகரியமான நேரத்தில் சிற்றலை ஒலிபரப்பைக் கேட்க முடிவதில்லை. ஒரு குறிப்பிட்ட சிற்றலை ஒலிபரப்பைக் கேட்க முடிவதில்லை. ஒரு குறிப்பிட்ட சிற்றலை ஒலிபரப்பை எது விதப்பட்டும் கேட்கத்தான் வேண்டுமென்றால் நேரக் கணிப்பு அலகு மற்றும் பதிவு செய்யும் அலகு பொருத்தப்பட்ட வானொலிப் பெட்டியை கொள்வனவு செய்யவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. நாம் வேலைக்குச் செல்லும்போது அல்லது ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது மேற்குறித்த அலகுகள் (TIMER & RECRDER) பொருத்தப்பட்ட வானொலிப் பெட்டி நாம் விரும்பிய ஒலிபரப்பை ஒலி நாடாவில் பதிவு செய்து வைத்திருக்கும் எமது வசதிக்கேற்ப ஒலி நாடாவில் இருந்து ஒலிபரப்பைக் கேட்கலாம். இதெல்லாம் பணச்செலவு என்பதை மறுக்கமுடியாது.

5. புலம்பெயர்ந்த தமிழர்கள் திரளாக வாழும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடாவில் தமிழர்களால் நடாத்தப்படும் தனியார் வானொலி நிலையங்கள் காணப்படுகின்றன. வாடிக்கையாளர்களின் சௌகரியம் கருதி இவை சிற்றலை ஒலிபரப்புக்களைக் கேட்கும் சிரமங்களை நிவர்த்தி செய்கின்றன. உதாரணத்திற்கு வெரித்தாஸ் தமிழ்ப் பணியைப் பதிவு செய்து மறு ஒலிபரப்புச் செய்கின்றன. இரண்டு இலட்சம் ஈழத் தமிழர்கள் வாழும் கனடாவில் ஐந்து தமிழர்களுக்குச் சொந்தமான பண்பலை வானொலி நிலையங்கள் உள்ளன.

'இன்பத் தமிழ் ஒலி' என்ற பெயரில் ஒரு தமிழ் வானொலி நிலையம் அவுஸ்திரேலியாவில் 24 மணி நேரமும் இயங்கிக்கொண்டிருக்கிறது. கனடா, ஜேர்மனி, பிரான்சு போன்று இயங்கும் தமிழர்களுக்குச் சொந்தமான தொலைக்காட்சி நிலையங்களும் வானொலி நிலையங்களும் காணப்படுவது கண்கூடு. இந்து மாகடற் தீவுகளான செய்செலசில் (SEYCHELIES) சிறு வணிகம் செய்யும் தஞ்சாவூர் தமிழர்கள் தமிழ்ப்பணியைப் பதிவு செய்து தமது வணிக நிலையங்களில் ஒலிக்கச் செய்கின்றனர். பர்மாவின் இராணுவ ஆட்சியாளர்கள் இடித்துத் தள்ளியபின் எஞ்சியுள்ள இந்துக் கோயில்களில் ஆராதனை முடிந்தபின் தமிழ்ப்பணி பக்திபூர்வமாக ஒலிக்கவிடப்படுகின்றது.

6. 1947 தொடக்கம் ஐநாவின் அலகுகளில் ஒன்றான அனைத்துலக தொலைத்தொடர்பு ஒன்றியம் (INTERNATIONAL TELECOMMUNICATIONS UNION) புதிய சிற்றலை வானொலிகளின் தோற்றத்தை மட்டுப்படுத்தியுள்ளது. இடநெருக்கடிதான் காரணம் இன்னும் பலநாள் தாக்குப்பிடிக்காத சிற்றலை வரிசையில் இடம்பிடிப்பதற்கு நாம் முண்டியடித்துக்கொண்டு முன்செல்வதில் அர்த்தமில்லை.

7. பீபீசி தமிழோசையின் இணையதள முகவரி ஒவ்வொருநாளும் ஒலிபரப்பாகின்றது. இன்ரர்நெற் தொடர்புடையோர் தமிழோசையை எந்தநேரமும் கேட்கலாம். காலம் பிந்திய ஒலிபரப்புக்களையம் கேட்கும் வசதியுண்டு. மத்திய அலை பண்பலை ஒலிபரப்புக்களையும் இணையதளம் உருவாக்கி வைப்பிலிட முடியும். இவை இணையத்தளத்தில் இருப்பின் உலகின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் அவற்றைப் பெற்றுக்கொள்ளும் வசதி கிடைக்கின்றது. சிற்றலையின் தேவை இல்லாமற்போகும் வாய்ப்பு நிறைய உண்டு. இணையதளத்தில் வைக்கப்பட்ட ஒலிபரப்புக்களை சூரியன் குழப்பியடிக்கும் சந்தர்ப்பம் கிடையவே கிடையாது. பண்பலை, மத்திய அலைகளை இணையத்தளத்தில் சேர்க்கும்போது அனைத்துலக தொலைத்தொடர்பு ஒன்றியத்திடம் அனுமதி கேட்கவேண்டிய அவசியமும் இல்லாதொழிகின்றது.

8. செய்மதி மூலம் வெளிநாட்டுத் தொலைக்காட்சி பார்ப்பதுபோல், வானொலி கேட்கவும் முடியும். இதற்கான தொழில்நுட்பம் இப்போது உருவாகி வருகின்றது. எமது வீட்டுப்பாவிப்பில் இருக்கும் வானொலிப் பெட்டியுடன் ஒரு மேலதிக 'அன்றனாவைப்' பொருத்தினால் போதும், செய்மதித் தொடர்பு கிடைத்துவிடும்.

இணையத்தளத்தில் சேர்க்கப்பட்ட வானொலி நிகழ்ச்சிகள் பெற்றுக்கொள்வதற்கு உதவும் பிரத்தியேக வானொலிப் பெட்டிகள் விற்பனைக்கு வந்துள்ளன. ஜப்பானின் நாஷனல், அமெரிக்காவின் ஹியூலெற் பக்காட் (HEWLETY-PACKARD) போன்ற நிறுவனங்கள் அவற்றைத் தயாரிக்கின்றன. விலைகள் சற்று அதிகம்.

ஒரு வானொலி நிலையத்தின் செலுத்திக் கோபுரத்தில் இருந்து வானொலி அலைகள் வெளிவருகின்றன. செலுத்தப்படவேண்டிய நிகழ்ச்சியை நிலையத்தின் மின்சார ஒலிபெருக்கி மூலம் ஒலியை மின்னொலியாக மாற்றுகிறார்கள். அடுத்த கட்டமாக இன்னுமொரு ரக மின்சக்தியை உருவாக்கி ஒலிபெருக்கியில் இருந்து வெளிவந்த மின்னொலியுடன் கலப்புச் செய்கிறார்கள். இரண்டாவது ரக மின்சக்தி அலை மிகவும் சக்தி வாய்ந்தது. மின்னொலியை காவிச் செல்ல இது உதவுகின்றது. ஆகையால் இதற்கு 'காவி அலை'(CARRIER CURRENT) என்று பெயரிடப்பட்டுள்ளது. மின்னொலியையும் காவி அலையையும் இணைக்கும் செயற்பாடு மொடுயூலேசன் (MODULATION) எனப்படும்.

மத்திய அலை, பண்பலைகள் ஒரே இனத்தவை. மொடுயூலேசன் செய்யும் வீதத்தால் அவை வேறுபடுகின்றன, வேறு பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன.

1. மத்திய அலைக்கு ஆங்கிலம் 'அம்பினிற்றியூட் மொடுயூலேசன்' (AMPLITUDE MODULATION) இரு சொற்களின் முதலெழுத்துக்களான 'ஏ.எம்'(A.M) மத்திய அலையைக் குறிக்கும் ஒலியின் ஏற்றத்தாழ்வை அதாவது செலுத்தப்படும் ஒலியின் தன்மைக்கு ஏற்ப கூடிக் குறைவதை அம்பிளிற்றியூட் என்பார்கள். ஒலியின் தன்மை கூடிக் குறைந்து செல்வதற்கு அனுமதிக்கும் அதேவேளை ஒலியின் அடுக்கை ஒரே சீராக கட்டுப்படுத்தி வைத்திருக்கும் முறைமை ஏ.எம் எனப்படுகின்றது. மத்திய அலையின் சூட்சுமம் இதுதான்.

2. ஒலியின் ஏற்றத் தாழ்வை ஒரே சீராக வைத்துக்கொண்டு செலுத்தப்படும் ஒலியின் ஏற்றத் தாழ்வுக்கு ஏற்றவிதத்தில் ஒலி அடுக்கு கூடிக் குறைந்து செல்வதற்கு அனுமதிக்கும் முறைமை ஆங்கிலத்தில் 'பிறிக்கிவன்சி மொடுயூலேசன்' (FREQUENCY MODULATION) எனப்படும். இரு சொற்களின் முதலெழுத்துக்கள் எப்.எம் (F.M) பண்பலையைக் குறிக்கும் பிறிக்கிவன்சி என்றால் ஒலி அடுக்கு எனப் பொருள் கொள்ளலாம்.

வானொலி ஒலிபரப்பின் எதிர்காலம் பண்பலை ஒலிபரப்பில் இருப்பதாக இது பற்றிய ஆய்வு நூல்கள் தெரிவிக்கின்றன. எதிர்காலத்தில் அனைத்துலக மட்டத்திலான ஒலிபரப்பு 'பண்பலைகளின் இணைப்பாக' (F.M NETWORK) இருக்குமென நம்பப்படுகின்றது. இதைக் கருத்தில் கொண்டுள்ள புதிதாக வானொலி நிலையங்களைத் திறக்கும் நாடுகளும் அமைப்புக்களும் பண்பலை ஒலிபரப்பையே நாடுகின்றன. இத்தொடர்பில் இன்னுமொரு முக்கிய விடயத்தை நோக்க வேண்டும். தொலைக்காட்சிப் படங்களும் அதனோடிணைந்த ஒலிகளும் இரு வேறு அலைகள் மூலம் செலுத்தப்படுகின்றன. படங்கள் மத்திய அலை மூலமாகவும் ஒலி பண்பலை மூலமாகவும் பரப்பப்படுகின்றன.

## மத்திய அலை பண்பலைகளின் விசேட பயன்பாடுகள்

1. இந்த ரக ஒலிபரப்புக்கள் சமூக மேம்பாட்டிற்கும், மொழி வளர்ச்சிக்கும், மக்கள் விழிப்புணர்ச்சிக்கும் உதவுகின்றன. சமூக மாற்றத்திற்கான கருத்தாக்கத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாக்குகின்றன. சமூகச் சீர்குலைவுகளைத் தடுக்கும் கருவியாகச் செயற்படுகின்றன.

2.'விஞ்ஞானம், பொதுக்கல்வி, தொழில்நுட்பம்' ஆகிய மூவகைத் துறைகளில் உயர்வடைய வழிகாட்டுகின்றன. மொழிவளர்ச்சிக்கு அளப்பரிய பணியாற்றுகின்றன.

3. காலநிலை முன்னறிவிப்பு மூலம் விவசாயத்திற்கும், மீன்பிடிக்கும் உதவுகின்றன. மக்கள் உயிர்காப்புக்கும், நல்வாழ்வுக்கும் உறுதுணையாக அமைகின்றன. காலநிலை வானொலி முன்னறிவிப்பு நீண்டகால, நடுத்தர மற்றும் குறுகியகால எதிர்வுகூறல் என மூவகைப்படும்.

நீண்டகால முன்னறிவிப்பு விவசாயத்திற்கு அத்தியாவசியம். வறட்சி வரவிருப்பதை முன்கூட்டியே அறிந்தால் நீர் கூடுதலாகத் தேவைப்படும் பயிர்களைத் தவிர்த்து, குறைந்தளவு நீர்தேவைப்படும் இனங்களைப் பயிரிடலாம். அதைப்போல் பெருமழை வரலாம் என அறிந்தால் அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கலாம். தரமான உலக வானொலிகள் யாவும் காலநிலை முன்னறிவிப்பிற்கு முன்னுரிமை கொடுக்கின்றன. அவை வேளாண் பரிந்துரைகளும் செய்கின்றன.

4. பருவகால மழையின் அளவு, குளங்களின் கொள்ளளவு போன்ற தரவுகளை காலத்திற்குக் காலம் வெளியிடுவது பொறுப்புவாய்ந்த வானொலி நிலையத்தின் கடமையாகும்.

5. கடல் கொந்தளிப்பு புயல் போன்றவற்றை முன்கூட்டியே அறிவிப்பதால் அநாவசியமான மீனவர் உயிரிழப்பதை தடுக்கலாம் கரையோரம் வாழ்மக்கள் பாதுகாப்பான இடம் செல்லவும் ஏதுவாக அமையும். அடிக்கடி புயலும், கடும்மழையும், கடல் கொந்தளிப்பும் ஏற்படும் பங்களா தேசமக்கள் இதுசம்பந்தமான வானொலி ஒலிபரப்பையே நம்பி உயிர்வாழ்கின்றனர்.

வானொலி நிலையங்களை அரசுடமை, தனியார் உடமை என்று வகைப்படுத்தலாம். ஆசிய ஆபிரிக்க நாடுகளின் அநேக வானொலி நிலையங்கள் அரசுடமையாக விளங்குகின்றன. இவை அரசின் குரலாக ஒலிக்கின்றன. அவற்றிற்குரிய நிதி அரசினால் வழங்கப்படுகின்றது. பிபிசி வானொலி/தொலைக்காட்சி நிலையத்தின் செலவில் 95 வீதம் பிரித்தானிய மக்கள் செலுத்தும் தொலைக்காட்சி உரிமக் கட்டணத்தில் இருந்து பெறப்படுகின்றது. பிபிசியின் ஒலி, ஒளி நாடாக்கள் பெருமளவில் விற்பனையாகின்றன. அமெரிக்காவில் அரசுடமை வானொலி/தொலைக்காட்சி நிலையங்கள் கிடையாது. வொய்ஸ் ஒப் அமெரிக்கா விதிவிலக்காக அமைகின்றது. அது வெளிநாட்டுப் பிரசாரத்திற்காக இராஜாங்க செயலகத்தின் ஒரு அங்கமாகச் செயற்படுகின்றது.

தனியார் முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட பண்பலை வானொலி நிலையங்கள் மேற்கின் பெரு நகரங்களில் பெருமளவில் காணப்படுகின்றன. உலகமயமாக்கலின் பிரதிபலிப்பாக ஆசிய ஆபிரிக்க பெரு நகரங்களிலும் இவை தோன்றியுள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட பண்பலை வானொலி நிலையங்கள் உள்ள பெருநகரங்களில் மக்களை கவர்ந்திழுப்பதில் கடும் போட்டி நிலவுகின்றது. இந்த ரக வானொலி நிலையங்கள் தமது வருமானத்திற்கு விளம்பரதாரர்களை நம்பியிருக்கின்றன. மக்கள் பெருமளவில் ஆதரவு நல்கும் தனியார் வானொலிக்கு கூடுதலான விளம்பர வாய்ப்புக்கள் வர இடமுண்டு.

விளம்பரதாரர்களை வரச்செய்வதற்கு மக்கள் ஆதரவைப் பெருக்கவேண்டிய கட்டாயம் தனியார் வானொலி/தொலைக்காட்சி நிலையங்களுக்குண்டு. இவை வழங்கும் நிகழ்ச்சிகள் மிகச் சிறந்தவையாக இருத்தல் அவசியம். நிகழ்ச்சிகள் தரம் குறையும்போது, மக்கள் ஆதரவு குறையும். மக்கள் ஆதரவு குறையும்போது விளம்பரதாரர்களின் வருகை குறையும். இதைத் தடுப்பதற்காக மக்கள் ஆதரவின் நிலையை அளவீடு செய்யவேண்டியதாகின்றது.

மக்கள் ஆதரவு ஏற்றத் தாழ்வுகளைக் கணிப்பீடு செய்வதற்கு கருத்துக் கணிப்பு மூன்றுவிதமாகச் செயற்படுகின்றது. தொலைபேசி மூலம் மக்களைத் தொடர்பு கொண்டு விருப்பு வெறுப்புக்களை அறிகிறார்கள். அல்லது வீடுவீடாகச் சென்று, நேரடியாகப் பேசுகிறார்கள். வீட்டுக்காரர் அனுமதியுடன் ஒரு விசேட கருவியை வானொலி/தொலைக்காட்சிப்பெட்டிகளுடன் பொருத்துகிறார்கள். இக்கருவி வழங்கும் தரவுகளின் அடிப்படையில் கருத்துக்கணிப்பு நடைபெறும். எந்த வானொலி/தொலைக்காட்சி நிலையத்தை நாடுகிறார்கள், எந்த நிகழ்ச்சியைக் கூடுதலாகக் கேட்கிறார்கள்/பார்க்கிறார்கள் என்ற விபரங்களை இக்கருவி பதிந்து வைத்திருக்கும்.

அனேகமாக கருத்துக் கணிப்பின் அடிப்படை வினாக்கள் மூன்றாக அமையும்.

1. நீங்கள் விரும்பி நாடும் வானொலி/தொலைக்காட்சி நிலையம் யாது?
2. உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி என்ன? அதில் தோன்றும் நடிக நடிகைகளில் யாரைக் கூடுதலாக பிடிக்கும்-வரிசைப்படுத்துங்கள், பார்க்கலாம்.
3. உங்களுக்குப் பிடித்த செய்தி வாசிப்பாளர்/அறிவிப்பாளர் யார். உங்கள் விருப்பத்தின் காரணம் என்ன?

ஒரு வானொலி/தொலைக்காட்சி நிகழ்ச்சியை அளவீடு செய்யும் செயற்பாடு 'றேற்றிங்' (RATING) எனப்படும். றேற்றிங் குறைந்த நிகழ்ச்சிகள் உடனடியாக நிறுத்தப்படுகின்றன. வேறு ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகள் புகுத்தப்படுகின்றன. றேற்றிங் அளவீடு கருத்துக் கணிப்புக்கள் மூலம் செய்யப்படுகின்றன. உயர்தர றேற்றிங் உள்ள நிகழ்ச்சிகளை நிறையப் பணம் கொடுத்து விளம்பரதாரர்கள் 'தத்து' எடுக்கிறார்கள் இது 'ஸ்பொன்சர்சிப்' (SPONSORSHIP) எனப்படும் கொள்வனவுத் தீர்மானங்களை விளம்பரங்கள் நிர்ணயம் செய்கின்றன என்பது பொதுவிதி.

றேற்றிங் குறைந்த நிகழ்ச்சி நிறுத்தப்படுவதுபோல் மக்கள் ஆதரவு இல்லாத செய்தி வாசிப்பவர் அல்லது நிகழ்ச்சி அறிவிப்பாளர் பதவி நீக்கம் செய்யப்படுகிறார். ஒரு வானொலி/தொலைக்காட்சி நிலையத்தின் உயிர்நாடி அந்த நிலையத்தின் மேற்கூறியவர்களே, மக்கள் ஆதரவை இழந்த செய்தி வாசிப்பாளர்கள் மற்றும் நிகழ்ச்சி அறிவிப்பாளர்கள் பணி நீக்கம் செய்யப்படுவது மேற்கின் சாதாரண நிகழ்ச்சி இவர்களுக்கு அப்படியானதொரு நெருக்கடி இருக்கின்றது.

ஒரு வானொலி அல்லது தொலைக்காட்சி நிலையம் மேற்கூறிய நபர்களில் ஒருவரால் அடையாளம் காணப்படுவதும் உண்டு. அமெரிக்காவின் கொலம்பியா புறாட்காஸ்ரிங் சேர்வீசின்(COLUMBIA BROADCASTING SWRVICES CBS) வால்ற்றர் குரொன்கைற் (WALTER CORNKITE), இலங்கை வர்த்தக ஒலிபரப்பின் எஸ்.பீ மயில்வாகனம் போன்றோர் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்.

உலகின் பல பாகங்களில் சிறந்த வாசிப்பாளர்/அறிவிப்பாளர்களைத் தெரிவுசெய்யும் போட்டிகள் வருடாவருடம் நடைபெறுகின்றன. வெரித்தாஸ் வானொலி 'உண்டா' என்ற விருதை வழங்குகின்றது. இலத்தீன் மொழியில் வெரித்தாஸ் (VERITAS) என்றால் உண்மை. உண்டா என்றால் (UNDA) என்றால் அலை என்று பொருள். இலங்கை வானொலி தமிழ்ச்சேவையின் சற்சொருபவதி நாதன், தெலுங்கு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொடருதேனினும் முடித்து விடுவதாய்...

அது.....
முடிவேதுமின்றித் தொடருதேனினும்
முடிவைச் சிறிது சிறிதாய் எழுதும்.
முடித்துவிடுவதாய், தோலைத்து விடுவதாய்
முழக்குவாய்; முயலுவாய்— அனால்
முடிவுதான் வரவில்லை— அதற்குளுன்
முடிவே வந்துவிட்டாலும்
உன்னால் முடிக்க முடியுமாவெனக்
குரல்கள் எழுகின்றன.
குரல்வளையை நசிப்பாய்— குரலையொடுக்க
உன்னால் முடிந்தததுவே.

பு. சத்தியமூர்த்தி



# உன் பதிப்புகள்

நீண்ட உன் பயணத்தை ஒரு தடவை திரும்பிப்பார்
தொலைவிலும் கூட சிறிதாய் மிகச்சிறிதாய்
தெரியும் உன் சுவடுகள்.
ஆம் அவைதான் உன் வாழ்வின் பதிப்புகள்
அந்தச் சாலையினோரம் அவற்றுடன் தெரிகிறதே
ஒரு சில நிழல்கள்
அவை உன் இளைப்பாறும் இடங்களா?
இல்லை. அவைதான் உன்
முயற்சியின் தடைகள்.
ஆழமாகப் பதிந்து கொள்ளும்
உன் சுவடுகள் நிச்சயம்
முட்களைக் களைந்தே செல்லும்.
நல்லதோர் பாதையினை
புதிதாய் அமைக்கும்
அவ்வழியே இன்னும் பல சுவடுகள்.

சுதா

## பண்பலை ஒலிபரப்பு ......

சேவையின் மீனாட்சி பொன்னுத்துரை உண்டா விருதைப் பெற்றுள்ளனர். இதே வானொலியின் முன்பு பணியாற்றிய பி.எச். அப்துல் ஹமீத் தெற்காசியாவின் சிறந்த வானொலி அறிவிப்பாளராகத் தெரிவாகியுள்ளார்.

வாசிப்பாளர்களுக்கும் அறிவிப்பாளர்களுக்கும் இருக்கவேண்டிய அடிப்படைப் பண்புகளை ஆய்வுநூல்கள் வரிசைப்படுத்துகின்றன. மொழிவளம், குரல்நயம், உச்சரிப்புத் திறன், பதற்றமின்மை, சமயோசிதம், உணர்ச்சிக் கட்டுப்பாடு, சொல்லாட்சி, உயர்ந்த கல்வித் தகமை, தொடர்பாடல் திறமை என்பன இருக்கவேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

மேற்கின் தனியார் வானொலிகள் கிட்டத்தட்ட முழுநாளும் இயங்கிக்கொண்டிருந்தாலும் கூடுதலான மக்கள் வானொலி கேட்கும் நேரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. தொலைக்காட்சிச் சேவையிலும் இது காணப்படுகின்றது. நாளொன்றுக்கு மிகக் கூடுதலானோர் வானொலி கேட்கும் நேரம், தொலைக்காட்சி பார்க்கும் நேரம் என்பனவற்றை 'பிறைம் ரைம்' (PRIME TIME) அதாவது சிறந்த நேரம் என்று அழைக்கிறார்கள்.

மேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவின் பிறைம் ரைம் அட்டவணை பின்வருமாறு:

வானொலி -
காலை 6.00 தொடக்கம் காலை 10.00 வரை
மாலை 4.00 தொடக்கம் மாலை 8.00 வரை

தொலைக்காட்சி - காலையில் இல்லை
மாலை 7.30 தொடக்கம் மாலை 11.00 வரை

இந்த அட்டவணை அடிப்படையில் நிகழ்ச்சிகளின் தன்மையும் தரமும் உயர்த்தப்படுகின்றன. இதேநேரங்களில் விளம்பரம் செய்வோர் கூடுதல் கட்டணம் செலுத்தவேண்டும். அத்துடன் அதியுயர் அரசியல் தலைவர்கள் இந்த நேரங்களில்தான் தமது மக்களுக்கான முக்கிய உரைகளை நிகழ்த்துவார்கள்.

தொழில்நுட்ப வளர்ச்சியின் போக்கை அவதானிக்கும்போது தமிழீழத்தின் பண்பலை வானொலி ஒலிபரப்பு போதுமானதாகத் தோன்றுகிறது. நாம் நிற்கும் இடத்தில் நின்று தரத்தை உயர்த்திக்கொண்டு போகத் தொழில் நுட்பம் எம்மைத் தேடிவரும் என்பது உறுதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓர் ஜீவனின் பாடல்

என்னை மீறி உனக்குள்
அடங்கி துளிர்த்துப் பெய்கிறது
எந்தனது காதல்
உயிர் உறையும் அடியாயும் வரையில்
உச்சரிக்கப்படும் உனது பெயர்
வேனில் காலத்தை ஞாபகப்படுத்தும்

கடற்கரைப் பரப்பில்
கால் தடம் அழிக்கும்
இதழ்கள்
முத்தமிடக் கேட்ட உனது பாதம்

மூன்றாம் பிறையை
நினைவுக்கு இழுக்கும்
உனது புன்னகை
தென்றல் தட்ட மொட்டு விரிக்கும்
உந்தன் பேச்சொலி
இவை என்னை விலக்கி
கடந்து போயின
முகில் வெளி நோக்கி

உயிர் மூச்சு கனன்றபடி
வெளிப்படுகிறது சுவாசம்
உன் நினைவலையில்
பெருக்கெடுத்து இமையில்
ஒழுக்குகிறது. ஆறு
நான் தனிமை வெளியில் தள்ளப்பட்டு
உடைந்து போன முட்டைக் கோதின்
துணைக்கு அமர்கிறேன்.

என் இதயப் பாறை மீதில்
உந்தன் நினைவுச் சொல்லை
மீள மீள ஊன்றிப் பதித்தாலும்
இனி எதுவும் சாத்தியமில்லை
சாதிக்க முடியாமல் தம் பீரங்கிகளை
பின் தள்ளிய நகங்கள்
கிளறித் தாட்ட மண்குழி தாண்டி
நீ மீண்டு வருதல் எப்போதுமே
சாத்தியமில்லை.

**விஷ்ணு**



## மூன்று கவிதைகள்

1
பூவை பொத்தினேன்
கைக்குள் சிறகடிக்கிறது
அடவண்ணாத்திப்பூச்சி
2
சொந்தவூரில்
சுதந்திரமாய் நடந்தவன்
அதோ ஒற்றைக்காலில்
3
தலையணைக்குப் பஞ்சில்லை
தலைக்கு மேலே பஞ்சுக் கூட்டம்
ச்சே வெண்முகில்

த.டே. கிஸ்காட்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மண்டைதீவு
கலைச்செல்வி

# ஏக்கம்



ஸ்கந்தபுரத்தின் காட்டை அண்டிய ஓர் பகுதி அது. சூரியக் கதிரோடு யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னி நோக்கி இடம்பெயர்ந்து வந்தவர்கள் கிளிநொச்சியிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் வாழ்ந்தனர். பின்பு கிளிநொச்சி இராணுவ நடவடிக்கையின்போது அங்கிருந்தும் இடம்பெயர்ந்து வந்து இந்தப் பகுதியில் காடுகள் வெட்டி சிறிய சிறிய குடிசைகள் அமைத்து இருக்கிறார்கள். மற்றவர்களின் காணிகளுக்குள் குடியேறி அவர்களுக்கு கஷ்டத்தைக் கொடுக்காமல் தாங்கள் இருக்குமட்டும் இருந்துவிட்டுப் போவோம் என்ற எண்ணத்தில் உருவானதுதான் இந்தச் சிறிய குடியிருப்பு. சிலரின் குடிசைகளின் கூரைகள் கிடுகுகளால் வேயப்பட்டும், சிலரின் கூரைகள் தரப்பாளினால் மூடிக்கட்டப்பட்டும் இருக்கின்றன. சில கூரைகள் காற்றின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் கிள்ளி எறியப்பட்டும் ஓட்டை ஒடிசலாகவும் இருக்கின்றன. எல்லோரும் தத்தம் ஊரில் வசதியாக இருந்தவர்கள்தான். தொடர்ந்தும் துரத்தும் இடப்பெயர்வுகள் அவர்கள் வாழ்க்கையில் திணிக்க முடியாத சோகத்தை திணித்துவிட்டது உண்மை.

அன்று மாத்திரம் அரவிந்தனுக்கு உறக்கமே வரவில்லை. வழமைக்கு மாறாக புரண்டு புரண்டு படுத்தான். அடிக்கடி பவானி ரீச்சரின் முகம் நினைவுக்கு வந்துபோனது. மனம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழம்பித் தவித்தது. எங்கும் ஒரே அமைதியாக இருந்தது. அன்றாடம் தூரத்தே கேட்கும் ஷெல் சத்தம்கூட அன்று இல்லை. அந்தச் சின்னம் சிறிய குடிசையில் அம்மா, தம்பி இருவரையும் அணைத்துக்கொண்டு படுத்திருக்கிறார். அப்பாவும் ஓர் மூலையில் சுருண்டுபோய்... அம்மா அடுப்புக்குள் ஓர் காட்டு விறகு ஒன்றை பற்ற வைத்துவிட்டுத்தான் படுப்பாள். அது மெதுவாக எரிந்து அவளோடு ஒளிபரப்பி அந்தக் குடிசைக்கு வெளிச்சம் கொடுக்கும் மண்ணெண்ணை இல்லாத காரணத்தாலும், வசதியின்மையாலும், காட்டுப் பகுதியில் வெளிச்சம் இல்லாமல் தூங்கக்கூடாது என்பதாலும் அம்மா இந்தப் பழக்கத்தை வழமையாக்கிக்கொண்டார். அந்தச் சின்ன வெளிச்சத்தில் எல்லோருடைய முகங்களும் மங்கலாகத் தெரிகிறது. கால் நீட்டிப் படுக்கமுடியாத குடிசை அது. வாழ்க்கையே வேண்டாம் என்று விரக்கியின் விளிம்புக்கே வந்துவிட அப்பாவின் அன்பு முகம் அரவிந்தனுக்கு கண்ணீரையே வரவழைத்தது.

ஐந்து வயதுக் குழந்தையாக அப்பா, அம்மாவோடு தீவகத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரும்போதும், அங்கு தொடர்ந்து நான்கு வருடங்கள் வாழ்ந்தபோதும் கூட அவனுக்கு இடப்பெயர்வு பெரிய தாக்கத்தை உண்டுபண்ணவில்லை. அம்மாவின் நகைகளை விற்று ஓரளவு சாப்பிட்டார்கள், படித்தார்கள். திரும்பவும் ஊருக்குப்போவோம் என்ற நம்பிக்கையும் இருந்தது. திடீரென யாழ்ப்பாணத்தில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் கிளாலி ஊடாக வன்னிநோக்கி இடம்பெயர்ந்தபோது அவர்களும் கையிலே கிடைத்ததை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள். அப்பா தனக்குச் சொந்தமாக இருந்த ஒரே ஒரு சொத்தான சயிக்கிளில் தம்பிமார் இருவரையும் முன்னுக்கு ஏற்றி. அரவிந்தன் பின் கரியலில் தங்கையை வைத்துக்கொண்டிருக்க அப்பா சயிக்கிளை உருட்டி வந்தது நல்ல ஞாபகமாய் இருந்தது. உருத்திரபுரம் கிராமத்தில் தெரிந்த ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தபோது கூட அப்பா அம்மாவின் நகையொன்றை விற்று சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்து குடும்பம் சுமாராக ஓடியது. அரவிந்தனும் தம்பிமாரும் ஒழுங்காக பாடசாலை சென்று படிக்கக்கூடியதாக இருந்தது. அரவிந்தனின் திறமை பாடசாலையில் அனைவராலும் பேசப்பட்ட விடயம். அந்த சந்தோசங்கள் இரண்டு வருடமே நீடித்தது. மீண்டும் கிளிநொச்சி இடப்பெயர்வு அவர்களை அலைத்தது. மூன்று நான்கு நாட்கள் சந்திகளிலும் மரங்களுக்கு கீழேயும் தங்கிவிட்டு சில குடும்பங்களாக சேர்ந்து பற்றைகளை வெட்டி புற்களை செருக்கி காட்டுத் தடிகளினால் தாங்கள் உண்ணவும், உறங்கவும் ஓர் தற்காலிக இடத்தைத் தயாரித்துக்கொண்டார்கள். அப்போதும் அரவிந்தன் படிப்பைக் கைவிடவில்லை, அப்பாவுக்கு தொழில் ஏதும் இல்லாத காரணத்தால் வீட்டில் வறுமையும் நோயும் மாறி மாறி குடி புகுந்தது. அப்போதுதான் அப்பாவின் நண்பர் ஒருவர் வீட்டுக்கு வந்தார்.

"உருத்திரபுரத்தில் எங்கட வீட்டுப் பக்கம் ஆமி இல்லையாம்" வாறியே நீயும் நானுமாய்ப் போய் எங்கட காணியிலை தேங்காய் பிடுங்கிக் கொண்டு வருவம் உனக்கும் தருவன்தானே" என்றுகூறி அப்பாவை அழைத்துப்போனார். அப்பா அன்று வீடு திரும்பி வரவேயில்லை. அம்மா தவித்த தவிப்பு அரவிந்தனுக்கு இன்று நடந்ததுபோல் இருக்கிறது. அப்பா மிதிவெடியில் சிக்கி கால் ஒன்றை இழந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு அப்பாவின் ஓட்டைச் சயிக்கிளில் அம்மாவையும் ஏற்றிக்கொண்டு அக்கராயன் மருத்துவமனைக்கு விரைந்தான்.

"நான் செத்திருக்கலாம்.... இனிக் காலுமில்லை என்னனண்டு குடும்பத்தைக் கொண்டிழுக்கப் போறனோ" என்று அப்பா குலுங்கிக் குலுங்கி அழுத காட்சி அரவிந்தன் மனதில் அழியாத கோலமாய் நிற்கிறது.

"எனக்கு உங்கட உயிர் தப்பினதே பெரிய புண்ணியம் அழாதேங்கோ- படைச்சவன் படியளப்பன் தானே" என்றாள் அம்மா.

எஞ்சியிருந்த சிறு சிறு நகைகளையும் விற்று அப்பாவின் வைத்தியச் செலவு உட்பட வீட்டுச் செலவையும் கவனித்தாள் அம்மா. அரவிந்தன் நன்றாகச் சிந்தித்தான். பாடசாலை போவதை நிறுத்திக்கொண்டான்.

"அம்மா இவ்வளவு நாளும் நகை நட்டுகளை வித்துச் சாப்பிட்டம் - இனி என்ன செய்யிறது" அம்மா பதிலுக்கு அழுது வைத்தாள்.

"நான் -காட்டுக்குப்போய் விறகு வெட்டிக்கொண்டு போய் விக்கப் போறன்"

அப்பாவும் அம்மாவும் முதலில் மறுத்தார்கள். அம்மா அழுது அழுது சம்மதம் சொன்னாள். அம்மாவின் துணையோடு காட்டுக்குள் இறங்கி விறகு தறித்து அதை கீலம் கீலமாகக்கொத்தி சீராக கரியலில் வைத்துக்கட்டி ஸ்கந்தபுரத்தில் இருந்து அக்கராயன்வரை கொண்டு சென்று விற்பான். விறகின் பாரத்திற்கு ஈடுகொடுத்து சைக்கிளை ஓட்டமுடியாத காரணத்தால் அரைவாசித் தூரங்களும் அவன் சைக்கிளை உருட்டியே போவான். சில வேளைகளில் நேரத்தோடு விறகு விலைப்படும். சிலவேளைகளில் யாருமே வேண்டமாட்டார்கள். அம்பலப் பெருமாள் சந்திவரை கொண்டுபோய் கேட்கும் விலைக்கு கொடுத்துவிட்டு மிக சோர்வாக வீடு திரும்பும் நாட்களும் உண்டு.

அப்படி ஒரு நாள் வந்துகொண்டிருக்கும் போதுதான் தன்னைப் படிப்பித்த பவானி ரீச்சரைப் பார்த்தான். பவானி ரீச்சர் தன்னை அடையாளம் காணக்கூடாது என மனம் நொந்து ஒருங்கிக்கொண்ட போது தான் பவானி ரீச்சரின் சயிக்கிள் அவனருகே வந்துநின்றது. அரவிந்தனுக்கு ஒரு தடவை இதயம் ஓங்கி அடித்துக்கொண்டது.

"நீர் அரவிந்தன் தானே?" பவானி ரீச்சரின் பளிச்சென்ற கேள்விக்கு பதிலாக மெதுவாக தலையை ஆட்டினான் அரவிந்தன். மேலும் கீழுமாக அரவிந்தனைப் பார்த்து அவன் நிலையைப் புரிந்துகொண்டவளாக பவானி ரீச்சரின் விழிகளில் நீர் சுரந்தது.

"படிக்க கூடிய கெட்டிக்காரப் பிள்ளை.... தகப்பனுக்கு மிதிவெடியிலை ஒரு கால் போட்டுது... குடும்பக் கஷ்டம்... பாவம் விறகு விற்கிற நிலைமை.. புத்தகம் சுமக்கிற வயதிலை குடும்பத்தைச் சுமக்குது... " தன்னோடு கூடி வந்த இன்னொரு ஆசிரியரை பார்த்து கூறினார் பவானி ரீச்சர்.

"அரவிந்தன் ஓ.எல் சோதினைக்கு இன்னும் நாலுமாதந்தான் கிடக்குது.... நீர் முயற்சி எடுத்தால் இந்தநாலு மாதமும் பள்ளிக்கூடம் வந்து படிச்சீரெண்டால் கட்டாயம் பாஸ் பண்ணுவீர்.. பள்ளிக் கூடத்தால வந்து விறகு விற்கப் போகலாம்.. உம்முடைய படிப்புச் செலவை நான் பார்க்கிறன்... வீட்டபோய் அம்மா அப்பாட்டைக் கதைச்சு முடிவை வந்து சொல்லும்..."

லேசாக கூறிவிட்டு பவானி ரீச்சர் போய்விட்டார். மீண்டும் பாடசாலை.... அதிபர்.. ஆசிரியர்கள்.. வகுப்பறை.. மாணவர்கள்.. வெள்ளை காற்சட்டை சேட்... புத்தகங்கள்... விளையாட்டுமைதானம்... அவன் கனவில் மின்னி மின்னி மறைந்து ஒரே கனவுகள்...

பல பலவென விடிந்து விடுகிறது. அம்மா எழுந்து பாண் ஒரு றாத்தல் கடையில் கடனாக வேண்டி தம்பிமாருக்கும், தங்கைக்கும் கொடுத்துவிட்டு அரவிந்தனை எழுப்புகிறாள், அவனும் பல்துலக்கி முகம் கழுவிக்கொண்டு அவசரமாக வருகிறான் அம்மா தேனீரையும் ஒரு பாண்துண்டையும் கையில் கொடுக்கிறாள்.

அம்மா... நானும் பள்ளிக்கூடம் போகப் போறன்! தொண்டை வரையும் வந்த வார்த்தைகள் அந்த பாண் துண்டுகளோடு ஜீரணிக்கப்பட்டன.

அன்று அரவிந்தன் நித்திரையால் எழும்பத் தாமதமானதால் நேரத்தோடு எழுந்து வழமைபோல அந்த ரயர் தேய்ந்த சையிக்கிளின் கரியலில விறகுகளை அடுக்காக வைத்து கட்டி ஆயத்தமாக வைத்திருந்தாள். அந்த விறகுச் சையிக்கிளை எடுத்து உருட்டத் தொடங்கினான் அவன். அவனுடைய அந்த ஆசைகள் எல்லாம் ஏக்கமாக நெஞ்சுக்குள் தேங்கி நின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உறுதி

போத்துக்கல்லில் நடந்த விடுதலைப் போராட்டத்தை அடிப் படையாகக் கொண்டு ஜெரால்ட் ரொபின்சன் (Jerald Robin son) எழுதிய துணிச்சல் (The Adventure) என்ற நாவல் விடுதலைக்காகப் போராடும் மக்களிடையே மிகுந்த வர வேற்பைப் பெற்றது. இந்த நாவலின் 10ம், 11ம் அத்தியா யங்களை ஆங்கிலம்வழி தமிழில் இங்கே தருகிறார்.

\- தமிழ்க்கவி



அவன் தொப்பியைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டான். பவ்வியமானசிரிப்பை முகத்தில் தவழவிட்டவன்,

“நாங்கள்.. இல்லை... ஏழைகள் வேலை தேடி வந்தோம் ஐயா !... நானும் என் மகனும்” என்றான்.

அந்த இளம் படையினன் அவனை உற்றுப்பார்த்தான்.

“இந்த இடத்தில் என்ன செய்து கொண்டிருந்தாய்?”

“நாங்கள்... நான் புகைப்பதற்காக” அவன் தொடர்ந்தான், “நான் நினைத்தேன்”

படையினன் இடைமறித்தான். “நீ நினைத்தாய், ஏதாவது திருடலாமென்று”

“இல்லை இல்லை ஐயா....” கொஞ்சம் நொந்து போன குரலில் மறுத்தவன் “நான்... இங்கு உதவி கிடைக்குமா... என்று எனக்கு உண்மையில் இது இராணுவ பிரதேசம் என்று தெரியாது...”

அந்த படையினன் என்னைக் குனிந்து பார்த்தான்.

“இந்தப் பையனுக்கு என்ன வயது?”

“என் மகன் ஜோன், ஆக பன்னிரண்டு ஐயா !”

“நாங்கள் ஒரு எட்டு வயதுப் பையனைத் தேடுகிறோம். கிளர்ச்சியாளன். ஜீனசின் மகன்”

“எங்களுக்கு அவனைத் தெரியாது ஐயா !”

அவசரமாக மறுத்தான் அவன்.

அந்தப் படையினன் மீண்டும் என்னைப் பார்த்தான். கொஞ்சம் தாமதித்துவிட்டு,

“அவன் உன் மகனைப் போலவே கறுப்பு என அறிவிக்கப்படுகிறது, என்றான்.

“நிமிர்ந்து நில் ஜோன்” என்றவன், திரும்பி பாருங்கள் என்மகன் எவ்வளவு உயரம், எட்டு வயதில் எப்படி இந்த உயரம் வரும்” என்றான்.

அந்த படையினன் என்னைப் பார்வையால் அளந்துகொண்டிருந்தான். “உனக்கு எத்தனை வயது பையா?” என்று திடீரென்று கேட்டான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பன்னிரண்டு ஐயா" நான் தயங்காமல் கூறினேன்.

"உன் தோல் ஏன் கருப்பாக இருக்கிறது?" நான் திமிர்ந்து மைக்கலைப் பார்த்தேன். அவன் என்ன கருதுகிறான் என்று எனக்கு புரியவில்லை.

"அவனுடைய தாய்"..

படையினன் இடைவெட்டினான். தொடர்ந்து

"நான் பையனைக்கேட்டேன்" என்றான் கோபமாக.

"என் அம்மா ஒரு நீக்ரோ ஐயா.."

மைக் ஆசுவாசமாக மூச்சுவிட்டது எனக்கு கேட்டது. படையினன் அடுத்த கேள்வியை என்னை நோக்கி வீசினான். "எங்கிருந்து வருகிறீர்கள்?"

என் முன்னே இருந்த மலையைக்காட்டி "அங்கிருந்து..." என்றேன்.

"பையன் சொல்வது சரி அவன் பாசறையிலிருந்து..." மைக்கை நோக்கி படையினன் கூற.

"அது தேவாலயம் ஐயா!" மைக் அவசரமாக

"அங்கு அவன் பாதருடைய பாடசாலைக்கு, மலைக்கு சென்றான்"

படையினன் ஒரு கணம் அவனை உற்றுப் பார்த்துவிட்டு "என்னுடன் வாருங்கள்" என்றான்.

"ஏன் ஐயா? கொஞ்சம் மறுத்த மைக், "எங்களிடம் இதைவிட அதிகம் உங்களுக்கு தேவையான எதுவும் இல்லை ஐயா! நாங்கள் வீட்டுக்கு போக விரும்புகிறோம்"

"நீங்கள் வீட்டுக்கு பிறகு போகலாம்.. ஒவ்வொரு சந்தேக நபரையும் அணிவகுப்புக்கு அனுப்பும்படி எங்கள் கப்டனின் உத்தரவு"

ஏனைய படையினர் எம்மை சுற்றி வளைத்துக்கொண்டனர்.

"எங்களை எங்கே கொண்டு செல்கின்றீர்கள்?" மைக் கேட்டான்.

"மாண்பு மிகு கேணல் அவர்களுடைய இடத்துக்கு.. ம் நடவுங்கள்"

அவன் வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினான். நாங்கள் பின்தொடர்ந்தோம். மற்ற இராணுவத்தினரும் பின்தொடர்ந்தனர். எனது தோளில் மைக்கின் கை அணைத்திருந்தது. அவன் கிசுகிசுத்தான்.

"நீ உன் பேரனை கண்ட மாதிரி காட்டிக் கொள்ளாதே..."

"ஆனால் அவர் என்னைக் கண்டுகொண்டால்".... நான் கிசுகிசுத்தேன்.

"அதைப்பற்றி நாம் அப்போது கவலைப்படலாம். நீ அவரைப் பிரிந்து நீண்ட நாள் ஆகிவிட்டது. நன்றாக வளர்ந்துவிட்டாய். எனவே, அப்படி நடப்பது சாத்தியமில்லை"

"இருவரும் என்ன கிசுகிசுக்கிறீர்கள்? படையினன் கேட்டான்.

"ஒன்றுமில்லை ஐயா" மைக் விரைவாக தொடர்ந்தான் "அது.... நாங்கள் பசி பசியால் களைத்துவிட்டோம்"

வீதியின் முடிவில் ஒரு பட்டிபோன்ற இடம் வந்ததும் நாம் அதற்குள் செல்லவிடப்பட்டோம். அந்தப் படையினன் ஒரு அதிகாரியை கூப்பிட்டான்.

"என்ன கண்டு கொண்டாய்"

அந்த அதிகாரி தலையை ஆட்டினான்.

"ஒன்றுமில்லை"

அந்த லெப்ரினென்ற் கவனித்தபடியே குதிரையைத் திருப்பி பாசறையின் பக்கமாக வீதியால் போனான்.

அங்கே மனிதர்கள், பெண்கள், குழந்தைகள் என அநேகம் பேர் என் பாட்டனார் முன்நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் எம்மை சுவாரசியமில்லாமல் பார்த்தனர். ஒவ்வொருவரும் தத்தமது கவலையில் இருந்தனர். மைக் என்னை ஒரு புறமாக தள்ளினான்.

"உனக்கு இவர்களில் யாரையாவது தெரியுமா?"

நான் தலையை ஆட்டி "இல்லை" என்றேன்.

என் வயிறு இரைந்தது, எனக்கு சாப்பிட ஏதாவது வேண்டும்.

வெயில் சூடாக இருந்தது. எனக்கு களைப்பும் தாகமுமாக இருந்தது.

"இந்த வீட்டின் பின்புறம் ஒரு கிணறு இருக்கிறது" என்றேன்.

"அதை மற" மைக் அவசரமாக சொன்னான்.

"உனக்கு கிணறு இருக்குமிடம் தெரிகிறதா என்பதை அவர்கள் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்!"

என் முகத்தில் ஏற்பட்ட வியப்பை அவன் கவனித்திருக்கவேண்டும். அவன் தன்னை நோக்கி என்னை இழுத்து அணைத்தவாறே "கண்ணே... நாங்கள் படுத்து இளைப்பாற ஒரு நிழலுள்ள இடத்தைக் கண்டுபிடிப்போம்" என்றான் மென்மையான குரலில்.

நாங்கள் அங்கேயே அருகே ஒரு இடத்தைக் கண்டுபிடித்தோம். மைக் ஒருவண்டியின் மரச் சக்கரத்தில் முதுகைச் சாய்த்து ஓய்வெடுத்தான். நான் அதன் அச்சுக்குக் கீழே படுத்து சிறிது நேரத்தில் உறங்கியும் போனேன்.

எவ்வளவு நேரம் உறங்கினேனோ எனக்குத் தெரியாது. மைக் என்னை அசைத்து "கண்களைத் திற அப்பனே" என்ற போது நான் எழுந்து உட்கார்ந்தேன். கண்களை கசக்கி விட்டுக்கொண்டேன். சூரியன் உச்சிக்கு வந்திருந்தது. நான் அரைமணிக்கு மேலாக உறங்கவில்லை.

இராணுவத்தினர் ஒரு வீட்டின் முன்புறத்தை நோக்கி ஒவ்வொருவரையும் தள்ளிச் சென்றனர். நாங்கள் எழுந்துகொண்டு அவர்களோடு சேர்ந்து முன்னோக்கிச்சென்றோம்.

"இரண்டு வரிசையில் நில்லுங்கள்"

என்னைச் சுற்றிப் பார்த்தான். எங்களில் சுமார் ஐம்பதுபேர் வரிசையில் என்வயதில் சிலர் காணப்பட்டாலும் பெரியவர்களாகத் தெரிந்தார்கள். நாங்கள் முன்னோக்கி நகர ஆரம்பித்தோம். வரிசையில் முன்னே செல்ல நான் முயன்றபோது மைக் என்னை வரிசையின் நடுவில் நின்ற ஒரு பருத்த பெண்ணின் பின்னே தள்ளிவிட்டான்.

முன்கதவு திறக்கப்பட்டது. அந்தக் கூடத்தின் முன் ஒரு வயோதிபரை நிற்க உதவியபடியே இரு இராணுவத்தினர் தோன்றினர். என் மூச்சை ஒரு தடவை இழுத்துக்கொண்டு முன்னே செல்ல ஆரம்பித்தேன். ஆனால், மைக் உடும்புப்போல என் கையைப் பிடித்திருந்தான்.

அது என் பாட்டனார். ஆனால் அவருக்கு என்னை நினைவில்லை. அவர் அணிந்திருந்த வெள்ளைச் சேட்டும், சூட்டும் நைந்து கிழித்திருந்தன. கடைவாயின் ஓரம் இரத்தம் வடிந்து, அதை கீழே சட்டைக் கொலரில் தேய்த்த அடையாளம் இருந்தது. கண்கள் வெறுமையாக வேதனையான பார்வையுடன், உதடுகள் துடிக்க துரும்பு போல தள்ளாடிக்கொண்டு நின்றார். அவர்கள் ஒரு கொட்டிலில் நுழைந்ததும், ஒரு அதிகாரி அவர்களுக்கு நேரே பின்புறம் வந்துநின்றுகொண்டான். அவன் கேணல் தர பட்டியை அணிந்திருந்தான். அவன் எங்களைப் பார்த்தான். பின் என் பாட்டனாரைப் பார்த்தான். மெல்லிய கருத்த பென்சில்கோடு போன்ற மீசை அவன் தோற்றத்தைப் பயங்கரமாக்கியது. அவன் வாசிப்பதுபோல அலட்சியமாக கரகரத்த குரலில் கூறினான்.

"இந்த மக்கள் அந்தப்பள்ளத்தாக்குக்குள் ஒரு முகாம் இருப்பதாக கூறுகிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள் அங்குள்ள ஒவ்வொருவரையும் உனக்குத் தெரியும். உன்னால் அடையாளம் காட்டமுடியும். எங்களுக்குத் தேவையானது இதுதான். இவர்கள் ஒவ்வொருவரையும் பார். இவர்களில் யாரையாவது சந்தேகித்தால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம்மிடம் சொல்"

"எனக்குத் தெரியும்" பாட்டன் கஸ்டப்பட்டு பேசினார்.

"நான் ஏற்கெனவே உனக்குச் சொல்லிவிட்டேன்" கேணல் தாட்சணியமில்லாத குரலில் பேசினான். "நாம் பார்க்கிறோம்" என்றவன் படியின்மேல் நின்ற படையினனை நோக்கி, "அவர்களை வரிசையாக நடத்து" என்று கூச்சலிட்டான்.

அந்த இரட்டை வரிசை அசையத் தொடங்கியது. (பாட்டன்) பப்பா கீழே எங்களைப் பார்த்ததும் பார்க்காமல்விட்டார். நானும் மைக்கும் சரி நேராக வந்தபோது, கேணல் சத்தமிட்டான்.

"ஏ.. பையா-முன்னேறில், நாங்கள் பார்க்கக் கூடியதாக..."

ஒருகணத்துள், நான் சுதாகரித்துக்கொண்டேன்! அவன் யாரைக் குறித்தான்?... நான் ஒரு வினாடி நிற்க என் முதுகு குளிர்வதை உணர்ந்தேன். மைக் என்னை முன் வரிசையில் தள்ளிவிட்டான். நான் மேலே பார்த்தபடி ஆச்சரியப்பட்டு நின்றேன்.

என் பாட்டனாரை நேராக அவர் கண்களுடாகப் பார்த்தேன். சட்டென்று மின்னல் நெருப்பாக எழுந்து மெதுவாக கடந்தது.

கண்களை மூடித் திரும்பவும் திறந்தபோது எல்லாம் அடங்கி வெறுமையான பார்வையை எம்மீது படரவிட்டார் முன்னரைப்போல.


கேணல் எங்களை நெருங்கி நின்று கவனித்தான். "சரி" என்றவன், சற்று தாமதித்து "ம்.. நகருங்கள்" என்றான்.

வரிசை அசைந்து முன்னோக்கி நகர்ந்தது. எனது முதுகுத் தண்டு குளிர் ஊடுருவியதை உணர்ந்த நான் மைக் நகர்ந்ததும் விடுபட்ட உணர்வைப் பெற்றேன். அப்போது எம்மைக் கைதுசெய்த லெப்ரினண்ட், கேணலின் காதில் ஏதோ குசுகுசுவெனப் பேசியதைக் கண்டேன். கேணல் குறிப்பாக "நிறுத்து" என்று கூச்சலிட்டான். வரிசை நின்றது.

"நீ" என்னை நோக்கி விரலைச் சுட்டியவன் "வெளியே வா" என்றான்.

நான் மைக்கைப் பார்த்தேன். அவனுடைய முகம் வெறுமையாய் உணர்ச்சியற்றிருந்தது. ஆனால் கண்கள் மின்னின. அவன் என் கைகளைப் பிடித்தபடி படிகளின் முன்போனான். கேணல் முன் குனிந்து வணங்கி "ஐயா"என்றான். கேணல் ஏற்கனவே பாட்டனாரின் பக்கம் திரும்பி நின்றான்.

"என் லெப்ரினண்ட் சொல்கிறான், இந்த இருவரையும் உன் மருமகனுடைய



வீட்டருகே பிடித்தார்களாம். அவர்கள் சொல்கிறார்கள் மலையிலிருந்து வேலை தேடி வந்தார்களாம் உனக்கு அவர்களைத் தெரியுமா"

பப்பா, கீழே எங்களைப் பார்த்தார். மிகவும் ஆவலற்ற பார்வை அது. "நான் அவர்களை ஏற்கனவே பார்த்துவிட்டேன்" தொனி வராமலே கூறினான்.

மைக் என்னை நெருங்கி நின்றான். மீண்டும் நான் குளிரை உணர்ந்தேன். என் முதுகுத்தண்டு சில்லிட்டது. நான் திரும்ப முயன்றேன். ஆனால் அவனுடைய கையால் என் முகத்தை நேராக வைத்தான்.

"யார் அவர்கள்?" கேணல் கேட்டான். என் பாட்டன் பதிலுரைக்க நீண்ட நேரம் எடுத்தது. கடைசியில் அவருடைய உதடுகள் பிரிந்து சொற்கள் வந்தன.

"நான் கிழவன்..." மிக நசிந்த குரலில் கூறினார்.

"எனக்கு பெயர்கள் நினைவில்லை" குரல் நடுங்கியது.

"ஆனால் அவர்கள் வேலைதேடி அடிக்கடி வருபவர்கள்"

கேணல் திரும்பி என்னைக் கணிப்பது போலப்பார்த்தான்.

"இந்தப் பையன் கறுப்பு... உன்னுடைய மருமகனும் கறுப்பு"

"எங்களில் அநேகரில் நீக்ரோ இரத்தம் கலந்துள்ளது" அந்த வயோதிபர் அமைதியாகக் கூறினார். "இது குற்றமென்று பிரகடனம் செய்யப்படவில்லை"

மீண்டும் கேணல் அமைதியானான். அவன் யோசனையோடு பப்பாவைப் பார்த்தான். பின் தன் கைத்துப்பாக்கியை உருவி என்னைக் குறிவைத்தான். "பிரச்சினையில்லை இவன் வாழ்வதா? சாவதா?"

ஒரு துன்பச் சாயல் பாட்டனாரின் முகத்தில், கண்களில் தோன்றி, கேணலை நோக்கித் திரும்பியபோது மறைந்தது.

"இதில் பிரச்சினையெதுவும் இல்லை"

கேணல் ரவையை, துப்பாக்கியின் ரவை அறைக்கு ஏற்றினான். பப்பா மறுபுறம் திரும்பிக்கொண்டார். கேணல் என்னைப் பார்க்கவில்லை. அவன் பப்பாவையைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

திடீரென்று மைக் என்னை அப்பால் தள்ளிவிட்டான். "ஐயா" அவன் கத்தினான். "உங்களைக் கெஞ்சிக்கேட்கிறேன். கருணை ... கருணைகாட்டுங்கள் என் ஒரேமகன் கருணை காட்டுங்கள் ஐயா! கடவுளுக்காக.. கடவுளுக்காக கருணைகாட்டுங்கள்"

கேணல் துப்பாக்கியை என்னிடமிருந்து திருப்பி மைக்கிடம் குடுத்தான். பப்பா மைக்கைப் பார்த்தார். "இருவரையும்கொல் அல்லது கொல்லவிடு" என்றார் அலட்சியமாக. இந்த இழிவான செயலுக்கு முடிவுகட்டு, என்னை வருத்துகிறது.

கேணல் அவரை ஏறிட்டுப் பார்த்தான். பின் துப்பாக்கியை வெறுமையாக்கி உறையில் போட்டான். மைக் அவன் கால்களைப் பிடித்துக்கொண்டான். "ஆயிரம் நன்றி உங்களுக்கு"

கேணல் கையை அசைத்தான். "முன்னே செல்லுங்கள்"

மைக் மறுபடி என்னை வரிசையில் தள்ளி விட்டான். மெதுவாக நாங்கள் அசைய வரிசை எங்களின் பின் அசைந்தது. கடைசியில் நாங்கள் அந்த நடைபாதையை கடந்தோம். நாம் அமைதியாக நின்றோம். நான் மைக்கைப் பார்த்தேன். "அவர் என்னைக் கண்டு கொள்ளவில்லை" மெதுவாக கூறினேன்.

"அவர் உன்னை அறிந்துகொண்டார்"

"ஆனால்" மைக்கின் கை என் தோளைத் திருகிறது.

அந்தக் கேணல் எம்மை நோக்கி நடந்துவந்துகொண்டிருந்தான். என்முன் வந்ததும் நின்றான்.

"உன் பெயர் என்ன?"

"ஜோன்" நான் பதிலளித்தேன்.

"என்னுடன் வா" அவன் திரும்பினான். மைக் கீழ்ப்படிக்கட்டில் இறங்கி முன் நடந்தான் நான் அவனைப் பின்தொடர்ந்தேன். நாங்கள் மீண்டும் உள்ளே சென்றோம்.

கேணல் ஒரு படைவீரனை அழைத்து "அந்தக் கிழவனை இங்கே கொண்டுவா. மற்றவர்களை அனுப்பு" என்றான். அந்தப்படையினன் என் பாட்டனாரைப் பிடித்து இழுத்துக்கொண்டு கீழே வந்தான். மிகவும் வருந்தத்தக்க ஓசை பின்னே கேட்டது. மக்கள் கூட்டம் கோபமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கத்தியபடியும், என் பப்பாவை திட்டியபடியும் தொடர்ந்து வந்தது.

"அவர்களைப் போகும்படி சொல், இல்லையேல் தேவைப்படின் சுட்டுத்தள்ளு" என்றான் கேணல், "யா...யா.." என்றபடி லெப்ரினென்ற் தன் கைத் துப்பாக்கியை உருவினான். மக்கள் கலவரத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே காற்றில் சுட்டபடி முன்னேறினான். வீதி வெறிச்சோடியது. கேணல் எம்மை நோக்கித் திரும்பினான்.

"இந்தக் கிழவனுக்கு நீங்கள் வாழ்வதா சாவதா என்பதைப் பற்றி அக்கறையில்லை" அமைதியான முறையில் கூறினான்.

"இப்போது உங்களுக்கும் அதேயுணர்வு அவர் மீது, இருக்கிறதா பார்ப்போம்"

இப்போது மணி மூன்றாகிறது. சூரியன் நெருப்பை வாரிக்கொட்டிக் கொண்டிருந்தான். எமது உடல் உருகிக்கொண்டிருந்தது. உமிழ்நீரால் உதடுகளை நனைத்துக்கொண்டோம். வெடித்து உப்புக்கரித்தது உதடு. உஸ்ணத்தால் என் உடல் உள்ளே துடித்துக்கொண்டிருந்தது. அவர்கள் பப்பாவைக் கீழே படியில் வைத்திருந்தது வேறு என்னைத் தடுமாறச் செய்தது.

"அவனை வண்டிக்கு எடுத்துச் செல்லுங்கள்" கேணல் உத்தரவிட்டான்.

கிழவர் அவர்களை உதறிவிட்டார். "என்னால் நடக்க முடியும்" என்றார் பெருமையாக.

படையினர் கேணலை கேள்விக்குறியுடன் பார்த்தனர். கேணல் தலையை ஆட்டினான். முற்றத்தின் நடுவே நின்ற அந்த பார வண்டியைநோக்கி அவர் நடக்க.. நாங்கள் பின் தொடர்ந்தோம். வண்டியை அடைந்ததும் அவர்களை நோக்கித் திரும்பினார். உலோகத்தகடுபோன்றிருந்த அவர் முகத்தில் களைப்பு தெரிந்தாலும் கண்கள் தெளிவாகவும் அமைதியாகவும் இருந்தன. அவர் பேசவில்லை.

"ஆடைகளை உரித்துவிடு" கேணல் கட்டளையிட்டான். படைவீரர்கள் விரைந்து முன் சென்றனர். அந்த வயோதிபர் கைகளால் அவர்களைத் தடுக்குமுன், ஏற்கனவே அவர்கள் உடைகளைக் கிழித்து அவர்முன் போட்டனர். அவருடைய தளர்ந்த மெலிந்த உடலின் வெண்மை நிறம், உடைமூடியிருந்த பகுதி மேலும் வெண்மையைக் காட்டியது. உடைகள் இல்லாமல் மிகவும் சிறியவராக, தோல் சுருங்கிய நிலையில் தசை நடுங்கியது. அவருடைய பிட்டம் சுருங்கி ஏதுமற்றதாய் ஆதரவற்று தோற்றுப்போய் நிற்பதான



தோற்றத்தைத் தந்தது.

"அவனை அந்தச் சக்கரத்தில் கட்டுங்கள்"

இருபடையினர் பருந்துபோல பாய்ந்த அவரைச் சக்கரத்தில் சாய்த்தனர். கைகளும் கால்களும் அகலமாக சக்கரத்தின் விளிம்பில் கட்டப்பட்டன. சக்கரத்தின் நடு அச்சு அவருடைய முதுகில் அழுத்தியது. அச்சின் அசௌகரியமான, பயங்கரமான அழுத்தத்திலிருந்து, விலக அவர் உடலை அசைத்துக்கொண்டார். வேதனை நிரம்பிய முகச்சுழிப்பை உதறி எதிர்ப்பைச் சேர்த்துக்கொண்டார். கண்களை மூடி தலையைச் சாய்த்து சூரியனுடைய நேரடியான தகிப்பை விலக்கமுயன்றார்.

கேணல், படைவீரனுக்கு சைகை செய்யவே ஒருவன் அவருடைய தலையை நோக்கி சக்கரத்தின் விளிம்புடன் அழுத்தி ஒரு தோல்பட்டியால் அவருடைய நெற்றியை சக்கரத்துடன் பிணித்து தலையின் அசைவை நிறுத்தினான்.

"டொன் ராபீல்!" கேணலுடைய குரல் மிகவும் தாழ்வாக ஒலித்தது. "டொன் ராபீல்" இவரை, என் பப்பாவை யாரும் இப்படி அழைத்து நான் கேட்டதில்லை. பப்பா அவன் கண்களை ஊடுருவிப்பார்த்தார்.

"இது தேவையே இல்லை. டொன் ராபீல்!" மிகவும் பணிவாகக் கூறினான் கேணல்.

பப்பா பதில் பேசவில்லை.

"உனக்குத் தெரியும். அந்தப் பையன் எங்கே ஒளித்து வைக்கப்பட்டுள்ளான்"

பப்பாவின் கண்கள் அசையவில்லை.

"நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். எனக்குத் தெரியாது, றோஜோ, அவனை ...அவனை எங்கோ கொண்டு சென்றுவிட்டான்"

"அது நம்புவதற்கு கடினமானது. ராபீல்" கேணலுடைய வார்த்தைகள் மிக குளிர்மையானதாக இருந்தது.

"அதுதான் உண்மை"

கேணலுடைய முகம் கவலை தோய்ந்ததாக தோன்றியது. தலையைக் குலுக்கிக்கொண்டான்.

"உன்னுடைய மருமகன் 'ஜீனஸ்' உன் மகளைக் கொன்றவர்களுடன் சேர்ந்துள்ளான். அது அவனுடைய அரசியல் லட்சியம் என்று தெரிகிறது. வேறு என்ன நினைக்கமுடியும். ஆனால் நீ அவர்களுக்காக இரக்கப் படுகிறாய், நானானால்...."

"நான் எவ்வளவு மடையனாக இங்கே தங்கிவிட்டேன் நீ என்னை காணும்படியாக இன்னும் மடையனாகவா?".. கிழவர் கேட்டார்.

"அநேகமாக உன் வயது உன்னை காப்பாற்றும் என்று நினைத்தாய்"

"நான் ஒரு தேசத்துரோகியல்ல" பெருமையோடு சொன்னார் பப்பா.

கேணல் மௌனமாக சில கணங்களுக்கு அவரை ஏறிட்டுப் பார்த்தான். பின் என்னை நோக்கித் திரும்பினான்.

"எங்கே வசிக்கிறாய்?"

"அந்த மலைப் பகுதியில்"

"ஏன் இந்த பள்ளத்தாக்கிற்கு வந்தாய்"

நான் பப்பாவைப் பார்த்தேன். அவருடைய கண்கள் என்னைக் கவனித்தன.

"வேலைக்கு ஐயா"

"உனக்கு வீட்டில் வேலையில்லையா?"

மைக் விரைவாக பதிலளித்தான். "இல்லை ஐயா, வரட்சி..."

"நான் பையனைக் கேட்டேன்" கேணல் கூர்மையாக எச்சரித்தான்.

"அங்கே உண்பதற்கு ஏதுமில்லை" நான் குறைந்தபட்சம் உண்மையைக் கூறினேன்.

கேணல் சிந்தனையில் ஆழ்ந்தான். பப்பாவை உற்றுப் பார்த்தான். பின் "இந்த மனிதனைத் தெரியுமா? என்று என்னைக் கேட்டான்.

"ஆம் ஐயா!... அவர் "டொன் ராபீல், நில அதிகாரி"

"இவன் டொன் ராபீல்... ஒரு தேசத் துரோகி" கேணல் உறுமினான். நான் பதிலளிக்கவில்லை.

சட்டென்று அவனுடைய கை என் மணிக்கட்டைப் பிடித்து பின்னோக்கி இழுத்தது. பின் அவன் என்னை மேல் நோக்கித் தூக்கினான். நான் வேதனையில் அலறினேன். என்னுள் தீ பரவுவதை உணர்ந்தேன்.

"இவன் உன்னுடைய பாட்டன்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காதுக்குள் கரகரத்தான். "உனக்குத் தெரியவில்லை" நான் மீண்டும் வீரிட்டேன். என் கையை அவன் மோசமாக நெரித்ததால் உயரத் தூக்கி என்னை தரையில் வீசினான். தலையின் ஒரு பக்கம் மோசமாக தரையில் மோதியது. நான் நிலத்தில் விழுந்து பலவீனமாக நகர முடியாமல் குப்பையுள்" ஊறிப்போய் கிடந்தேன்.

என் பப்பாவின் குரல் வித்தியாசமாக ஒலித்தது, உணர்ச்சியற்று குளிர்ந்துபோய்.

"அதை நீ தனியாகவே வாதிட்டு ஏற்றுக்கொள் கேணல், அழவைத்துக் கேட்பதால் யாரும் என் இரத்தத்தால் உன்னை திருப்தி செய்யமாட்டார்கள். அது எங்கள் மரபு"

வாய்க்குள் சாபமிடும் சத்தம் கேட்டது. கூடவே எதுவோ மோதும் சத்தம்.

தலையைத் தூக்கிப்பார்த்தபோது கேணல், பப்பாவின் அருகில் நின்று திரும்பினான். கைத்துப்பாக்கி இன்னும் அவன் கையில் இருந்தது. அந்த வயோதிபரின் முகத்திலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. அவருடைய தாடி ஏற்கனவே இரத்தச் சிவப்பாகியிருந்தது. ஆனால் உதடுகள் இறுக்கமாக மூடியிருந்தன.

அவன் கால்களை வீசி நடந்து அகன்றபோது மைக்கின் கைகள் என் கால்களை அசைப்பதை உணர்ந்தேன். கேணல் தன்படைவீரருக்கு உத்தரவிட்டான்.

"அவனுடைய உடலை ஈரமான தோல் பட்டியால் கட்டுங்கள். இப்போது அவன் வாயிலிருந்து சூரியன் உண்மையை வரவழைப்பானா பார்ப்போம்"

என் தோள் வலியுடன் நான் கையை அசைத்தேன். என் மூச்சைப் பிடித்தபடி எழுந்து நின்றேன். பப்பா என்னை மௌனமாகப் பார்த்தார். பின் கண்களை ஒருகணம் மூடிக்கொண்டார். அவருக்குள் ஊடுருவும் வேதனையை என்னால் உணர முடிந்தது. என் கைகள் இயல்பாக எழுந்து.. ஆனால் மைக் என் கையைப் பிடித்து கட்டாயமாக அப்புறம் திருப்பினான். அந்த உயர்ந்த நடைபாதையில் நின்று கேணல் எங்களைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

படைவீரன் ஒரு வாளியில் நீர் கொண்டுவந்தான். பப்பாவின் முன் வாளியை வைத்தான். கையால் நீரை அள்ளி அவர் முகத்தில் அடித்தான். அந்த வயோதிபர் திடுக்கிட்டு துப்பினார். தலையைக் குலுக்கிவிட நீர் கண்கள் வழியாக அவரைச் சுற்றிக் கட்டியிருந்த தோல்பட்டியை நனைத்து அவரை ஒரு அங்குலமளவு நகர அனுமதித்தது. அவர் மீது வெயில் தாக்கத் தொடங்கியது.



ஏற்கனவே வெள்ளையான தோல், அவர் நிறம் சிவப்பாக மாறி, கதிர்களால் வாடத் தொடங்கியது. தோல்பட்டி அவருடைய நெற்றியை அணுஅணுவாக இறுக்குவதை என்னால் பார்க்க முடிந்தது. தோல் பட்டி காய்ந்து சுருங்கி வந்தது, அவருடைய வாய் திறந்து கொண்டு காற்றுக்காக மூசியது.

என்பின்னே காலடியோசை கேட்டது. நான் திரும்பினேன். கேணல் எம்மை நோக்கி நடந்துவந்துகொண்டிருந்தான். அவனுடைய கையில் நீண்ட கண்ணாடித்துண்டு. அவன் நடந்து வரும்போது என்னுள் குளிர்பாய்வதை உணர்ந்தேன். அது ஒரு பனிக்கட்டியின் துண்டு அவன் பப்பாவின் முன் நின்றான். அந்த பனிக்கட்டியை அவர் உதட்டுக்குநேரே உயர்த்தி உதட்டில் ஒரு துளியை விட்டான்.

"நல்லது டொன் ராபீல் என்னுடன் சேர்ந்து குளிரான மதுவருந்தலாமா"?

பப்பா பேசவில்லை. அந்த கண்ணாடியிலிருந்து பார்வையை விலக்கச் சக்தியற்றிருந்தார். அவருடைய உலர்ந்த உதடுகளை நாவால் தடவிக்கொண்டார்.

"ஒருவார்த்தை" கேணல் கேட்டான் "ஆக ஒரேயொரு வார்த்தை. அது எல்லாவற்றையும் எடுத்துவிடும்."

மிக முயன்று கண்ணாடியிலிருந்து கண்களை அகற்றினார் பப்பா. நேராக கேணலின் கண்களைப் பார்த்தார். இகழ்ச்சியான குரலில், எங்கோதொலைவிலிருந்து நான் எப்போதும் கேட்டிராத குரலில் "நீ அப்படி நினைப்பதற்கு நான் உன்னை ஆதரிக்கவேண்டும்..."

"நீங்கள் வேட்டைக்காரர்களைவிட கேவலமானவர்கள். அவர்கள் அறியாமையுடையவர்கள், எனவே மன்னிக்கலாம். ஆனால் கடவுளின் முன் நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்"

கண்ணாடி சக்கரதில் மோதிச் சிதறியது. உடைந்த கண்ணாடித்துண்டின் ஓரமொன்றை அந்த வயோதிபரின் வயிற்றுக்கு நேராகப் பிடித்தான் கேணல்.

"நீ பேசுவாய் கிழவா, நீ பேசுவாய்"

பப்பா நீண்டதொரு பெருமூச்சு விட்டார். கேணலை நேராகப் பார்த்து, ஒரு அநாதரவான கூச்சல் அவர் தொண்டையிலிருந்து பீறிட்டு மடிந்தது. அவர் ஏன் கூச்சலிட்டார்? கண்ணாடித்துண்டு அவர் தலையைக் கிழித்திருந்தது. நான் கூச்சலிட வாய் திறந்தேன். ஆனால் மைக் விரைவாக என் முகத்தை தன் வயிற்றுடன் இறுக அணைத்தான். நான் தணிந்துபோனேன்.

"அந்தப் பையனைப் பார்க்கவிடு"

மைக் மெதுவாக என்னை விடுவித்தான். ஆனால் அவனுடைய கைகள் என் தோளை அழுத்தி எச்சரித்தது. நான் கேணலைப் பார்த்தேன். அவனுடைய கண்கள் குளிர்மையாக இருந்தது. திரும்பிப் பப்பாவைப் பார்த்தேன். கட்டிலிருந்து தொய்ந்து போயிருந்தார். கண்ணாடியிலிருந்து இரத்தம் சொட்டுச்சொட்டாக வடிந்துகொண்டிருந்தது. அது நிலத்தி? 'டப் டப்' பென விழுந்துகொண்டிருந்தது.

என் கண்களிலிருந்து கண்ணீர் வரத்துடித்தது. கேணல் அதைக் கவனிக்கவில்லை. பப்பா அதை விரும்ப மாட்டார் என்பது எனக்குத் தெரியும். அவருடைய பார்வை மென்மை படர்ந்தது. அவருக்கு அது விளங்கியது என்பது தெரிந்தது. மீண்டும் அவர் கண்களை மூடிக்கொண்டார். உடல் தொய்ந்து தொங்கியது.

"அவன் இறந்து விட்டான்" படையினன் அறிவித்தான்.

கேணல் அவசரமாக கிட்டப்போய் குரூரமாக பெருவிரலால் அந்த வயோதிபரின் இமையை நீக்கிப் பார்த்தான்.

"இன்னும் இல்லை" என்ற அவனுடைய குரலில் திருப்தி தெரிந்தது. "அவன் அவ்வளவு சுகமாக சாகக் கூடாது -இப்படி ஒரு கிழவனாக அவன் இன்னும் வாழவே விரும்புவான். மீண்டும் அவன் உயிர்க்கும்போது என்னைக் கூப்பிடு..."

கேணல் தன் மதிய உணவுக்காக மேலே போனான். அவன் நடைபாதையில் நடந்து வீட்டினுள் மறையும்வரை பார்த்துக்கொண்டிருந்தேன்.

"எங்களுக்குப் பசிக்கிறது" மைக் அங்கிருந்த இராணுவத்திடம் சொன்னான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நீங்கள் அவனுடன் இல்லை என்பதற்காக சந்தோசப் படுங்கள்" என்றான் ஒரு படைவீரன், பப்பாவை நோக்கி சைகை காட்டியபடி, மைக் என்னைப் பார்த்தான். பின் படைவீரனைப் பார்த்தான்.

"இவன் ஒருகுழந்தை. குறைந்தது அவனை நிழலுக்கு எடுத்துச் செல்லவாவது கருணை காட்டுங்கள்"

அந்த இரண்டு படையினரும் ஒருவரையொருவர் பார்த்தனர். பின் ஒருவன் "சரி ஆனால் விளையாட முயலவேண்டாம்" என்று கூறினான்.

மைக் என்னை வீட்டை நோக்கிக்கொண்டுசென்றான். தானும் தாழ்வார நிழலில் ஒதுங்கிக்கொண்டான். சாய்ந்து உட்கார்ந்தான். முதுகை படையினர் பக்கம் திருப்பி வீட்டைப் பார்த்தபடி சுருண்டு கொண்டோம்.

"உன் தோள்கள் வலிக்கிறதா?" மைக் கிசுகிசுத்தான்.

"இல்லை" என்றேன். ஆனால் கொஞ்சம் வலித்தது. மைக் பக்கவாட்டாக வானத்தைப் பார்த்தான். இன்னும் சில மணி நேரத்தில் சூரியன் மறைந்து விடும். எங்கள் தோழர்கள் எம்மைவிட்டு விட்டு முகாமுக்கு திரும்பி விடுவார்கள்.

"கேணல் எங்களை என்ன செய்வான்"

மைக் அலட்சியமாக சொன்னான் "ஒன்றில் கொல்வார்கள் அல்லது விட்டுவிடுவார்கள்" அவன் குரலில் உண்மையான விடயம் அடங்கியிருந்தது.

"எல்லோருடைய பாதுகாப்பும் அந்த கிழவரில்தான் தங்கியுள்ளது. அவர் பேசினால் நாம் சாவோம். இல்லாவிட்டால் இல்லை"

"ம்-நல்லது எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் உண்டு"

சட்டென்று எனக்கு ஒரு ஞாபகம் வந்தது.

"வரிசையில் வந்தபோது கேணல் கேட்டானே"அவர்கள் என்னைக் கொன்றிருக்க மாட்டார்களா?" என்று நான் கேட்டேன்.

"கொன்றிருக்கலாம்"

"ம்..."

ஆனால் அப்போது அவர்கள் உன்னைக் கொன்றிருக்கலாம். ம்... " அவன் சிந்தித்தான். "எனக்கு கோபமில்லை ஆனால், ஏன் என்று விளங்கவில்லை" மைக் சொன்னான். "உன்னைக் காத்தது எதுவென்றால் அவர்களுக்கு நீ முக்கியமானவனாகையால்"

நான் பதிலளிக்கவில்லை.

"அவர்கள் உன் தந்தையைக் கேட்டு உன்னைத் துன்புறுத்தலாம். அவர் எங்கே ஒளித்திருக்கிறார் என்பது பற்றி உன்னால் அவர்களை நிறுத்த முடியாது. முடிவில் எப்படியாவது உன்னைக் கொல்வார்கள்"

இப்போது எனக்கு விளங்கியது. அதை செய்யும் வழி இதுதான், எமது வாழ்க்கையின் மையம் இதுதான். என் தோள்களுக்கு மேலாக திரும்பிப் பார்த்தேன். அந்த முதியவர் அமைதியாக தொங்கிக்கொண்டிருந்தார். சூரியன் அவர் உடலை எரித்துக்கொண்டிருந்தது. நான் மைக்கிடம் சொன்னேன்.

"நான் அவரைக் கொன்று விட விரும்புகிறேன்"

மைக் என்னைப்பார்த்த பார்வையில் அன்பான ஒப்புதல் இருந்தது. "அவர் விரைவில் இறந்துவிடுவார்" என்றான். "அமைதியாக அவர், மௌனமாக இறக்க வேண்டும் என்று பிரார்த்திப்போம்"

"எழுந்து நில்லுங்கள்" பின் புறமாக சத்தம் கேட்டது.

"அந்த கிழவன் எழுந்து விட்டான். நான் கேணலைக் கூப்பிடப் போகிறேன்.

கேணல் முகத்தைத்துடைத்தபடி வந்தான்.

"டொன் ராபீல்! என்னைத் தெரிகிறதா"

பப்பாவின் கண்கள் அகல விரிந்தன. குழப்பமாகப் பார்த்தவர் பின் "என் குதிரையை கொண்டு வாருங்கள்!"

என்று திடீரென கத்தினார். "அந்தத் துரோகியைக் கொல்ல மலைக்குப் போகிறேன்"

"கேணல் திரும்பினான். அவனை கீழே, இழுத்துப்போட்டுக் கொல்லுங்கள், அவன் இனி எமக்கு உதவமாட்டான்"

என்று கூறிவிட்டு திரும்பி நடந்தான். நடக்க முயன்றவனின் பார்வை என்மீது விழுந்தது.

"நீ இந்தக் கிழவன், உன்னுடைய பேரனா என்பதை இன்னும் சொல்லவில்லை"

நான் பதில் பேசவில்லை, அவன் உறையிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்தான். அதன் ரவையறையிலிருந்து ஐந்து குண்டுகளைத் தன் உள்ளங்கையில் எடுத்தான். கையை பொத்திப் பிடித்து என்னிடம் காட்டினான்.

"இன்னும் ஒரு ரவை மீதமுள்ளது. நீ அவனைக் கொல்லப் போகிறாய்"

நான் மைக்கைப் பார்த்தேன். அவன் முகம் உணர்ச்சியற்றிருந்தது. நான் தாமதித்தேன்.

"நீ அவனைக் கொல்வாய்"

கேணல் கத்தினான். கைத்துப்பாக்கியை என்னிடம் தந்தான்.

நான் கையிலிருந்த துப்பாக்கியை குனிந்து பார்த்தேன். அது பாரமாக இருந்தது. மைக்கினுடைய துப்பாக்கியை விட பாரம். நான் கேணலைப் பார்த்தேன். அவன் கண்கள் எரிப்பதுபோல் மின்னின. இதில் ஒரேயொரு ரவைமட்டும். ம்- அல்லது அவர்கள் என்னையும் மைக்கையும் கூட கொன்று விடலாம். நான் அப்பால் திரும்பினேன்.

நான் பப்பாவை நோக்கி முன்னேறினேன். பப்பா அமைதியாக இருந்தார். அவரது கடைவாயிலிருந்து இரத்தம் சொட்டுச்சொட்டாக வடிந்துகொண்டிருந்தது. ஆனால் அவருடைய கண்கள் சட்டென்று தெளிவாயின. "என்ன இது பையா?" நான் பேசவில்லை.

"உனக்கு என்ன வேண்டும். பையா?"

"மீண்டும் கேட்டார். நான் துப்பாக்கியை உயர்த்தியபோது என் வயிற்றில் ஒரு முடிச்சு இறுகுவதை உணர்ந்தேன். பப்பா அதைப் பார்த்தார். அசையவில்லை. ஒரு உறுதியான, சத்தியமான, வேதனையான புன்னகை. நான் விசையை இழுத்த அந்தக் கணத்தில் அவருடைய முகத்தில் தெரிந்தது.

விசை மீளவும், துப்பாக்கி என் கையிலிருந்து நழுவி என் காலடியில் விழுந்தது. அந்த முதியவரைப் பார்த்தேன். அவர் சக்கரத்தில் சாய்ந்திருந்தார். அவருடைய கண்கள் பார்வையற்று எங்களை வெறித்தன.

கேணல் திரும்பி நடந்தான். என் கண்கள் கலங்கின. பப்பாவைப் பார்த்தேன். கண்களிலிருந்து வெளிவரப் பார்க்கும் கண்ணீரை அடக்கிக்கொண்டேன். வாழ்வா? சாவா? அவர்களுக்கு இரண்டுமே தேவையில்லை. மைக் தன்கைகளால் என்னை அணைத்துக் கொண்டான். வீதியை நோக்கி நடந்தோம். இராணுவத்தினர் நாம் போவதை உணர்ச்சியற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களது ஓசையைத் தாண்டி வேகமாக நடந்தோம். எமது எல்லையை அடைந்தபோது என் கண்ணீரும் எல்லைகடந்தது. நான் கூச்சலிட்டேன்.

"நான் கொன்றுவிட்டேன்... நான் அதை விரும்பவில்லை. ஆனால் பப்பாவைக் கொன்று விட்டேன்..."

மைக் தன்னுடைய காலடிகளை நிதானமாக வைத்து நடந்தான்.

"இதில் ஒன்றுமேயில்லை" என்னைப் பார்க்காமலே கூறினான்.


"அந்த முதியவர் இறந்ததே நல்லது. நாங்கள் உயிருடன் இருப்பதற்கு அதுதான் காரணம்".



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*முகமாலையில் எமது முன்னரங்க வரிசையை ஊடறுக்கும் பிரதானசாலையில் கால் வைக்கின்ற போதெல்லாம் ஏதோ ஒரு வலி இதயத்துள் நுழைவதுபோல் இருக்கும். அந்த நடு வீதியில் குருதி கொட்டிய மாவீரர்களின் ஈகம் வார்த்தையால் விபரிக்க முடியாதது*



# தீயின் ஒரு துளி

செ.புரட்சிகா

முகமாலை-புளியங்குளம் A9 வீதியிலேறி ஓடித்திரிகின்ற பெரும்பாலான பேருந்துகளுக்கு இந்த இரு இடங்களும்தான் முகவரியாய்ப் போனது. பெருமையுடன் இந்தப் பெயர்களைத் தாங்கிக்கொண்டு செல்லுமாற்போல் விரைந்து அவை செல்கின்றன. உண்மையும் அதுதான். இங்கு வந்து சிங்களப்படை தன் முகவரி இழந்து போனதை, உலக வல்லரசுகள் கூட தம் கௌரவத்தைத் தொலைத்துப் போனதையிட்டு எப்படிப் பெருமைப்படாமல் இருக்க முடியும்?

முகமாலையில் எமது முன்னரங்க வரிசையை ஊடறுக்கும் பிரதானசாலையில் கால் வைக்கின்ற போதெல்லாம் ஏதோ ஒரு வலி இதயத்துள் நுழைவதுபோல் இருக்கும். அந்த நடு வீதியில் குருதி கொட்டிய மாவீரர்களின் ஈகம் வார்த்தையால் விபரிக்க முடியாதது.

* * *

அது 25.04.2001. இருள் விலகாத அதிகாலை. அந்த இருளைப் போக்குவதற்கு சிறீலங்காப் படையினர் நிலைகொண்டிருக்கும் பிரதேசத்திலிருந்து எமது பகுதியை நோக்கி தேடொளிகள் ஏவப்பட்டுக்கொண்டிருந்தன. இராணுவம் என்ன செய்ய முனைகிறது என்பது புரிந்தது. இனி எந்த இடத்திலும் திடீரென முழங்கத் தொடங்கலாம் என்ற எதிர்பார்ப்பு எல்லோர் மனதிலும் விரவிக்கிடந்தது. அனைவரின் மனங்களும் “இந்த இடத்தைவிட்டு அங்குலமேனும் பின்னகரமாட்டோம்” என திடங்கொண்டன. ஏனெனில் வருட ஆரம்பத்தில் நடைபெற்ற இராணுவ முன்னேற்ற நடவடிக்கை ஒன்றில் எமக்கெல்லாம் வழிகாட்டியாகவும், தாயாகவும் இருந்த லெப்.கேணல் மதி. உட்பட பல போராளிகளை இழந்திருந்ததும், இன்னும் சில நாட்களில் எதிர்பாராத விதமாக தளபதி லெப்.கேணல் காவியாவை இழக்கவேண்டி வந்ததும் அனைவரினது இதயங்களையும் உக்கிரப்படுத்தியிருந்தது. அதற்கான பதிலடியாக அந்த முறியடிப்புத் தாக்குதல் அமையவேண்டுமென விரும்பியதுடன் தலைவர் அவர்களின் தீர்க்கமான சிந்தனைகளையும், நுணுக்கமான தந்திரோபாயங்களையும் உள்வாங்கிக்கொண்டோம்.

அப்போது நேரம் 5.30 மணி. திடீரென எமது முன்னணி நிலைகள் அதிர்ந்தன. தயாராயிருந்த துப்பாக்கிகள் கனன்றன. முதலாவது நடவடிக்கையிலேயே பளை நகரினுள் கால் வைப்பது படைத்தரப்பின் நோக்கமாக இருந்தது. முன்னணி நிலையை உடைத்து உள்நுழைந்த படைத்தரப்பு தாக்கியபடியே உட்பகுதியில் பரவத்தொடங்கின. ஒவ்வொரு காப்பரணிலும் நின்ற போராளிகள் விரைவாகப் பதில் தாக்குதலைச் செய்யத் தொடங்கவே பெரும் அக்கினிப் பிரவாகமாய் கனன்றது அப்பிரதேசம். கிளாலிப்பகுதி தொடக்கம் A9 பிரதான வீதி தாண்டி கண்டற்கரை வரையும் படையினரின் தீப்பிழம்பு சொரியத் தொடங்கியது. பிரதான வீதிக்கு வலது பக்கமுள்ள பிரதேசத்திலேயே எமது அணிகள் தாக்குதலுக்கு முகம் கொடுக்க வேண்டியதாயிற்று.

இப்போது ஒவ்வொரு காப்பரணின் சுடும் துவாரங்களும் தத்தமக்குரிய பணியைச் செய்யத் தொடங்கின. ஒவ்வொரு போராளிகளும் தமது உடல் வலிமைக்கு மேலாக மனவலிமையைப் பயன்படுத்திச் சண்டையிட்டனர். சூட்டுத்துவாரங்களினூடாக நீட்டப்பட்ட துப்பாக்கிகளின் குழல்வாய்கள் சிவக்க, பாய்ந்தோடி வரும் இராணுவம் வீழ்ந்து கொண்டிருக்க, முன்னணி நிலைக்குச் சற்றுப்பின்னே 10 மீற்றரில் அமைந்துள்ள காப்பரண் ஒன்றிலிருந்து தெறிக்கிறது துப்பாக்கி ரவைகள். அது பதுங்கிச்சுடும் அணியினரின் துப்பாக்கிகள். ஒன்று.... இரண்டு... மூன்று என எண்ணியெண்ணி சுட்டுக்கொண்டிருந்த அந்த அணிக்கு இராணுவத்தைக் கொன்று அந்த இடத்தைத் தக்கவைக்க வேண்டும் என்பதே நினைவாக இருந்தது. தொடர்ந்து படையினருக்கு இழப்பை ஏற்படுத்துவதில் கணிசமான அளவு தனது பங்கை ஆற்றிக்கொண்டிருந்த கப்டன் இசைப்பிரியாவின் உயிர்மூச்சு நின்றுகொள்ள அவரது ஆயுதம் அடுத்தவரின் கரங்களில் ஏறுகிறது. படீர் படீர் என விழுந்து வெடிக்கின்ற எறிகணைகளுக்கு மத்தியில் மேலெழுகின்ற புழுதி மண்டலத்தையும் ஊடறுத்து முறியடிப்பு அணிகள் நகர்கின்றன.

இந்தச் சமரில் ஒவ்வொருவரும் தம் இறுதிப்பலத்தைப் பிரயோகித்ததுடன் இழப்புகள் என்பதற்கப்பால் வெற்றியைப் பெறவேண்டும். என்னவிலை கொடுத்தாவது எதிரியைத் துரத்த வேண்டும் என்பதில் முனைப்பாக நின்றோம். உடைக்கப்பட்ட பகுதிக்காவலரணில் நின்ற லெப். சாந்தம் உட்பட மூன்றுபேர் வீரச்சாவடைய. அதற்கடுத்த காவலரணில் நின்ற கப்டன் குயில் உள்ளே நின்றபடியே இராணுவத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டிருந்தார். பொழுது விடிந்து சூரியன் மேலெழுந்து ஒவ்வொரு இடங்களையும் தெளிவாகக் காட்டிக்கொண்டிருந்தது. வெள்ளமென வந்த பகைவருக்கெதிராக முழங்கிய துப்பாக்கிகள் சில மெல்ல மெல்ல தம் உயிர்ப்பை இழக்கத் தொடங்கின. அந்தளவுக்கு படையினரின் தாக்குதல் எமக்கு நெருக்கடியாயிருந்தது. சில காவலரண்களுடனான எமது நேரடித் தொடர்பு துண்டிக்கப்பட, அதற்குள் நின்றவர்களுடனான தொடர்பு வானலையூடே மட்டுமே கிடைத்தது. சமர்க்களம் நேரத்தை விழுங்கிக்கொண்டிருந்தது.

அப்போது தனித்ததொரு காவலரணில் இருந்த குயிலினது தொலைத்தொடர்புக்கருவி நிலைமையைத் தெளிவாகச் சொல்லியது. தனது காப்பரணைச் சூழ இராணுவம் நிற்பதையும் தன்னுடன் நின்ற போராளிகளில் ஒருவர் காயமடைய ஏனையோர் வீரச்சாவடைந்து விட்டதையும் தெரிவித்த குயில், தனதிடத்திற்கு தாக்குதலணியை அனுப்பும்படியும், அனுப்பினால் தம்மால் அதற்கடுத்த காப்பரண்களைக் கைப்பற்ற முடியும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனவும் சொல்லிக்கொண்டிருந்தார். சூழவரும் இராணுவத்தினரைக் குறிபார்த்து துப்பாக்கி வீழ்த்திக்கொண்டிருக்க அப்பிரதேச நிலைமைகளைச் சொல்லிக்கொண்டிருந்தது தொலைத்தொடர்புக்கருவி. நிலைமை விளங்கினாலும்கூட அந்தப் பகற்பொழுதில் மழையென வீழ்ந்து தெறிக்கின்ற எறிகணைகளின் நடுவே எப்படிப் போக முடியும் என்ற தவிப்பே அதிகமானது. முகமாலை முன்னணி நிலைகளின் எல்லாப் பகுதிகளிலும் தீ சுவாலையாகப் பற்றிக்கொண்டது. ஆகவே அதனை அணைப்பதிற்தான் இந்தப் போரின் வெற்றியே தங்கியுள்ளது என்பது எல்லோர் மனதிலும் நன்கு பதிந்த ஒன்று. எனவே அணிகள் ஒவ்வொன்றும் உதிரம் சிந்தி தீயை அணைக்கத் தயாராகின. இன்னமும் குயிலினது தொடர்பு இருந்தது. அந்த இடத்தில் நின்றபடியே எதிரியை வரவிடாது இறுதிவரை தக்கவைக்க வேண்டுமென்பதே அவரது துடிப்பாகவும் இருந்தது.

* * *

தீச்சுவாலை வெற்றி கொள்ளப்பட்ட மறுநாள். போராளிகள் மட்டுமல்லாது மக்களும்கூட தம் நெஞ்சை நிமிர்த்தி பெருமைகொண்ட நாள். கிளிநொச்சி மகாவித்தியாலயம் வெள்ளைச் சிட்டுக்களால் நிரம்பி வழிய அந்த அழகைப் பார்த்தபடி முன்னேயுள்ள வீதிக்கருகே நின்றோம். அருகில் உள்ள சிறிய கடையில் ஒரு முதியவர். அவர் எம்மைப் பார்த்து மெல்லிய புன்னகையைச் சிந்தினார். நாமும் பதிலுக்கு முறுவலித்துவிட்டு எமக்குள் கதைக்கத் தொடங்கினோம். எமது கதை தீச்சுவாலையைப் பற்றியதாக இருந்தது. அந்த முதியவர் சற்று நேரம் இருந்துவிட்டு " பிள்ளையள் நீங்கள் எந்தப் படையணி?" என்றார்.

"நாங்கள் மாலதி படையணி" என்றோம்.

இப்படிக் கேட்பவர்கள் பெரும்பாலும் தமது மகளையோ, மகனையோ அன்றி உறவுகளையோ

விசாரிப்பவர்களாகவே இருக்கக் கூடும். அதனால் அவர்கள் கேள்வி கேட்கும் தொனியை வைத்தே. நாம் எந்தப் படையணி என்பதைக் கூறுவது வழக்கம்.

தொடர்ந்து முதியவர், "ஆ... என்ர மகளும் உங்கடை படையணிதான்" என்றார். ஆவல் எங்களைப் பற்றிக்கொள்ள, "என்ன பேர் ஐயா?" எனக் கேட்ட எமக்கு அவர் சொன்ன பதிலைக் கேட்டதும், அவரை நிமிர்ந்து பார்க்கும் திராணி இருக்கவில்லை. பெயரைச் சொல்லிவிட்டு "பளையிலதான் நிக்கிறாவாம். பிள்ளையைக் கண்டு கன காலம்" என்றவரிடமிருந்து ஓர் ஏக்கப் பெருமூச்சு வெளிப்பட்டது. கலங்கிய எங்கள் விழிகளை வேறுபுறம் திருப்பிக்கொண்டோம். தீச்சுவாலையை அணைக்கும் பணியில் உங்கள் வீரமகளும் தீயாகிப் போனாள்" என்று எப்படிச் சொல்ல முடியும்? அந்த வீரச்சாவுச் செய்தியைச் சுமந்துகொண்டு இப்போது யாராவது அவரிடம் வந்துகொண்டிருக்கவும் கூடும்.

* * *

குயில் நின்ற நிலையில் காயமடைந்த இன்னொரு போராளி அசைய முடியாத நிலையில் கிடந்தார். அவரது காயத்திலிருந்து வழிந்த குருதியைக் கட்டுப்படுத்திய குயில், உதவியணியை அனுப்பும்படி சொன்னார். முறியடிப்பு அணிகள் அவ்விடத்திற்கு வருமட்டும் தான் நிலையைத் தக்கவைப்பதாக உறுதியளித்தபடி துப்பாக்கியை இயக்கிக்கொண்டிருந்தார்.

அந்நேரம் இராணுவம் ஏவிய RPG எறிகணை ஒன்று குயிலினது காப்பரணில் மோதி வெடித்து தீயையும் உண்டுபண்ணிவிட்டிருந்தது. இப்போது தீக்கங்குகளின் நடுவே குயிலும் காயமடைந்த போராளியும்.

காயமடைந்தவரையும்கொண்டு வெளியேற முடியாத நிலை இப்போது குயிலுக்கு.

படிப்படியாக தீ நாக்குகள் அவர்களையும் தீண்டத் தொடங்கின. தொலைத் தொடர்புக் கருவியூடாக அணியை அனுப்பும்படியே கேட்டுக்கொண்டிருந்த அந்தக் குரல் தேயத் தொடங்கியது. அந்த இறுதிக்கணம் வரை துப்பாக்கி வெடியோசை மட்டும் நிற்கவேயில்லை. தீச்சுவாலை அவரைத் தன்னுடன் அணைத்துக்கொண்டதாயினும் இறுதிவரை அக்காவலரணை நெருங்கப் படையினரால் முடியவில்லை. கப்டன் குயில் வரலாற்றில் அழியாத பதிவானார்.

* * *

இப்படி எத்தனை வேங்கைகளின் உயிர்களை விலையாகக்கொடுக்க வேண்டியிருந்தது. ஒவ்வொருவரின் வீரச்சாவு நிகழ்வுகளும் இந்த அத்தியாயத்தின் வெற்றிக்கான படிக்கற்கள்.

வெடிபொருட்களை சண்டையிடத்துக்கு நகர்த்த முடியாத வேளையில் இராணுவத்தினரது வெடிபொருட்கள் வழமைபோலவே அந்த இடத்தை நிரப்ப உதவியது. தான் சுமந்து வந்த வெடிபொருட்களாலேயே தன்னுயிரை இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு எதிரியைத் தள்ளிய வீரர்கள் விழிகளை மூடிக்கொள்ள தீச்சுவாலையும் அணைந்துபோனது.

ஒரு காவலரணைத் தக்கவைப்பதற்காக பல தடவை போராடவேண்டியிருந்தது. மூன்று நாட்களாக தண்ணீரின்றி, உணவின்றி, கிடைத்த உணவை உண்ண நேரமின்றி எல்லோருமே களைத்துப் போன போதும் வெல்ல வேண்டும் என்ற உறுதியின் முன் எதிரியால் நின்று பிடிக்க முடியவில்லை. முகமாலைப் பகுதியில் நின்ற ஒவ்வொரு படையணிகளுமே, ஏன் எல்லைப்படையாக எழுந்த எமது வீரமக்கள்கூட நெருப்பாக நின்று சண்டையிட்டனர். தீயின் சுவாலை தீய்ந்துபோனது. கட்டம் கட்டமாக நகர்த்தி தம்மால் இழக்கப்பட்ட ஆனையிறவை மீளக் கைப்பற்றவெனத் திட்டமிட்டவர்களால் முதலாவது கட்டத்தைக் கூட முழுமையாக்க முடியாமல்போன பரிதாபத்திற்குரியவை சிறீலங்காப் படையினது மட்டுமல்ல, வல்லரசுகளினது தந்திரோபாயங்களும் கூடத்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீண்டும் பூர்வீ

இக்னோசியோ சைலோன்


இக்னோசியோ சைலோன் (1900-1978) ஒரு வறுமை நிரம்பிய இத்தாலியக் கிராமத்தில் பிறந்தார். அவரது குடும்பம் ஒரு பூகம்பத்தில் இறந்து விட்டது. அவரது ஒரே சகோதரன் முசோலினியின் இரகசியப் போலிசால் இறக்கும்வரை சித்திரவதைக்குட்பட்டார். பாசீச ஆட்சிக்கு எதிராக புரட்சி செய்ததற்காக இது நிகழ்ந்தது.

சைலோன் தற்கால ஐரோப்பிய இலக்கியத்தின் முன்னணி எழுத்தாளராகக் கருதப்படுகிறார். அவரது முக்கிய நாவல்களான 'பன்மாரா' ரொட்டியும் திராட்சைரசமும்' 'லூகாவின் மர்மங்கள்' என்பன ஐரோப்பிய இலக்கியத்தின் மைல்கற்கள்.

சைலோன் முசோலினியின் பாசிச இயக்கத்திற்கு எதிராக செயற்பட்ட இரகசிய அமைப்பின் தலைவராக இருந்தார். முசோலினியின் இரகசிய பொலிஸ் அவரின்மேல் பிடிவிறாந்து பிறப்பித்திருந்தது. கைதாவலிருந்தும், சித்திரவதைக்கு உட்படாமலிருக்கவும் சுவிஸ்நாட்டுக்குத் தப்பி ஓடினார். கடைசிவரை இரகசிய பொலிசும் அவரை பின்பற்றியபடி இருந்ததால் அக்காலகட்டம் முழுவதும் இடம் மாறிமாறி இருக்கவேண்டியிருந்தது.

முசோலினியின் வீழ்ச்சிக்குப்பின் நாடு திரும்பிய சைலோன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். பின்பு அதிலிருந்து விலகிக்கொண்டார். இப்போது 21ம் நூற்றாண்டின் இணையற்ற ஒரு நாவலாசிரியராக (மிகவும் பிந்தியே) உலகம் அவரை ஏற்றுக்கொண்டுள்ளது. 'லூகாவின் மரணங்கள்' என்ற நாவலில் இருந்து இந்தத் துணைக்கதை எடுக்கப்பட்டுள்ளது. யுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறியிருந்த தனது சொந்த ஊருக்குத் திரும்பிவருகையை இத்துணைக்கதை சொல்கிறது.

ஆங்கில வழி தமிழில்:
சு. மகேந்திரன்



ஏறுவதற்கு கடினமானதும் ஆடுகளுக்கே உரியதுமான அந்தப் பாதை கரடுமுரடான ஒரு குன்றை நோக்கிச் சென்றது. அந்த வயதான மனிதன் அவனது உச்சியை அடைந்தபோது, அவரது நடையில் வேகம் குறைந்திருந்தது. ஆயினும் அவரது சுவடுகள் சீராகவே இருந்தன. உச்சியில் பாதை கரடுமுரடாகவும் வளைவானதாகவும் காணப்பட்டது. பாதையின் ஓரிடத்தில் இருந்து ஒரு பீடத்தில், இரும்பாலான சிலுவை ஒன்று மேலெழுந்திருந்தது மூச்செடுப்பதற்காக அந்த மனிதன் ஒரு நிமிடம் தாமதித்தான். தனது முகத்தில் அரும்பிய வியர்வையைத் துடைத்துக்கொண்டான்.

கால்களை நெருக்கமாக வைத்துக்கொண்டு, ஒரு பெண் சிலுவையருகே அமர்ந்திருந்தாள். இளவயதிலான அந்த கிராமத்துப் பெண், தலையில் கைக்குட்டை ஒன்றைக் கட்டியிருந்தாள். அவளது பக்கத்திலிருந்த பெரிய கூடையில் சிவப்பு நிற மிளகு நிறைந்திருந்தது. அவள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாளா, அல்லது பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறாளா என மட்டிட முடியவில்லை. சிலுவை அறையப்பட்டிருந்த பீடத்தில் 'லென்றன்' மிசனைச் சேர்ந்த 'பசனேற்' பாதிரிமார்களின் நினைவாக, எனச் செதுக்கப்பட்டிருந்தது. கி.பி 1900

பீடத்தில் எழுதப்பட்டிருந்ததை அந்த வயதான மனிதர் நோக்கினார். அப்போது அந்தப் பெண் அவரைக் கவனிக்கலானாள்.

"நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்" என அவள் கிழவரைக் கேட்டாள். மனிதர் விடை ஏதும் கூறவில்லை. எழுபது வயதுக்குரிய தோற்றத்துடன் அவர் இருந்தார். வறுமை வயப்பட்டவர்போல் இருந்த போதும், திடகாத்திரமுடையவராகவே காணப்பட்டார். அழகானவராகக்கூட இருந்தார். பார்வைக்கு, இப்போது கூட வேலைசெய்யக்கூடியவர் போலவே தெரிந்தது. ஆயினும் அவரது தோற்றத்திலிருந்து அவர் எவ்வகையான வேலைகள் செய்பவர் என்பதை மட்டிட முடியாமலிருந்தது. அவர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் அல்ல என்ற ஊகத்திற்கு, அவர் தலையில் தொப்பி அணியாமலிருந்ததும் கூட ஒரு காரணமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிராமத்திற்கு வருகை

இருக்கலாம். நரைத்த தலைமயிரைக் குட்டையாக வெட்டியிருந்தார். காலில் எதுவுமே அணிந்திருக்கவில்லை. பலநாள் சவரம் செய்யப்படாததால் தாடி வளர்ந்திருந்தது. உடைகள் சுத்தமாக இருந்தும்கூட ஒட்டுப்போட்டவையாகவும் கசங்கியதாகவும் இருந்தன. தடித்த கனமான அந்த உடைகள், அப்போது அங்கு நிலவிய காலநிலைக்கு ஒவ்வாதவையாக இருந்தன. வினோதமானவையாகக்கூட அவை தோன்றின. பெரிய கோதுமை ரொட்டி ஒன்றும், சப்பாத்துகளும் அவரது கழுத்தின் இரு மருங்கிலும் தொங்கிய சாக்கின் வெளியே நீட்டிக்கொண்டிருந்தன.

அந்தப் பெண் தனது சட்டைப் பையிலிருந்த ஒரு நாணயத்தை தடவி எடுத்து, அதை அன்னியரான அந்தக் கிழவருக்கு அளிக்க முற்பட்டாள்.

"யோசிக்காதே இதனை எடுத்துக்கொள்" என்றாள் அந்த இளம் பெண், கிழவர் ஆலிங்கனம் செய்யப்பட்ட நிலைக்கு உட்பட்டு விட்டவர் போன்ற உணர்வுடன், அவளது நீட்டப்பட்ட கைகளைப் பார்த்தார்.

"ஓ இல்லை" என்று மிக மெதுவான குரலில் கூறியவர் "மிக்க நன்றி அது எனக்கு தேவைப்படவில்லை " என்றார்.

"உங்களுக்கு அவமரியாதை உண்டாக்கும் நோக்கில் நான் இதனைச் செய்யவில்லை " அவள் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். திரும்பவும் ஒருமுறை காசைக் கொடுக்க முயன்றாள். "நீங்கள் நீண்ட தொலைவிலிருந்து வருகிறீர்களா? இந்தக் கிராமப் பகுதியை உங்களுக்கு முன்பே தெரியுமா"

அவள் கூறியவைகள் கேட்டும் கூட அவர் மறுமொழி எதுவும் கூறவில்லை. நடக்கத் தொடங்கினார். எதிரே தெரிந்த மலையின் தோற்றத்தை அப்போதுதான் எதிர்கொண்டவர், பாதையில் அப்படியே நின்றுவிட்டார்.

"என்னதான் நடந்தது" எனக் கிழவர் கூவினார். அந்தப்பெண்ணின் பக்கமாக திரும்பி, "அந்தக் காடுகள் எங்கே?" என்றார்.

"உங்களுக்குத் தெரியாதா?" என அவள் கேட்டாள். அழுத்தம் திருத்தமாக அவர் தலையை ஆட்டினார். அவரின் முன்னால் கறுப்பாகவும் மூளியாகவும் தோன்றிய மலை, பின்புறமாகத் துருத்திக்கொண்டு நின்றது. அதன்மேல் சில தடிகளும், புதர்களும் மட்டுமே மண்டிக்கிடந்தன.

"அவர்கள் காட்டினை எரித்துவிட்டார்களா?" கவலையும் பயமும் அவரது முகத்தில் தெரிந்தன. யுத்தத்தின்போது தான் இது ஏற்பட்டதா?"

"ஒருவருக்கும் இது எப்படி நடந்தது எனத் தெரியாது. சிலர் இது கடவுளின் சாபத்தால் ஏற்பட்டது என்கிறார்கள்"

"எப்போது இது ஏற்பட்டது?"

ஒருகணம் அந்தப்பெண் யோசனையில் ஆழ்ந்தாள்.

என்னால் அது நடைபெற்ற ஆண்டையோ அல்லது பருவ காலத்தையோ நினைவுகூர முடியவில்லை என அவள் கடைசியாகக் கூறினாள். ஆனால் என்னால் நினைவுபடுத்தக்கூடியதெல்லாம், அது ஒரு வெள்ளிக்கிழமை என்பது மட்டும்தான்.

"இவ்வளவு காலமும் எத்தனையோ வெள்ளிக்கிழமைகள் வந்து போயிருக்கும்" என்றார் கிழவர். அப்போது கூட அவரது கண்கள் மூளியாகத் தெரிந்த மலையின் முகடுகளில் நிலைத்திருந்தன.

"எவ்வாறாயினும் நீங்கள் கூறுவது சரிதான்" என அப்பெண் அவரது கூற்றை ஆமோதித்தாள். "ஆயினும் எல்லா வெள்ளிக்கிழமைகளும் ஒரே மாதிரியானவைதான் இல்லையா?" என்றாள். அந்த மலைச் சாரலில் வெட்டப்பட்டிருந்த குறுகிய பாதையில் அவர் நடக்கத் தொடங்கினார். அவர் முதலாவது வளைவினைச் சுற்றி வந்தபோது, அந்தக் கிராமம் தோன்றியது. மலையின் சரிவில் அவளுக்கு முன்புறமாக பருந்தின் இறகுபோல் அது படர்ந்திருந்தது. உயரமான கைகாட்டி மரம் ஒன்றில் 'சிஸ்ரோனா -டைபேர்சி' என்று அதன் பெயர்செதுக்கப்பட்டிருந்தது. கடல் மட்டத்திலிருந்து 308 அடி உயரம் எனவும் எழுதப்பட்டிருந்தது. பாதையின் இரு மருங்கிலும் எரிந்த மரங்களின் அடிக்கட்டைகளும், குறியிடப்பட்ட ஒரு சில வாதுமை மரங்களுடன் கூடிய பெரிய மரப்பற்றைகளும் பக்கம் பக்கமாக அங்கு நின்றன. மலையின் அடிவாரத்துக்கு மேல் ஒரு கல்லாலான பாலம் இருந்தது. குத்தான படுகையை நோக்கி ஒரு நீரோடை பாய்ந்துகொண்டிருந்தது. அதன் கரையை அடைவதற்கு ஒழுங்கற்று வெட்டப்பட்டிருந்த ஒரு பாதையால் அம்மனிதர் கீழே சென்றார். தனது சாக்கை கீழே வைப்பதற்காக ஒரு சுத்தமான இடத்தை தேடினார்.

பாலத்துக்கு நேர்கீழே துருத்திக்கொண்டு நின்ற கல்லொன்றின் மீது அந்த நீரோடை விழுந்துகொண்டிருந்தது. நீரால் அக்கல் மூடப்பட்டிருக்க, ஆழமான மடு ஒன்றில் தெளிவான நீர் தேங்கி இருந்தது.

நீரோடையின் கரையில் இருந்த புற்படுகையில் அமர்ந்துகொண்ட கிழவர், தனது புழுதிபடர்ந்த தளர்ந்துபோன காலை நீரில் அமிழ்த்தினார். சில்லென்ற நீரின் பிரவாகம் அவரை மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. ஒரு பத்து வயதுப் பிள்ளையை ஒத்த சந்தோசத்துடன், கால்களைத் தண்ணீரில் விரைவுடன் உதைத்து அதனை வாரியிறைத்துக்கொண்டிருந்தார். அதன் பின் சூரிய ஒளியில் கால்களைப் படவிட்டு அவற்றை காயவைத்தார். சாக்கிலிருந்து சப்பாத்துக்களை வெளியே எடுத்தார். சப்பாத்தைப் போடுவதற்கு சற்றுச் சிரமப்பட்டது தெரிந்தது. கழுத்தையும் கைமுகத்தையும் கழுவியபோது, அந்த விரைவான செய்கையில் ஏதோ புனித நீரால் அவற்றைச் சுத்தம் செய்வதுபோன்ற தன்மை தெரிந்தது.

பின் தாகசாந்தி செய்ய ஆயத்தமானார். கரையில் முழுமையாக நீளத்தில் உடலை கிடத்தி, நீரோடையின் பக்கமாகச் சாய்ந்து முகத்தில் நீர் படும்படியாக குனிந்துகொண்டார் கிழவர்.

ஒரு குதிரை நாள்முழுவதும் வேலைசெய்துவிட்டு நீர் அருந்துவதுபோல் தண்ணீர் அருந்தினார். ஒவ்வொரு முறையும் நீரை அருந்தி இடை நிறுத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிக நேரம் எடுத்தது. மீண்டும் உற்சாகமிழந்தவராகி வெளிக் கிளம்ப ஆயத்தமானார்.

# மீண்டும் பூர்வீக கிராமத்திற்கு வருகை

ஆங்கில வழி தமிழில்: சு. மகேந்திரன்

இக்னோசியோ சைலோன்

அப்போது யாரோ அழைக்கும் சத்தம் கேட்டது. வேலமரம் ஒன்றின் நிழலில் புற்தரையில் ஒரு மனிதன் படுத்திருந்தான். இவ்வளவு நேரமும் அவரது பார்வையில் அவன் தட்டுப்படவில்லை.

"இங்கு பொதுமக்களுக்கான நீர்ச்சுனை ஒன்று உள்ளது" என அந்த மனிதன் கூறினான். "உங்களுக்கு நீர் அருந்த வேண்டுமாயின், கிராமத்துக்குள் சென்றால் அங்கு அது உள்ளது"

"ஓ அப்படியாயின் இப்போது உங்களுக்கென ஒரு நீர்ச்சுனை கூட உள்ளது"

குரலில் ஆர்வம் தெரிய "நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்" என்ற அந்த மனிதன், நீங்கள் யாரையாவது தேடுகிறீர்களா?" என்றான்.

அன்னியரான அந்தக் கிழவர் சடுதியாக அவசரப்பட்டார். எவ்வித மறுமொழியும் கூறாமல் மீண்டும் ரோட்டிற்கு வந்தார். நிதானமாக மலை மீது ஏறி கிராமத்தின் சுற்றுப் புறத்திற்குப் போகத் தலைப்பட்டார்.

மந்தம் நிறைந்த அமைதியுடன் இருந்த அந்தப் பின்னேர நேரத்தில், கிராமம் குடிசனம் ஏதுவுமற்றது போலக் காட்சி அளித்தது. வீதிகள் எல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன. வீடுகளின் யன்னல்களும் கதவுகளும் மூடப்பட்டிருந்தன. எங்கும் அமைதி நிலவியது. தூய்மையுடன் திகழ்ந்த புதிய சிறிய வீடுகளின் சுண்ணாம்புப் பூச்சு சரியாகக் காயக்கூட இல்லை. பெருந்தெருவுக்கு முன்புறமாக பழைய குடியிருப்புக்களும் அசுத்தம் நிரம்பிய தற்காலிக்க குடியிருப்புக்களும் இடிபாடுகளிடையே காணப்பட்டன.

கிராமத்தின் உட்புறத்திற்கு அவர் வந்தபோது நடை சீரற்றதாகியது. கலவரம் அடைந்தவர் போலானவரது நடையில் வேகம் குறைந்து சட்டென அவர் நின்றார். அவர் நின்ற இடத்தில் சில வீடுகளின் இடிபாடுகள் குவியலாகக் கிடந்தன.

அங்கு சற்று நேரம் தாமதித்தார். விழுந்து கிடந்த யன்னல்களையும் படிகளையும் உற்றுப் பார்த்தார். கண்ணைக் குத்தும் சூரியவெளிச்சத்தில், பாதையின் நடுவில் நடக்க ஆரம்பித்தார்.

கண்ணால் பார்க்க முடியாத காதால் கேட்கமுடியாத உணர்வுகளைத் தந்த அந்த இடிபாடுகளுக்கூடாக அவர் போனார். அவரைப் பார்த்தபோது பேய் பிடித்தவர்போலவும் தோன்றியது.

அந்தப் பழைமையான தேவாலயத்துக்கு அருகே அவர் வந்தபோது சிறிது தயங்கினார். பின் பாதிரியார் வீட்டிற்கு சென்றார். அவ்வீட்டிற்கு, வந்தபோது வீட்டின் வரவேற்பு மணிக்கு அண்மையாக அவர் செல்வதை தடுக்கும் விதத்தில், ஈக்களும் தூசியும் நிரம்பியிருந்த அந்த இடத்தில், ஒரு மனிதன் சுருண்டபடி படுத்திருந்தான். அரைகுறையாகவும் கிழிந்த நிலையிலுமிருந்த அவனது உடைகள், கறுத்த வற்றிப்போயிருந்த உடலை வெளிப்படுத்திக் காட்டியது அவனது உடல் எரிந்த சடலம் போலிருந்தது. ஆயினும் அந்நியரான அந்தக் கிழவரது நிழல் பட்டதுமே, அவனை எழுப்புவதற்கு போதுமானதாக இருந்தது.

"இந்த நேரம் பார்த்து நீ இங்கு ஏன் வந்தாய்?" நித்திரையிலிருந்தவன் கோபத்துடன் முணுமுணுத்தான். அவனது கண்கள் அரைகுறையாக மூடியிருந்தன.

"நான் பங்குத் தந்தையை சந்திக்க விரும்புகிறேன்"

படுத்திருந்தவனுக்கு முகத்தில் மெலிதாக எரிச்சல் உண்டாகி மறைந்தது.

"நாங்கள் வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே தர்மம் செய்வதென எத்தனை முறை உனக்குக் கூறுவது" என அவன் தனது வாய்க்குள் முணுமுணுத்தான்.

"பங்குத் தந்தையைப் பார்க்கமுடியாதா" எனத் திரும்பவும் அன்னியரான அந்தக் கிழவர் அவனை வற்புறுத்தினார்.

"டொன் பிரான்சிஸ்கோ ஆழ்ந்த துயிலில் இருக்கிறார்" என அவன் முணுமுணுத்தான்.

"எல்லோரும் ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறார்கள்"

கிழவர் திகைப்படைந்தது தெரிந்தது "பங்குத் தந்தையின் பெயர் என்ன என்று சொன்னாய்?"

"அவரது பெயர் டொன் பிரான்சிஸ்கோ உனக்குத் தேவையானதெல்லாம் அதுதானா?"

"ஓ அப்படியாயின் உன்னைத் தொந்தரவு செய்ததற்கு மன்னித்துவிடு" என்ற கிழவர் "தான் தேடிவந்த மனிதர் அல்ல" என்றார்.

சேர்ச்சிலிருந்து வெளியேறிய கிழவர் வீட்டு நடைபாதையை ஒத்த வளைந்த குறுகிய சந்துகளின் வழியாக பிரேமையில் மூழ்கியவர் போல சென்றுகொண்டிருந்தார். இந்த இடமே கிராமத்தின் மிகப்பழமையான பகுதி, பரப்பிய சிறிய கற்களைக் கொண்ட பாதையில் அவர் வைத்த ஒவ்வொரு அடியும் இரவு நேரங்களில் சப்தமிடாமல் இரை தேடி அலையும் பிராணிகளின் நடையைப் போலிருந்தது. சடுதியாக இந்த அமைதி. ஒரு பழைய வீட்டின் முதலாம் மாடியின் யன்னல்கள் விசையுடன் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட படபடவென்ற ஓசையால் சிதைவடைந்தது. இருட்டில் தடவியபடி கண்மணிகளற்ற வெற்று நேத்திரக் குழிகளையுடைய ஒரு பெண் செய்வது அறியாது தடுப்புகளின் பக்கமாக வந்தாள். அவள் மெலிந்து உயரமாகவும் இருந்தாள். பிரத்தியேகமான கறுப்பு உடை ஒன்றை அணிந்திருந்தாள். நெருங்கி வரும் கிழவரின் காலடி ஓசையை அவதானித்தாள்.

"யார் அங்கே நடந்து வருவது?" என ஊடுருவும் குரலுடன் அவள் கத்தினாள். " நீ வருவது எனக்கு கேட்கிறது மனிதனே" என்றாள்.

சடுதியாக கால் தடங்களின் ஓசை நின்றது. கிழவர் இந்த ஒழுங்கையின் நடுவில் நின்று கொண்டார். உருவமற்ற ஒன்றைப் பார்ப்பது போலிருந்தது அவரது பார்வை.

"அது நீதானா" இப்போது அந்தப் பெண்ணின் குரலில் ஆர்வமும் இரக்கமும் தெரிந்தது மீண்டும் மீண்டும் அது நீதானா எனக் கூறியபடி இருந்தாள்.

ஆயினும் ஒருசிறு பெண் இனிமையாகப் பேசி குருடியைப் பணியவைத்து அரவணைத்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

"அது யாரோ ஒரு நாடோடி" என்ற அச்சிறுமி மீண்டும் அந்த வசனத்தை சொன்னாள். "ஏமாற்றுவித்தைகள் புரியும் இந்த நாடோடிகளிடம் கவனமாக இரு" என அந்தக் குருட்டுப் பெண் வீரிட்டகுரலில் கூறினாள். அந்தக்குரலில் திருப்தியற்ற தன்மை காணப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேல்மாடியின் கதவுகள் மீண்டும் மூடும் வரை கிழவர் அங்கிருந்து அசையவில்லை. அதன்பின் அவர் அங்கிருந்து போகத் தலைப்பட்டார். ஆனால் அவரது நடை இப்போது மெதுவானதாகவும் நுனிக்காலில் நடப்பது போலவும் இருந்தது. அவரது இலக்கை அடைவதற்கு இனி அதிக தூரம் செல்லவேண்டி இருக்கவில்லை, அது ஒரு சிறிய சதுக்கம். மூன்று பக்கங்களிலும் இடிபாடுகளிருந்தன. நான்காவது பக்கத்தில் ஒரு சிதைந்த வீட்டின் மேல் பகுதி மிகுந்திருந்தது. இரு கதவுகளுக்கும் குறுக்காக மரச் சட்டங்கள் கிடையாக ஆணியால் அறையப்பட்டு வீடு தாழிடப்பட்டிருந்தது. மேல் மாடியின் ஒரு பக்கச் சுவர் வீழ்ந்திருந்தது. காலநிலை மாறுதல்களுக்கும் புல் பூண்டுகளின் தயவிற்கு அக்கட்டிடத்தின் உட்பகுதி ஆட்பட்டிருந்தது.

தனது சாக்கை கிழவர் கீழே வைத்தார். சடுதியாக திருகி இழுத்தும், எகிறி பெருமூச்சு வரும்வரை தள்ளியும் தாழ்ப்பாளாக அமைந்திருந்த மரச்சட்டங்களை கதவினின்றும் அகற்ற முயன்றார். ஆனால் அந்த மரச்சட்டங்கள் வைரம் பொருந்திய கசுக்கொட்டை மரத்தாலோ அல்லது புன்னை மரத்தாலானவையோ தெரியாது மேலும் ஆணிகள் பெரியனவாகவும் துருப்பிடித்தும் ஆழமாக அடிக்கப்பட்டிருந்த காரணங்களாலும் கதவிலிருந்து அகல மறுத்தன.

"நீங்கள் வீணாக உங்கள் நேரத்தைச் செலவு செய்கிறீர்கள்"

"எனக்கு வீட்டின் உட்புறம் எப்படி இருக்கும் எனத் தெரியும்" என அதே குரல் குதூலகத்துடன் தொடர்ந்தது. அங்கு எதுவுமே திருடுவதற்கு மீதமில்லை.

அந்தக் குரலுக்குரியவன் விஷமத்தன்மை கொண்ட சப்பாத்து அணியாத ஒரு சிறுவனாக இருந்தான். சிக்குடன் கூடிய தலைமயிருடன், நீளம் குறைந்த கால்சட்டை அணிந்திருந்தான். கால்சட்டை இடுப்பில் நிற்பதற்காக கயிற்றினால் கட்டப்பட்டிருந்தது. குவிக்கப்பட்டிருக்கும் இடிபாடுகளின் நிறத்தை ஒத்திருந்தது அவனது நிறம்.
மேலும் பல தடவைகள் அந்தக் கதவை தனது தோள்மூட்டால் உக்கிரமாக அடித்து அதனை திறக்க முனைந்தார் கிழவர்.

"உங்களுக்குத் தேவையானதெல்லாம் ஒரு இரும்புக்கோல்தான்" என்றான் பையன். அவன் பேசும்போது ஏதோஒன்றைத் தனது பின்புறமாகப் பிடித்தபடி இருந்தான்.

"உண்மைதான், தேவையானது என்னவோ ஒரு இரும்புக்கோல்தான்" என்றார் கிழவர். "ஆயினும் அதனை எப்படி நான் பெற்றுக்கொள்ளப்போகிறேன்".

"என்னுடன் நீங்கள் சினேகம் பூண்டால் என்னுடையதை உங்களுக்குக் கொடுக்க முடியும். தான் மறைத்து வைத்திருந்த கோலை அவரிடம் அவன் அளித்தான்.

"நன்றி" என்ற கிழவர் இப்போது சிரத்தை காட்டத்தொடங்கினார்.

"உன்னுடைய பெயர் என்ன?"

"ரொனி, உங்களுடையது" "லூகா யார் உனது தகப்பனார்?"

"எனக்கு தெரியாது. ஆனால் எல்லோரும் பன்றித் தலையன் என அழைக்கிறார்கள்"
கிழவர் சிரித்துக்கொண்டார்.

"நல்லது நான் ஜம்பமடிக்க விரும்பவில்லை. அல்லது என்னையும் உன்னையும் ஒப்பிடவும் முடியவில்லை. ஆனால் உனது வயதில் நான் இருந்தபோதும் என்னையும் அந்தப் பெயரால் அழைத்தார்கள்.
ரொனி வெடிச் சிரிப்புச் சிரித்தான். அதனால் அவனது முகத்தில் தேங்கி இருந்த அழுக்கில் உழவியது போன்ற மெலிந்த கோடுகள் உண்டாக்கியது. அவனது வினோதமான பச்சைநிறக் கண்களில் வயதுக்கு மீறிய புத்திசாதுர்யம் ஜோதிபோல் பிரகாசித்தது.

"நல்ல சினேகிதரா நீங்கள் இருப்பீர்களா?" என கேட்ட அவனது குரலில் பவித்திரம் நிறைந்திருந்தது. "ஒரு உறுதிமொழியை உங்களால் காப்பாற்ற முடியுமா?"

"அப்படி முடியுமெனவே நினைக்கிறேன்"

"உங்களால் ஒரு இரகசியத்தை காப்பாற்ற முடியுமா?"

"ஆமாம் ரொனி என்னால் அது முடியுமெனவே நினைக்கிறேன். இன்னும் ஏதாவது கேள்விகள் உள்ளனவா?"

"இப்போதைக்கு அது போதும், விரையுங்கள், அயலவர்கள் விழித்தெழுவதற்கு முன்பு எமது வேலையை முடித்துவிடுவோம்"

அவரது வீட்டுக்குள் அந்தச் சிறுவனுடன் அவர் சென்றார்.

# நெருக்கடிக் காலம்

**நா**ன் இதை எழுத ஆரம்பித்தபோது
வானம் நிர்மலமாயிருந்தது.
தென்றலில் நறுமணமேற்றி
தோட்டத்து மரங்கள்
பூக்குளித்திருந்தன.
கூரையில் மழைத்துளி தாளமிட
கூத்தாடிய என்பேனா கவிதையென
நிறையவே இருந்தது எழுத
நாளையும் நாளை மறுதினமுமென
எழுதித்தீர்க்கலாம் என்றோய்ந்தன்

மறு நாள்
வானம் இருள் கண்டது
திக்கதிரும் ஓசைகள் — இடியல்ல வெடி.
வெண்மணல் பரவிய என் முற்றத்தில்
ஐந்தாம் வீட்டுத்தென்னையின் குருத்து
குதறிக் கிடந்தது.
பிணவெடி தோய்ந்த தென்றல்
பூக்கள் தீ மூண்டனவோ?
கூத்தாடிய என் பேனா
கண்ணீர் வடித்து தாளில் சிவப்பாய்
தொடர்ந்து எழுதினேன்.

எழுதி திருத்தி எழுதி
மறுபடியும் எழுதி
இன்றிருந்தவனின் பெயரை
நேற்றைய அத்தியாயத்தில் வெட்டி
என்னூரில் தொடங்கிய பேனா
பல ஊர்கண்டும் தொடர்கிறது.
அன்று என் எழுத்துக்களை
கிழித்த மகிழ்ந்த மூத்தவனுக்கு
நேற்று மூன்றாந்திதி
மற்றொன்று வெங்களத்தில்.

நான் எழுது பாடிய
என்னினியவளின் முகத்தில்
இன்றது தொலைந்தது
எழுதுவதை முடிக்கவெனவும்
புதிது புதிதாய் விரிகிறது
அத்தியாயங்கள்.
எவ்வொருவராய் இறக்க இறக்க
குருதி பெருகிறது பேனாவில்
நானஞ்சுகிறேன்
நான் எழுத எழுத.....
வேண்டாம் நான் முடிக்க விரும்புகிறேன்.

நிஜன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்களுக்குள்.
இடிந்தழிந்து போன அவர்களின்
பூர்வீகக்கிராமத்தின் இல்லாமலாகிவிட்ட
அவனது வீட்டின் பின்பகுதியின் வைரவர்
மேடையைநோக்கி அவனுடைய தம்பியும்
இன்னும்பலரும் வேகமாக ஊர்ந்து
செல்லவதாகவும் எல்லாக்கால நீட்சிக்கும்
அப்பாற்பட்டு இரும்பாகவும் மண்ணாகவும்
மரமாகவும் அழிவற்றிருக்கும் திரிசூலத்தை
எல்லோரும் ஒன்றாகித் தூக்குவதாவும்
அது பல்லுருக் கொண்டு ஒவ்வொருவர்
கைகளின்; கண்களின் ஜொலிப்பில்
மீண்டும் மீண்டும் ஒளிபொருந்துவதாகவும்
காட்சிகள் ஓடிக் கொண்டே இருந்தன.
அவனது மூடிய கண்களுக்குள்

**சந்திரபோஸ் சுதாகர்**



# நெருப்புக் காலத்தில் ஒரு துளிர்

ஒரு நாள் மாலை - அது நீண்ட நாட்களின் பின்வந்தது - நகரின் மையத்திலிருந்த கடைத் தெருக்களிலும் வேறு சில அருகான இடங்களிலும் கொடிய விஷத்தைப் பீய்ச்சிய படி காற்றோடு வந்தன பாம்புகள்.

கட்டிடங்கள் விஷத்தின் சிதறல்களால் உருக்குலைந்து அழிந்தன; ஓட்டுக் கூரைகள், நீண்ட கோபுரங்கள், மனிதர்கள் அனைத்தும்அனைத்தும். ஒவ்வொன்றும் திசைகளின் நடுவே அந்தரத்திற் பறந்து எங்கோ வீழ்ந்து தொலைந்தன அல்லது உயிருடனிருந்த மனிதர்களின் எஞ்சிய துடிப்பையும் எண்ணற்றவிதத்தில் நசுக்கிச் சிதைத்தன. பீதியின் கூக்குரல்களாலும் புகை மூட்டத்தினாலும் நகரம் காணாமற் போனது.

விஷம் தெளிக்கப்பட்ட காற்றும், பாம்புகளும் ஒவ்வொரு மனிதர்களையும் துரத்தித் துரத்திச் சாகடித்தன. மனிதர்கள் அதனுள் மூழ்கி மூச்சிழந்து செத்தார்கள். எஞ்சிய எல்லோரும் தமது பூர்வீக நகரத்தையும் அண்டிய கிராமங்களையும் விட்டு சாக்குப் பைகளோடு காணாமற் போனார்கள். நகரின் இடிபாடுகளுக்கு மேலாக காகங்கள் பறந்து திரிந்தன. கூரிய அலகுகளால் இறந்த ஒவ்வொன்றையும் கொத்திக் கொத்தி விஷத்தில் ஊறிச்செத்து கருகிய மரங்களின் மீதும் தெருக்களின் மேலும் புழுக்களாய் ஊர்ந்து நகர்ந்தன. பாம்புகள் பெருத்த ஓசையோடு அரைந்து நகர்ந்த அடையாளங்கள், கட்டிடச் சிதைவுகளிலும் பிணக்குவியல்களிலும் சவுக்கடியாய் பதிந்து கிடந்தது.

எஜமானர்களைத் தேடித் தேடி வெறிபிடித்து அலைந்த நாய்கள் நீண்ட நாட்களின் பின் நகரக் குவியல்களின் மீது தமது அடையாளத்தையே தொலைத்து விட்டிருந்தன.

வார்த்தைகளில் அடங்காத வர்ணஜாலங்களோடு கூடியிருந்த மண்ணும் வானமும் தொலை தூரத்திலிருந்து வந்து சேர்ந்த பாம்புகளின் கொடிய விஷத்தின் கருமைக்குள் ஒழிந்து போனது.

சொற்ப நாளைக்குள் சுடுகாடாகிப்போன தமது பூர்வீக நிலத்தைவிட்டு அவர்கள் வந்துசேர்ந்த காட்டோரக் கிராமங்கள் மனிதர்களால் நிறைந்து வழிந்தன. பழைய குடியிருப்புகளினூடே புதிய குடியிருப்புக்கள், தெருக்கள், கோயில்கள், மனிதர்கள்.

பசியும் பிணியும் ஒவ்வொரு தெருவையும் மூலை முடுக்கு ஒவ்வொன்றையும் உறிஞ்சிக் குடித்து அல்லது பிடரியைப் பிடித்து எதற்கோ தூண்டித்தள்ளியது. வானம் இருண்டு பூமி அதனுள் அமிழ்ந்து விடுமாற் போல இடியும் மின்னலும் எங்கும் தெறித்துச் சிதறின, வானத்துண்டுகள். மாரிகாலம் வெகுவேகமாக முடிவுற வேண்டுமென்று அவன் அடிக்கடி யாரையோ வேண்டுவதுபோலக் கேட்டுக் கொண்டான். அநேகமாக இது முட்டாள்தனம். ஒவ்வொரு நாளும் நீண்ட கிரவல் வீதியில் பால்கலந்த தேநீரின் அல்லது கோப்பியின் நிறத்தில் சகதிச்சேறு. கூரைகள் சடசடத்து அதிர்ந்தன. சரியாக வேயப்படாத கூரை, முகட்டு வழியாக ஒழுக்கு, நிலத்திற் தூங்கிக்கொண்டிருந்த ஒவ்வொன்றும் குளிரில் விறைத்தது நாக்கை வெளியே நீட்டியபடி நித்திய மோனத்துள் ஆழ்ந்து போயின. முகட்டில் தொங்கிய சாக்குப்பையை மெதுவாக அவிழ்த்து இறக்கினான். அது கைகொட்டிச் சிரித்தது. அதன் மேல் இளையவனுடைய முகத்தையும் தன்னுடையதையும் மற்ற ஒவ்வொருவருடையதையும் கற்பனை செய்தான். ஆத்திரமும் பயமும் கலந்ததான ஒரு வல்லுணர்வு அவனுள் படர எதையோ முணுமுணுத்தான் அல்லது காறி உமிழ்ந்தான்.

அவனோடு சேர்த்து ஒன்பது பேர். இளையவனுக்கு வயது மூன்று மாதங்கள். நகரத்திலிருந்த போது அல்லது அங்கிருந்து அவர்கள் வெளியோறிய போது அம்மாவினுள் அவன் இருந்தான். அது அப்பாவின் கடைசிக்காலம். நகரத்தை ஆக்கிரமித்த பாம்புகளின்; கொடிய விஷக்காற்றின் இருட்சியின் அடையாளம், அப்பாவின் மரணம் பற்றிய அம்மாவின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீராதவேதனை போன்றவற்றின் கலவை இன்னும் அவன் முகத்தில் அழியாமலிருந்தது.

சாக்குப்பையினுள்ளிருந்த உணவு வேகமாகத் தீர்ந்து போயிற்று. நகரிலிருந்து கொண்டு வந்தவை எவையும் இப்போது அவர்களிடம். எஞ்சியிருக்கவில்லை. அவனுக்கு இளையவர்களில் அநேகர் தெருக்களில் உட்கார்ந்து மாங்காய்களையோ தேங்காய் போன்ற இன்ன பிற பொருட்களையோ விற்றார்கள். அல்லது. மூக்கிலிருந்து சளி ஒழுக கைகளில் சிரங்குடன் நிர்வாணமாய் தெருவழி அலைந்தார்கள்.

பசியிலும் பிணியிலும் செத்துப்போன மனிதர்களால் காட்டோரக் கிராமங்களின் சுடுகாடுகள் எரிந்தன. மருத்துவ மனைகளில் நீண்ட வரிசைகளினூடே மரணம் நிகழ்ந்தது. சண்டைகளும் சச்சரவுகளும் கூட.

பாம்புகளின், விஷக்காற்றின் சூழ்தலால் சபிக்கப்பட்ட எண்ணப்படுகின்ற தமது பூர்வீக கிராமங்களையும், நகரத்தையும் மனிதர்கள் மரணப்படுக்கையில் கனவு கண்டார்கள். அநேக இரவுகளின் கனவுகளில் பூமித்தேவதை சிரித்து அவர்களைக் கையசைத்து அழைத்தாள். கனிமரங்களினூடேயும் கைவிடப்பட்ட தோட்டங்கள் வயல்களினூடேயும் தேவதையின் சிரிப்பும் கையசைப்பும் அவர்களை அழைத்துச்சென்றது.

தங்களின், தலைமுறைகளின் புதைபொருட்களாலும் தோட்டங்களிலிருந்தும் வயல்களிலிருந்தும் பெறப்பட்ட தானியங்களாலும் அவர்களுடைய சாக்குப் பைகள் நிறைந்திருந்தன. தூக்க முடியாத சுமையோடு தமது காட்டோரக் கிராமங்களுக்கு அவர்கள் மீண்டும் வந்து சேர்ந்தார்கள். பசியால் அழுத குழந்தைகளுக்கு முன்னே சாக்குப்பையை அவிழ்த்து உள்ளிருந்து, கேசரித்த ஒவ்வொன்றையும் வெளியில் எடுத்தார்கள். எடுக்க எடுக்க அவை மனிதக்குடல்களாகவும் எலும்புக்கூடுகளாகவும் எதிரி எலும்புகளாலும் இதயக்கூடுகளாகவும் மாறிக்கொண்டே போயின. குழந்தைகள் வீரிட்டு அலறினர். வண்ண வண்ணக் கனவுகளின் ஆட் கொள்ளுதலோடு அவர்கள் வாழ்வு முடிந்து போயிற்று.

மரணயுத்தத்தில் பசியையும் பிணியையும் எதிர்க்க வலுவற்ற மனிதர்கள் விட்டுவந்த சொத்து சுகங்களைத்தேடி மீண்டும் இரகசியமாகப் புறப்பட்டுப் போனார்கள்.

பழைய நகரின் இடிபாடுகளால் கட்டியெழுப்பப்பட்ட புதிய நகரின் தெருக்களில் அலைந்து திரியும் மரண பீதியையும் வதந்திகளையும் பரப்பித் திரியும் தலைகளற்ற உடல்கள் பற்றியும் பாம்புகளின் கூரிய பற்கள் மனிதர்களின் கழுத்தை முன்னரிலும் பார்க்க அதி வேகமாகவும் கொடூரத் தன்மையோடும் நெரிப்பதாகவும் காட்டோரக் கிராமங்களிலுள்ள மனிதர்கள் கேள்வியுற்றனர்.

எல்லாவற்றின் பின்பும் தனது கிராமத்தையும் குடியிருப்பையும் பார்ப்பதற்காகவும் அல்லது யாருமற்ற சூனியப்பிரதேசத்தில் விட்டுவந்த தமது சொத்துக்களையோ வேறு பொருட்களையோ எடுப்பதற்காகவும், தான் புறப்படப் போவதாக சகோதரர்களுக்கும்தாய்க்கும் பொதுவில் அவன் அறிவித்தபோது அவனை அவர்கள் அன்போடும் இயலாமையோடும் நோக்கினார்கள். யாராலும் உணரமுடியாத உணர்ச்சிகளை மகன் என்ற ரீதியிலும் சகோதரன் என்பதனாலும்அவர்களின் முகத்தில் அவனால் படிக்க முடிந்தது, அக்கணத்தில்.

அவன் தனது நகரத்தின் பூர்வீக கிராமத்தினுள் இதயம் பிளக்கும் பேரச்சத்தோடு நடந்து போனான். புதர்களின் மறைவிலிருந்து நரிகள் திடுக்கிட்டு ஓடி, தூரத்தில் நின்று திரும்பிப்பார்த்தன. நாக்கைத் தொங்கப் போட்டபடி கண்களில் குரோதம் பொங்க, மனசு நடுங்கியது.

மாரிக்காலத்ததில், விஷத்தின நிலததில் ராட்சஷ மரங்கள் முளைத்திருந்தன. கருமை படர்ந்த விஷக்காற்றின் நீல உளி எங்கும் பரவியிருந்தது. இடிபாடுகளுக்கு மேலாக பிரமாண்டமான தோற்றத்தோடு பாம்புகளின் வாழிடங்கள்.

அவனுடைய அம்மா, அப்பா, சகோதரர்கள், தான் எல்லோரும் நடந்தும் தவழ்ந்தும் ஆயுள் முழுவதும் வாழநினைத்திருந்த நிலம் விஷப்பாம்புகளின் புற்றுகளுக்கடியில் முனகும் சப்தம் அவனுக்குக் கேட்டது.

பிரமாண்டமான பாம்புகளின் வாழிடங்களைத் தவிர்த்தும் இறுகிய சிலந்தி வலைகளாய் பின்னிக்கிடக்கும் இருளை ஊடுருவியும் நீண்ட தூரத்திற்குப் பார்வையைச் செலுத்தினான்.

அவர்களால் விட்டுச் செல்லப்பட்ட ஒவ்வொன்றும் கண்முன்னே தோன்றித்தோன்றி நெகிழ்ச்சியுற்றன. கண்கள் பனித்தன. சருகுகளையும் முட்களையும் மிதித்துக் கொண்டு நீண்ட தூரத்திற்கு நடந்தான். தலையிலிருந்து சாக்குப்பையை தோளுக்கு மாற்றி நீண்ட நேரம் அதன் வெறுமை மனசை அழுத்தியது. மனித சலனமேயில்லாத தெருக்களையும் சந்துகளையும் தாண்டி நடந்த போது முள்ளந்தண்டு சிலிர்த்தது. வழிநீளத்திற்கும் குருதியும் தசையும் உறிஞ்சி எடுக்கப்பட்ட மனிதர்களினதும் மிருகங்களினதும் எலும்புக்கூடுகள்.

நேற்று முதல் நாள் தனது காட்டோரக்கிராமத்தை விட்டு வெளியேறிய, இன்றுவரை வீட்டுக்கு வந்து சேராத அவனுடைய அயற்குடிசைக்காரனையும் இரண்டு வண்டிமாடுகளையும் தனக்கான எல்லா மனிதர்களையும் என்ன காரணத்தாலோ திடீரென நினைவு கூர்ந்தான்.

சாக்குப்பையை நிறைக்கக்கூடியவாறு அல்லது பசியைப் போக்கக் கூடியவாறு அவனது பூர்வீக கிராமத்தில் எதுவும் மீந்திருக்கவில்லை. சாக்குப்பையை ஓங்கி தரையிலடித்தான். இதுவரை அதனுள் மறைந்திருந்த ஒவ்வொருவருடைய முகங்களும் தீராத வேதனையோடு அலறின.

அலறல் சத்தமும் பாம்பும் அவற்றின் விஷக்காற்றும் அவனைத் தொடர்ந்து துரத்தின. எலும்புக்கூடுகள் பாதங்களுக்குக் கீழே நெரிபட்டன. நகரமும் நகர்சார்ந்த கிராமங்களும் மிகப்பெரும் சுடுகாடாகிக் கிடக்கிறதென்றும் பாம்புகள் வெறியோடு மனித இறைச்சிக்காகக் காத்திருப்பதாகவும் அவன் யாரிடமோ சொல்ல நினைத்தான். அவனுடைய உடல் முழுவதும் கீறிக்கிழிக்கப்பட்டு இரத்தக் களமாக மாறியிருந்தது.

காட்டோரக் கிராமத்தை நெருங்க நெருங்க அழுகையும் ஒப்பாரியும் அவன் செவிகளில் அறைந்து மோதின.

அன்றைய பொழுதில் சாக்குப்பையோடு பூர்வீக கிராமங்களுக்குப் போன எவரும் - அவனைவிட- மீண்டும் வரவில்லை என்று யாரோ சொன்னது குகையின் கண்காணா ஆழத்திலிருந்து கேட்டது போலக் கேட்டது. அவன் எதையோ சொல்ல நினைத்தான். நா எழவில்லை. இரண்டாவது தடவையாகக் கண்விழித்தபோது மருத்துவ மனையின் நீண்ட கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தான். அம்மாதான் முதலில் பேசினாள். இன்று காலையில் அவனுடைய சிநேகிதர்கள் சிலர் தேடி வந்ததாகவும் அவன் இல்லையென்று சொன்னபோது தன்னோடும் இளையவர்களோடும் பேசிக்கொண்டிருந்துவிட்டு தம்பி ஒருவனை அழைத்துக் கொண்டு போய் விட்டார்களென்றும் காலையில் காய்ச்சிய கஞ்சியைக் குடித்துவிட்டு மற்றொருவனும் எங்கோ போய்விட்டானென்றும் இருவரும் சாக்குப்பையையோ பூர்வீக கிராமத்திலிருந்து பொருட்களை எடுத்துவரக்கூடிய வேறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவற்றையுமோகொண்டு செல்லவில்லையென்றும் இன்னும்- இரவு நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லையென்றும் - இன்னும் எவற்றையெல்லாமோ தொடர்ந்து சொல்லிக்கொண்டே போனாள். மருத்துவமனையின் மங்கிய விளக்கொளியில் அழுதுகொண்டிருப்பது தெரிந்தது. அவளை அழ வேண்டாமென்று தானும் தன்னோடு இன்னும் பலரும்- நண்பர்களையும் இளையவர்களையும் போல- பல இரவுகளின் பின்னால் மறைந்போன, ஒளி நிரம்பியகாலங்களை நோக்கிப்போக நினைத்திருப்பதாகவும் அவளிடம் சொல்ல நினைத்தான் இன்னும் அவள் அழுதுகொண்டுதான் இருந்தாள். அவளுடைய மிக மெலிந்த கைகளுக்குள் கடைக்குட்டி சுருண்டு தூங்கிக் கொண்டிருந்தான்.



வெறுமனே துடித்துக்கொண்டிருந்த இதயத்திலிருந்து நீண்டதொரு பெருமூச்சு எழுந்து ஒடுங்கியது.

கண்களுக்குள், இடிந்தழிந்து போன அவர்களின் பூர்வீகக்கிராமத்தின் இல்லாமலாகிவிட்ட அவனது வீட்டின் பின்பகுதியின் வைரவர் மேடையைநோக்கி அவனுடைய தம்பியும் இன்னும்பலரும் வேகமாக ஊர்ந்து செல்லவதாகவும் எல்லாக்கால நீட்சிக்கும் அப்பாற்பட்டு இரும்பாகவும் மண்ணாகவும் மரமாகவும் அழிவற்றிருக்கும் திரிசூலத்தை எல்லோரும் ஒன்றாகித் தூக்குவதாவும் அது பல்லுருக் கொண்டு ஒவ்வொருவர் கைகளின்;, கண்களின் ஜொலிப்பில் மீண்டும் மீண்டும் ஒளிபொருந்துவதாகவும் காட்சிகள் ஓடிக் கொண்டே இருந்தன. அவனது மூடிய கண்களுக்குள்.

---

## ஒளி

இருளில் மட்டுமல்ல
இருளாயும் இருக்காதே.
இருள் நின்–
இருப்பையே தின்றுவிடும்.
ஒளியாய் இரு!
ஒளியால் தான் இயலும்
இருளை வெல்ல!

## பிரிவு

என்னையே மரித்தேன்
என் தாயை–
தாய் நிலத்தை
இதற்கும் மேலாய்
இன்னுயிர் மொழியைப்
பிரியப்
பொறுக்காததால்!

## பஞ்சம்

நிர்வாணமாய்க் கிடந்தன
வயல் நிலங்கள்...
அந்த ஏழையின்
வயிற்றைப் போல்!

## நிழல்

ஓட ஓட என்னைத்
துரத்தியது
இந்த நிழல் தான்.
இபோ
இந்த நிழல் தேடி
ஓடுகிறேன்;
இது எனது நிழல்!



வேலணையூர் சுரேஸின்
நான்கு கவிதைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எனது வாழ்வு

அம்புலி

அந்தகாரத்துள்ளும்
கீற்றாய் ஒரு மின்னல் தெரிகிறது.
திசைகள் தெரியாது தவிக்கையில்
எங்கிருந்தோ ஒரு விடிவெள்ளி முளைக்கிறது.
சுழல்களுக்கிடையில் அமிழ்ந்து போகையில்
கரைசேர எனக்கொரு சிறுமரம் கிடைக்கிறது.
எப்படி இன்னமும் சாகாமல் பிழைக்கிறேன்.

மூச்சு நின்று போகும் கடைசித் தறுவாயிலும்
என்னை உயிர்ப்பித்தது எது?
கருக்கப்பட்ட உயிருக்குள்ளேயும்
எது வந்த துளிர் விட்டது?
நினைவுகள் வட்டமிட்டு வட்டமிட்டு
கொத்திக்கிழித்து ஈற்றில் — நான்
சரிகின்றபோது எனை எழுப்பிவைத்த
கனவு எது?

மடியும் வரை வாழவேண்டுமென்ற
உயிர்த்துடிப்பு
இரவு விழுங்குகையில்
புலர்வைத்தேடி விழித்திருக்கும் என் காத்திருப்பு.
சரித்துச் சரித்து எனை விழுத்தி
நான் விழுந்தழுத போதெல்லாம்
எழவேண்டும் என்றெனக்குள் எழுந்த சிலிர்ப்பு
கனவுகள் எரிந்து உருகிய போது
பீறிட்டுத் தெறித்த கொதிப்பு.
இவைதான்,
இவைதான் இன்றுவரை
என்னைப் பிழைக்க வைத்தன.
பென்னம் பெரிய அலைகளுக்கெல்லாம்
வளைந்து கொடுத்து
நீச்சலிட்ட எனக்கு
சின்ன உலுப்பல்களாய்
சூறாவளிகள் இப்போ
வாழத் தெரிந்துவிட்டேன்.
என்னைப் புறந்தள்ளிய
காலத்திற்குள்ளிருந்து கொண்டே
எனக்கென்றொரு கூடுகட்டத்
தொடங்கி விட்டேன்.
இதுவரை என்று யாரும் நிறுத்திவிடா
நீட்சியில்
கணிப்பிட்டுக் கூறமுடியாத காலம்வரை
நான் வாழுவேன்;
எவற்றுக்கு நடுவிலும்,
எந்த வரையறைக்கு அப்பாலும்
உயிரில் சுடர்விடும் நம்பிக்கையோடு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தீச்சுடர்

*தமிழ்க்கவி

*தீச்சுடர் – 5

வன்னி விக்கிரம நடவடிக்கைக்காக உள் நுழைந்த இராணுவத்தை புலிகள் என நினைத்த செல்லையாப்பு அவர்கள் சிங்களத்தில் பேசுவதைக்கூட தன்னை ஏமாற்றவே என நினைத்தார். அவர்களில் ஒருவர் இவரைப் பார்த்து "நாக்கியா கெஹெத யன்னே" என்று கேட்டான்.

"நாக்கியாவும் பூச்சியாவும் வெறுவாக்கில கெடுவார் அங்கால ஆமியெல்லே பூந்திட்டானாம். உதில நிண்டு பப்பரிக்கம் போடுறியள்" என்றார்.

அவ்வளவுதான் அவரைச் சுற்றி ஆறேழு ஆமிக்காரர் வந்தனர். அவருடைய





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையிலிருந்த கயிற்றாலேயே அவரை இறுக்கிக் கட்டியவர்கள் தள்ளிக் கொண்டு போனார்கள்.

கோழியா குளத்து மகளிர் முகாமில் அமைக்கப்பட்டிருந்த பதுங்குழிக்குள் அதிகாரிகள் பதுங்கிக்கிடந்தனர். செல்லையாப்புவையும் அதே பங்கருக்குள் உருட்டி விட்டனர். அலங்கமலங்க விழுத்தவரை மேலும் நாலு உதைபோட்டு மூலையில் தள்ளினான் ஒருவன்.

"சீயா புலி எங்க நிக்கிறது" என்றான். "காட்டிலதான்" என்று சொல்ல நினைத்தவர் அவன் அடிக்கக்கூடும் என நினைத்து



"பின்னுக்குப் போட்டாங்கள்" என்றார்.

வெளியே கறகறவெனச் செல்லும் குண்டுவீச்சு விமானங்களின் ஒலி கேட்டபோது மேலும் பலர் உள்ளே வந்தனர். பின்னர் அனைவரும் வெளியே ஓடினர். இப்போது காயமடைந்த இரண்டு சிப்பாய்களுடன் செல்லையாப்பு தனித்திருந்தார். உணவு உண்பதற்காக அவரை அவிழ்த்துவிட்டான் ஒருவன். கைகால்கள் கட்டிய அகோரத்தில் விறுவிறுத்தது. அவரால் சாப்பிட முடியவில்லை.

இப்போது ஆமி அவரைக் கேட்டான் "சீயா யாப்பனே இன்னும் எவ்வளவு தூரம்" என்று.

"கெட்டது போ.... உதால போனா யாழ்ப்பாணமில்ல யமலோகம்தான் வரும்" என்றார் சீயா செல்லையாப்பு. இவங்கள் அரசாங்கத்தின்ர சொல்ல நம்பி யாழ்ப்பாணம் போறம் எண்ட நினைப்பில் வந்திருக்கிறாங்கள் போல என்று நினைத்துக்கொண்டார்.

அதேநேரம் கதிரவேலர் பூவரசங்குளம் கிடுகிடுத்தது. சாதாரண (கெரில்லா) கரந்தடிக் குழுவென நினைத்திருந்த புலிப்படை மரபு வழிப்படையாக எழுந்துகொண்டிருந்ததை யாரறிவார். இரண்டு கவச வாகனங்கள், கனரக வாகனங்கள் எனத் தரைவழி நகர்ந்த இராணுவம் புலிகளுடன் கைகலக்கும் தொலைவில் முட்டியது. விளைவு காலைச்சமரில் 16 இராணுவச் சடலங்களையும் பெருமளவு ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர். மாலைச்சமரில் மேலும் இரண்டு சடலங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டது. இராணுவம் திசை தெரியாமல் நாற்புறமும் சிதறியோடியது.

நளாயினி காணாமல் போன இரு போராளிகளையும் தேடிக்கொண்டிருக்க இரண்டாம் நாள் பிள்ளைகள் வந்து சேர்ந்தனர்.

பிள்ளைகளைக் காணவில்லையென்று பொறுப்பாளருக்குத் தொடர்பெடுத்து அறிவித்திருந்தாள்.

பிள்ளைகளை அழைத்துச் சென்று பொறுப்பாளரிடம் கொடுத்துவிட்டு வரத்துடித்தாள். "பிள்ளைகளைக் கண்டுபிடித்தபிறகு என்னோட கதைக்கலாம்" என்று கண்டிப்பாகக் கூறியிருந்தார் பொறுப்பாளர்.

அன்று கடந்துபோன சம்பவங்களை எண்ணியவாறு நளாயினி உட்கார்ந்திருந்தாள். மத்தியானம் அவளை அவளது குழுவினருடன் வரும்படி மேலாளர் அழைத்திருந்தார். எல்லோரும் மிதி வண்டிகளில் புறப்பட்டனர்.

பழையபடி வந்தபாதை பாலமோட்டை கடந்து கிழவன் குளத்துக்கு வந்தபோது அழகான சோலையாகவிருந்த தென்னந்தோப்புகள் விமானத்தாக்குதலில் சிதறியிருந்தன. கிழவன்குளம் அம்மன்கோயிலடியில் செல்லையாப்பு நின்றார். நளாயினி, "என்னப்பூ... ஆமியிட்டப் பிடிபட்டியளாம்..." என்றாள்.

"ஓம் மோனை ஏதோ முற்பிறப்பில செய்த புண்ணியம்... ஓடேக்க என்னை அவிட்டு விட்டிருந்தவங்கள். நான் பிறகு நெல்லுக்குளத்துக்க பாய்ஞ்சு தப்பிற்றன்" என்றவர் தனக்கு நடந்தவற்றை சிரித்தபடி விபரித்தார்.

"வளவுதான் பிள்ள சாம்பலாக்கிடக்கு. ஆறு குண்டு 'பிளேனி'ல கொணந்து போட்டிருக்கிறாங்கள்" என்றார்.

"சரியப்பு... நாங்கள் மாங்குளம் போறம்"

"பிள்ள... உங்கட பங்கருக்கு. சக்கை வைச்சிட்டாங்கள்" என்றார் எட்டியிருந்தபடியே.

"சரியப்பு பார்த்திட்டுப் போறம்" என்றபடி நகர்ந்தனர்.

கோழியா குளத்துக்குள் பல வீடுகள் அழிக்கப்பட்டு விட்டன. இவற்றைக் கடந்து ஓமந்தை நம்பைக்குளம் சந்தியை எட்டியதும் மிக மோசமாக கடைகளும் வீடுகளும் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டிருந்தது கண்டனர். இந்த எரிப்பு பனிக்கநீராவி வரையில் தொடர்ந்தது. அதற்கப்பால் ஆங்காங்கே பிரச்சினையற்றிருந்தாலும் புளியங்குளம் பாடசாலை, ரூபியா ஓட்டல், தபாற்கந்தோர், வாடிவீடு எல்லாமே விமானத் தாக்குதலில் சிதறிக்கிடந்தன. கனகராயன்குளம்வரை இடையிடையே விமானத்தாக்குதல் தன் தடத்தைப் பதித்திருந்தது.

இதேயளவுக்கு இடிந்துபோய்க் கிடந்தது மாங்குளம். லெப்.கேணல் போர்க் வெடித்த இடத்துப் பள்ளமும் வாகனமும் அங்கே இன்னமும் இருந்தன.

மாங்குளம் தங்ககத்தைச் சென்றடைந்தபோது அங்கே அவர்களுக்கு தலைமைச் செயலகத்தில் இருந்து வந்த அழைப்பு எதிர்கொண்டது.

விடயம் ஒன்றும் பெரிதாக இல்லை. அடிபாட்டுக்குப் போகத் துடித்த அந்தப் பெண்புலிகளுக்கு அடிபடச் சந்தர்ப்பம் கிடைத்தது.

"உங்கள 'குறூப்' போட விடலாம்... கொஞ்ச நாளைக்கு அடிபடுங்கோ. பிறகு அரசியல் வேலைக்கு அனுப்பும் போது போகவேணும்" எனக் கூறப்பட்டது. நளாயினிக்கு சொல்லிமாளாத மகிழ்ச்சி. அவள் படைப்பிரிவின் பயிற்சியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இணைந்தாள். அதிகாலைப் பயிற்சி. அடிக்கடி குழப்படி, அதற்கான தண்டனை, வேடிக்கை விளையாட்டு. புதிய நட்புகள் அன்புமிக்க போராளிகளுடனான வாழ்க்கை வித்தியாசமானது. மக்களுடனான வாழ்க்கை அரசியல் வாழ்க்கை. நாள்முழுவதும் பேச விடயம் இருக்கும். நாள் முழுவதும் செய்ய வேலையிருக்கும். நாள் முழுவதும் விளையாட்டுமிருக்கும். இங்கே படைத்துறையில் ஆரம்பபயிற்சிக்குப் பின்னரான தாக்குதல் பயிற்சி இப்போது நடந்தது.

ஒரு இருபது நாள் கழிந்திருக்காது. வவுனியாவுக்குள் மீண்டுமொரு தாக்குதலை நடாத்த இராணுவம் திட்டமிடுவது தெரியவந்தது. அவனை எதிர் கொள்ளும் படையணிக்கு வழிகாட்டியாக வவுனியாவுக்கு நளாயினி வரவேண்டியதாயிற்று.

"அநேகமா செட்டிகுளத்தாலையும், பாவற்குளம் நாலாம் படிவத்தாலும் உடைப்பான் போல இருக்கு. இதால பூவரசங்குளம் பிடிச்சு மடுவுக்குப் போறதுதான் திட்டம். அவனை பூவரசங்குளத்துக்க மடக்கவேணும்" என்றார் பொறுப்பாளர். "முதலும் ஒருக்கா வந்து ஒரு கிழமை நிண்டிட்டு திரும்பப் போனவனக்கா"

இரண்டு மூன்று தினங்களாக 'ரோந்து' நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். பின் நான்காம் நாள் தகவல் அடிபாட்டுக்கு ஆயத்தமாகும்படி வந்தது. நளாயினியும் சுஜாத்தாவும் ஒரே பாசறையில் பயிற்சி முடித்தவர்கள். இப்போது மீண்டும் ஒன்றாக இந்தக் களத்தில் நின்றார்கள்.

"சுஜாத்தாக்கா, அவன் வெளிக்கிட்டிட்டானாம். எல்லாரும் நிலையெடுத்தாச்சு. நான்தான் முன்னுக்கு நிப்பன்" என்றாள் நளாயினி. இதைக்கேட்ட சுஜாத்தா சிரித்தாள்.

"ஆர் வேண்டாமெண்டது நான் என்ர பிள்ளையள அதில நிலையெடுக்க விட்டிட்டன் நானும் நீயும் இன்னும் கொஞ்சம் முன்னுக்குப் போவம்"

பூவரசங்குளம் குளக்கட்டின் ஓரமாகவும், சங்கக்கடையடியையும் ஆண் போராளிகள் கவனிக்க பூவரசங்குளம் குடியிருப்பில் வழங்கற்பகுதி நின்றது. அப்படியே புலவனாவூர் வரை உதவிக் குழுக்கள். நின்றனர். எனினும் இவர்களை மீறி சிலவேளைகளில் வாரிக்குட்டியூர் வழியாக எருக்கலம்புலவு ஊடாக மணியர் குளம் சென்று அப்படியே குருக்கஞரை இராணுவம் அடையக்கூடும் என்பதால் இராமையன்கல் அரிசியாலை முதல் அம்மன் கோயில் தெருவுக்கு அப்பாலும் படையணிகள் காத்திருந்தன.

காலை முதல் பூவரசங்குளம் செட்டிகுளம் சாலையில் முன்பே விதானையார் வீடுகடந்து மாட்டுப்பட்டிக்கு அப்பால் நிலையெடுத்துக்கிடந்த நளாயினிக்கு இடது பக்கம் பூவரசங்குளம் ஆஸ்பத்திரியின் பிரசவ அறையும் அருகிலான ஒழுங்கையும் இருந்தன. மாலை மூன்று மணிவரை இராணுவம் வந்து சேரவில்லை.

பாவற்குளம் முதலாம் படிவத்தினுள் கல்லுடைக்கும் பெரும் மலைப்படிவை அரணாகக் கொண்டு அமைந்த இராணுவ முகாம் ஒன்றுண்டு. அதன் கிளை இரண்டாம் படிவமான முஸ்லிம் கிராமத்தைக் கடந்து மூன்றாம் படிவமான உளுக்குளம் நாலாம் படிவமான பூமடு தமிழர் கிராமத்தையும் கடந்து நான்காம் ஐந்தாம் படிவங்களை ஊடறுத்து வாரிக்குட்டியூர் வழியே பூவரசங்குளம் செட்டிகுளம் சாலையைக் கடந்து உழுந்துப்புலவுகள் ஊடாக மேற்குறித்த வழிகளால் குருக்கஞர் நோக்கி ஒரு குழுவும், நேரா வீதியின் வலப்புற மந்துக் காடுகளூடாக பூவரசங்குளம் நோக்கி ஒரு குழுவுமாக இராணுவம் முன்னேறியது. சுமார் ஆயிரம் போராவது இருக்கும். இங்கே புலிகள் மிக விழிப்பாக இலக்கை எதிர்நோக்கி நின்றனர்.

நேரம் 3.30 நளாயினியும் சுஜாத்தாவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். திருப்தியில்லை.

விதானையார் வீட்டுக்கப்பால் தேவாலயத்துடனான வெற்று வயல்வெளியை இலக்காக்கி நின்ற குழுவும் சற்றும் அலட்சியமின்றி விழிப்பாக நின்றது. 4.30 க்கும் 5.00 மணிக்கும் இடையே மணித்தியாலத்தின் இலக்கங்கள் துள்ளி விளையாடின.

"ஒரு மணிக்கூடு வாங்கவேணும் என்று எத்தினை நாள் கேட்டு இந்த மணிக்கூடு கிடைச்சது. இப்போதெல்லாம் நேரம் காட்டுற கம்பிக்கு வேலையில்லை. திரையில நேரம் சரியா துள்ளிக்கொண்டு வருது. இது அண்ணா வாங்கித் தந்தது" நளாயினி சுஜாத்தாவின் காதுகளில் கிசுகிசுத்தாள்.

"இப்ப உதுதான் 'பாசன்'. இருட்டிலும் 'லைற்' போட்டு நேரம் பார்க்கலாம்..." சுஜாத்தா சொல்லிவிட்டுச் சிரித்தபடி.

"மனித மூளையை ஒரேயடியா செயலற்றுப் போகச் செய்ய என்னென்ன வழிகள் இருக்கோ அத்தினையும் வரும்" என்றவள், கண்களைப் பிள்ளைகள் நின்றபக்கம் திருப்பினாள்.

"வசுமதி என்ன உது காலைப் பதியும்..." சகபோராளிகளின் நிலையை உசுப்பினாள்.

"அதக்கா... கால் உளையுது"

"சண்டை வந்தா உப்பிடி தூக்கி வைச்சிருக்கிற கால் உளையாது. ஏனெண்டா அவன்ர அடியில காலே பறந்துவிடும்" என்றவள்,

"அக்கா பசுமாடுகள் ரோட்டு நிரம்பவருது. அங்க பாருங்க" என்றாள். புழுதி எழுந்து அந்தப் பகுதியையே மறைத்தபோதும் நளாயினி மறுத்தாள்.

"மாடுகளுக்கிடையால ஆமிவாறான் அந்தா... அந்தா.... காலுகள் தெரியுது" என்ற நளாயினியின் துப்பாக்கியுடன் போராளிகளின் துப்பாக்கிகளும் முழங்கத் தொடங்கின.

அந்திவானம் காடுகளுக்கிடையே கனலை இறைத்திருந்தது. என்றாலும் திடீரென எழுந்த ரவைகளின் ஒலியும் ஒளியும் பூவரசங்குளம் கிராமத்தில் கனலைப் பொழிந்தது. நளாயினியின் துப்பாக்கிக் குழலை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தனர் இராணுவத்தினர்.

நிதானமாக ஒவ்வொன்றாக ரவைகளைக் கக்கியது அவளது துப்பாக்கி. இதேநேரம் விளையாட்டு மைதானப் பகுதியால் இடது புறமாக வந்த இராணுவத்தினர் இந்த இடத்தை நோக்கி காப்புச்சூடு வழங்கினர். அந்த ரவைகள் இந்த இலக்கில் பாய, பின்னே நகரும்படி கட்டளை வந்தது.

"மாட்டன்... அவன் வேகமா வாறான். என்ர உடலைத்தாண்டித்தான் அவன் உள்ளுக்க போகலாம்...." நளாயினி ஆக்ரோசமாக அடிபட்டாள்.

காயமடைந்தவர்களைத் தூக்கியவாறே வழங்கற் குழுவினர் வேகமாக ஓடினார்கள். இப்போது குனிந்தும் வளைந்தும் சரிந்தும் விழுந்தும் எழுந்தும் ஓடிக்கொண்டிருந்தவர்களை முந்தியும் உருவிக் கொண்டு 'உய் உய்' எனப் பறந்த ரவைகளில் ஒன்று நளாயினியின் வயிற்றை அடிப்புறமாகக் கிழித்து. அடுத்தும் ஒரு ரவை அவள் தொடைகளைக் கிழித்தது. குபுகுபு எனப் பெருகிய குருதி வயிற்றைப் பொத்திப் பிடித்த அவள் கைகளை நிறைத்து விரல்களின் இடையில் வழிந்தது.

அதற்குள் பாய்ந்து வந்த போராளிகள் படுதாவை வைத்து அவளை உருட்டி அதில் தள்ளினர். பின் தரையோடு தரையாக ஊர்ந்தவாறே இழுத்துச் சென்றனர்.

"இழு... இழு...." என்ற கட்டளை நளாயினிக்குத் தெளிவாகக் கேட்டது.

"விடுங்கோ... அவன்... வாறான். என்னைவிடு... என.. எனக்.... கொண்டு....மில்... நளாயினி வாயைமூடிக்கொண்டாள். கண்களும் செருகிக்கொண்டன.

(இன்னும் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net


# இனிய காற்றின் வருடலுக்காய்

காதலும் கனவு சுமந்த விழிகளுமாய்
காத்திருந்தோம்
பூக்கள் பனித்துளியிற்
குளித்திருந்தன.
தொட்டில் உறங்கிய
குழந்தையின் மன வெளிச்சமாய்
எங்கள் அழகிய காலங்கள்
இருந்தன—

வெண்மணல் பரவிய முற்றமெங்கும்
எவ்வாறு இரத்தக்கறைகள் படிந்தன,
இணையிழந்த குயில்களின்
கதறல்கள் காற்றிற் கரைய
திசையழிந்து போனதா எம்பயணங்கள்
எம் வேர் மண்ணில்
இழுத்தெறியப்பட்ட
வலி சுமந்து
பயணித்தோம்
ஓர் இனிய
பாடலுக்காய்
அசுத்தப்படாத காற்றின்
வருடலுக்காய்.

**கொற்றவை**





# ரணங்கள்

எனது சுதந்திரம்
இந்த நான்கு சுவர்களும்,
கொஞ்சம் விஸ்திரணிக்கப்பட்டு
நான்கு வேலிகளுக்குள்ளுமாகிப் போனது

நான் ஒரு சிட்டுக் குருவியென
இன்னமும் பீற்றிக் கொள்கிறேன்
கூண்டுச் சிறையினுள்
குறுகியிருந்தவாறே...

ஒளியை நோக்கிய எனது சிறகு விரிப்பு
முடக்கப்பட்டது — என்னைப்
பற்றி இறுகிய இரும்புச் சங்கிலிகளால்...

விலங்குகள் இனியாவது உடைந்திடுமென
இறுமாந்திருந்தேன்— ஐயகோ
பழைய விலங்குகள்
பரவாயில்லைப் போல்...
இந்தப் புதிய விலங்குகள்
தந்திடும் ரணங்களை விட.

**செ.பாரதி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அணையாத தீபம்



## லெப்.கேணல் அகிலா

# உனக்காக நான் கோர்த்த மாலை

அந்தக் காரிருள் வேளை ஒக்ரோபர் 30ம் திகதி மழை நனைந்த பூமியில் வெடியேந்தி செம்மண் பூச ஆசைதீர அலைபரப்பிக் கிடந்தாள் எங்கள் அகிலா லெப்.கேணல் அகிலாவாக...

செம்மண் புழுதி பூசிய கோப்பாய் மண் அள்ளி உண்டு, புரண்டு தவழ்ந்தவளின் கன்னங்களில் முகத்தால் தணித்தது அவள் பாச உறவுகள். இத் தேசத்தின் புயலில் முளைத்த... பூ... இவள்.

அவள் கல்விக்காலம்... அது அவள் அறிவுக்காலம், அவளது இளமைப்பருவம், அது அவளது தேசத்துக்காக!

மெல்ல நிமிர்ந்து வானத்தை நோக்க சிரமப்பட்டவள் அல்ல அவள் வானத்தை விரல் தொடும் ஆவல் உள்ளவள்.

மேலே தூக்கிய துப்பாக்கி பயிற்சி பாசறை அது. எம்மை வார்த்து எடுத்த பட்டறை. ஓடியபடி பகிடி கதைப்போம் ஆளை ஆள் சீண்டுவோம். விசில் கூட அடித்துள்ளோம். எல்லாம் பயிற்சி ஆசிரியர் இல்லாதவரை... எவ்வளவு இனிமையான காலங்கள். உன் நினைவை அதிகரிக்கும் மழையும்.... உயரமாய் ஒல்லியாய் இவர்களில் நீ தெரிவாய் உயரம் என்பதால் நீ வரிசையில் இறுதி. அறிவு வரிசையில்... எப்பவும் நீ முதலே... காலம் தன்பாட்டில் விறுவிறுவென பல நிகழ்வுகளை நிகழ்த்தி உருண்டது. போர்க்கலத்தோடான காலமும் எமை வேறு வேறான பகுதிகளில் பிரித்தது.

நீண்டகாலத்தின் பின் நல்ல ஞாபகம் இருக்கு சண்டை அணித்தலைவிகள், பொறுப்பாளர் என ஒன்றுகூடி கலகலத்தபடி இருந்தபோது அந்த மணல் நிறைந்த முகாமில் உன் வெள்ளை வான் வந்தது. நீ இறங்கினாய் சனாதிபதி தோத்துப்போவார் எனப் பகிடி விட்டோம் ஒரு மிடுக்கு ஸ்ரைல். அது உன் ஆளுமையின் முத்திரை.

அனைவரும் திட்டமிட்டு உன்னை அறுத்து படாதபாடு படுத்தினோம் உன் சிறிய அர்த்தம் பொருந்திய கண்கள் எமக்குப் பிடித்தவை. பழையதுபோல் அமத்தல் சிரிப்பும் கண்கள் சிமிட்டலாலும் எம்மை அடக்க நினைத்தபோது பயந்ததுபோல பாவம் காட்டி அகிலா வெள்ளை வானில் ஏறப்போகிறாள் என்ற எம்மை ஒரு வார்த்தை ஒரேயொரு வார்த்தை சொன்னாள் அகிலா "வெள்ளை வானில் ஏற்றியது அல்ல எமது வேலை அதற்குப் அப்பால் கற்பனை கடந்த பல வரலாறுகளை மறைத்து வைத்திருக்கும் ஒரு புத்தகம் புலனாய்வு. அதைத் திறந்து பார்க்க முடியாது உணர்ந்து பார்க்கலாம்" என ஆறுதலாகவும் அதேவேளை நட்புடனும் கூறி முடித்தாள். எவ்வளவு நிஜம், எவ்வளவு சத்தியம் அது. எவ்வளவு இலகுவாய் நீ கூறி முடித்தாய். அதையெல்லாம் நான் உணர்ந்து அனுபவித்த பின்பே நீ எவ்வளவு ஆழமானவள் என்பதை உணர்ந்தேன்.

ஆளுமை - அது அகிலா! மிகவும் கண்டிப்பான அதேவேளை அன்பான தலைவி அவள். இவள் பற்றி எழுதத் தூண்டியது எது? அவளது ஆழமான உணர்வுகளா? ஆளுமையா? இவளது இறுதி நேர நிமிடங்களா? எது எனச் சரியாகக் கூறமுடியவில்லை அவளது வேலியற்ற மனம் நிறைந்த ஆசைகளை அவள் பகிர்ந்த கணங்கள். ஞாபகத்தில் வந்ததாக இருக்கலாம். எதுவாயினும் அவள் இழப்பு என் ஆன்மாவை வேதனைப்படுத்தியது.

நான் பிரிவிற்கு போன புதிதில் அவளது பொறுப்பாளர் ஒரு தடவை "அகிலா ஒரு வீறுகொண்ட அறிவுள்ள பிடிவாதமான பெண்" என்றார்.

ஆம்! உண்மை. அவள் என் ஆத்மரீதியான தோழிமட்டுமல்ல நல்லாசானும் கூட.... வேலைகளில் அவளது கடும்பிடி அதனால் வரும் முரண்பாடுகள் முறைப்புகள் எல்லாவற்றையும் நீக்கி கற்பித்தல், உற்சாகமூட்டல், வழிநடத்தல், வெற்றி... தோல்வி... எல்லாமாகி நின்றவள். முழுதாக புரிந்து கொண்டபோது அவள் போர்க்களம் நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

அகிலா பிடிவாதமான பெண், ஒரு தடவை தனது உறுப்பினர் நிறைவேற்றாத தாக்குதல் எப்படியும் நிகழ்த்துவேன் என சமூகத்தில் நீ கலந்து பயணிக்கச் சென்றபோது எமது பிரதேசத்திலேயே நீ பறிக்கப்பட்டதை அறிவேன். உனது பொறுப்பாளர் அது பற்றிக் கூறும்போது நடவடிக்கையை யாரும் செய்யலாம். நடவடிக்கையை பொறுப்பேற்று முழுவதுமாகி வெற்றி தோல்வியை இயல்பாக தோள் தாங்கும் ஒருவர் அகிலா என உணர்ந்து மறித்ததாகக் கூறினார். உறுதியும் தளராத மனமும் சோர்வடையாத பெண் இறுதி நேர சந்திப்பின் சொற்பத பிறழ்ச்சியால் ஏற்பட்ட புரிந்துணர்வுத் தடுமாற்றம் ஒன்று மட்டுமே அகிலா இவ்வளவு காலத்தில் முரண்பட்ட ஒரு சிறு விடயம் என நெகிழ்ந்து கூறினார். இறுதி நேரம் இப்படி நடந்ததை எண்ணி அவர் வேதனைப்படுவதை நான் உணர்ந்து கொண்டேன்.

பிள்ளைகளுக்கு அகிலா என்றால் மரியாதை அகிலா என்றால் அன்பு அகிலா என்றால் கண்டிப்பு... எல்லாமாகி நின்றவள் அவள். தனது உறுப்பினர் சந்திப்பில் எல்லாம் அவளது உள்ளார்ந்த விருப்பத்தை அடிக்கடி பக்குவமாக எடுத்து கூறுவாள். பிள்ளைகளிடம் அவர்களது ஆளுமையை வளர்க்க அவள் பட்டபாடு இருக்கிறதே அந்த அகிலாவின் எதிர்பார்ப்புகள் ஆசைகள் வேலியில்லாதவை.

கட்டுப்பாடும் கடமையும், பிள்ளைகள் தாமாக உணர வேண்டியவை என்ற தொனிப்புடனே கதைப்பாள். பிள்ளைகளின் முன்னேற்ற ஆளுமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுத்து வேலை செய்தல் பற்றி ஏக்கம் நிறைந்த உரையாக இருக்கும். எதிரியின் பிரதேசத்தில் குழுத்தலைவி தகவல் திரட்டல் பொருள் பாதுகாத்தல் நிலை நிறுத்தல், தாக்குதல் எனக் கூட்டாகவோ, தனியாகவோ எல்லாமே பெண்களாக... ஆசையில்லை வெறியில்லை இது அவளது ஆன்மாவின் விருப்பு.

சமூகவிழுமியங்கள் புரியாதவள் அல்ல அகிலா சமூகத்தின் நெளிவு சுழிவுகள் கரைத்துக் குடித்தவள். எது தெரியாது அவளுக்கு சத்துள்ள உணவில் இருந்து சற்றலைற் வரை தெரியும். படிப்பாள் எப்பவுமே ஒரு தேடலுள்ளவளாகவே இருப்பாள், ஒரு பெண் எதை எதை தாங்குவாள், எதை எதைத் தாங்கமாட்டாள் என்பதில் இருந்து ஒருத்தி மங்கையாகி உருப்பெற்று சிதைவரை போகும்வரை அவள் கொள்ளும் தடைகள், தார்ப்பரியங்கள் அறிவந்தவள் அவளே அவளாகி தடைதாண்டி பின் உறுப்பினர்களையும் நகர்வைப்பெற தாண்டவைக்க அவள்பட்ட துன்பங்கள், தடைகள், வெற்றிகள் தோல்விகள்..... பட்டறிவுகள் பட்டறிவுப் பதிவுகள் தாக்கியவள்

அவளது வார்ப்பில் உருவான பொறுப்பாளர்களாக உள்ளவர்களைச்சந்தித்தேன். அப்போ......அகிலா வேலைகள் நிர்வாக விடயங்களில் சிக்கல்கள் ஏற்பட்டால் எப்பவும் கலங்கியது இல்லையாம். கிழமைக்கணக்காக யோசித்து முடிவு எடுப்பாள். ஒரு சில முரண்பாடுகள் வரும் முகம் நீட்டல்களை தானாக இறங்கி வந்து தோள் அணைத்து விடயத்தை விளங்கும் பண்பு இருக்கிறதே! அன்பான தந்தையும் கண்டிப்பான அம்மாவாக அவள் நிற்கும் சமரசம் செய்யும் மந்திரகோல் அவளிடம் உண்டு. இது வெறும் நடிப்பல்ல. உள்ளார்ந்த விருப்புடன் உண்மையானது. அதை நானும் அனுபவித்துள்ளேன்.

அவள் பொறுப்பாக நின்று நிதானித்து எடுக்கும் முடிவுகள் எப்பவுமே சரியானவையாக இருக்கும். நின்று நிமிர்ந்து கட்டளை இட்டார் அதைச் செய்த பின்பே பிள்ளைகள் மிகுதிக்கதை கதைப்பர். அவ்வளவு நம்பிக்கை அவளில் அவளும் அவர்களை நம்புபவள்.

அவள் தான் சிரம் மேல் கொண்டு வேலைக்காக அவள் தேடலும் அணுகு முறையும் வித்தியாசமானவை தேடலுக்காக தெரியாதவற்றை அவள் சிறியவர், புதியவர் என்றெல்லாம் பார்க்காது மாணவியாகி நின்று கேட்பாள். எவ்வெவ்வழிகள் உள்ளன. எப்படித் தயார் செய்வது என இரவு, பகல், கிழமை என இதுபற்றி தேடல் பின் நகர்வு, எப்படியோ வானொலி, பத்திரிகை என துடிக்கும் இதயத்தைக் காண அமைதி பூசித் திரிவாள். வெற்றியோ... தோல்வியோ அவள் படும் பாடு அது விபரிக்க முடியாது.

அவள் வளர்ந்து விட்ட பொறுப்பாளர்கள் உணர்வுமிக்க உழைப்பாளிகள் எத்தனை தடை வந்து அவர்கள் நிலத்தில் வீழ்த்திய போதும் தமது திறமையாலும் உழைப்பாலும் நிமிர்ந்து நிற்பவர்கள். அவர்களது எண்ணிக்கை குறைவானாலும் பெறுமதி மிக்ககவர்களே!

என்னால் அவர்களுடன் உரையாட முடிந்த போதெல்லாம் அகிலா உதாரணமாகி நின்றாள். இந்த வேலையை செய்யேக்கை அகிலாக்கா என்றா இப்படித்தான் செய்வா. அவள் கண்மடல் நனைந்தது.

எந்தச் சிக்கலெண்டாலும் அகிலா இப்படித்தான் முடிவு எடுக்கும் இது அவளது தோழியும் போராளியுமானவள் கூறியது.

சிதைக்கவோ புதைக்கவோ முடியாத சித்திரங்கள் வரைந்தவள் ஒரு துடிப்பும் ஆளுமையும் கொண்ட பெண். எதை எதைச் சந்திப்பாளோ அத்தனையையும் தாண்டி நிமிர்ந்தவள்.

இறுதியில் அனுபவமற்ற புதிய போராளிகளுடன் உன்னை மட்டும் நம்பி போர்க்களம் சென்றாய். ஓவென்று பெய்த மழையால் ஈரம் கலந்த செம்மண்ணில் செல்லும் ரவையும் கூவிச் சென்றது புதியவர்கள் சண்டையில் சளைத்தவர் அல்ல முன்னேறு முன்னேறு என்றவளும் முன் நின்றாள்.

அகிலா போறாள். பிள்ளைகள் வருகினம்... அவன் வாறான் அடிக்கிறம்... இந்தா பிடிச்சாச்சு... என என்னிடம் இருந்த இனிப்பை வாங்கி உண்டபடி நீ கூறிய நான் கேட்ட உன் இறுதி வரை அங்கும் உன் தேடல் பரந்தது. நீ வளர்ந்து விருட்சமாகி படையணி வளர்ந்து... எவ்வளவு கனவு நீ சுமந்தாய் எவ்வளவு கனவை நாம் கண்டோம். உன் பிள்ளையின் உடல் சுமக்க ஓடிய உன்னை எதிரி வீழ்த்திய போது மட்டுமே தலை சாய்ந்தது நிறுதிட்டமாக உட்கார்ந்தபடியே உன் ஆவி பிரிந்ததாம் அதில் கூடவா உன் நிமிர்வு.

தோள் மீது உன் உடல் சுமக்க முடியாத பதட்டம் புதியவர்களுக்கு இப்போ அதே பிள்ளைகள் தோள்மீது ஏறாத ஆயுதம் இல்லை. விரட்டி விரட்டி அவளை அடிக்கும் உன் பிள்ளைகளின் வீரத்தைப்பார். உன் ஆன்மா திருப்திப்படும்.


நான் எடுத்த பேனாவை வைக்க முடியாமல் எழுதுகிறேன்.

நீ தலைவி மட்டுமல்ல என் உயிர் தோழி... உன்னதமான போராளி...

உன் நினைவுகளை கோர்த்துக் கோர்த்து உனக்காக கட்டிய இந்த மாலையை உன் காலடியில் சமர்ப்பிக்கிறேன். தேடல்..... அது தொடரும்.... அதுவரை மாலைகள் ஆண்டாண்டு உன் நினைவுக்காக!

மா. சீத்தா

நன்றி: விழி - 03 , பார்வை -01



# நான் மாறாத போது

கடலில் இருந்து
கரையைத் தொடும் ஆசையில்
மூசி எழுகிறேன்
பலமாய் சிறகடித்து
விண்ணைத் தொட
வேகமாகப் பறக்கிறேன்.

என்னால் அவற்றைத் தொட முடியவில்லை
மீண்டும் மீண்டும் முயலுகின்றேன்.
ஆரம்பித்த இடத்திக்கே வந்து விடுகிறேன்

அவர்களால் மட்டுமெப்படி
அதிகமாய் முடிகிறது
எழுந்த கேள்விகள்
சூரியனின் தங்கைகள் என்று
பளிச்சிட்டன பதில்கள்

மக்கள் கூட்டத்திலிருந்து
மலரத் துடிக்கிறேன்.
உடைத்து வெளிவர என்னால்
இயலவில்லையே— ஏன்?
ஏங்கித் தவிக்கிறேன்.

கை பிடித்தவனுக்காய்
காலத்தைக் கரைப்பதாலோ....
இக் கூட்டத்தில் இன்னும் நான்
பெண்ணாய் இருப்பதாலோ
இன்று வரை என் முகத்ததைத் தானே
மாற்றியிருக்கிறேன்.

ஓ... இப்போ புரிகிறது
எப்படி முயன்றாலும்
என் மனத்தளவில் நான்
மாறாத போது எழுந்து பறக்காது
இருந்த இடத்திலேயே
இருப்பேன் என்பது.

யசோ மோகன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேஜர் குமரனின் நாட்குறிப்பிலிருந்து...

# ஈகத்தின் ஊற்று

*மேஜர் குமரன் தாயகத்தின் விடியலுக்காய் தளர்வறியா மனத்திண்மையனாய் காலமதில் சுழன்றடித்த இளைய வீரன். ஈழத்தின் இராசதந்திரியாய் தரணியெங்கும் வலம் வருவான் என அவனது தாய்ப் பறவையும் சகோதரக்குஞ்சுகளும் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்த வேளையில் வல்லாதிக்க சக்திகளின் அரூப கரங்களின் துரோகத்தனத்தாலும் பேரினவாதப் படைகளின் இடைமறிப்பாலும் பாக்கு நீரிணையில் 8.02.1998 இல் அவனை இழந்தது தாயகம்.*


*அவன் விட்டுச் சென்ற நாளேட்டின் பக்கங்களில் அவன் பொறித்திருந்தவற்றில் சில இங்கே விரிகின்றன. இக்கருத்துக்களில் சில உங்களில் பலருக்கு எங்கோ கேட்டவையாக இருக்கலாம். ஆனால் வரலாற்றில் புதிய அத்தியாயம் எழுதப் புறப்பட்ட வேங்கைகளில் ஒருவனின் பண்பட்ட மனிதத்தின் பாங்கும், பாழ்படா தாயகப்பற்றும் இவ் வரிகள் எங்கும் விரவி நிற்பதை இதனை வாசிக்கின்ற ஒவ்வொரு மானிடத்தாலும் உணரக் கூடியதாக இருக்கும்*

## உண்மை

நல்ல மனிதனாக இருப்பது நல்லது –
ஆனால்
நல்ல பெயருக்காக உண்மையில்
இருந்து விலகுவது
தற்கொலைக்கு ஒப்பானது!

## விடுதலை விழி!

எனது கண் இருக்கும் வரை
எனது கைகள் எனது தன்னுணர்வுகள்
இருக்கும் வரை தமிழீழ
விடுதலைக்கான போரை
எதிரியின் எதிரில்
நான் பிரகடனம் செய்வேன்!



## போர் வீரன்

ஒவ்வொரு நிமிடத்திலும்
புதிய யுக்திகளை
உபாயங்களை
தானாகக் கண்டுபிடித்து
எதிரியை வியப்படையச் செய்கிறான்..

## தொடர்ச்சி...

விடிவை நோக்கிய எம் தமிழீழப் பயணத்தில்
மாவீரர்களின் தியாகத்தால்
விடிவை நோக்கிய பயணம் தொடர்கிறது
இவர்களின் இலட்சியப் பாதையில்
நாமும் பின் தொடர்வோம்

மாவீரர்களின் இலட்சியம்
மகத்தானது எனவே
அவர்கள் விட்டுச் சென்ற
இலட்சியத்தை பின்தொடர்வோம்
அதை பின் தொடராமல்
இருப்போமாயின் எமது தமிழ்த்
தலைமுறை அழிவதற்கு சமனாகும்.

## வீரத்தில் தாயகம் காண்!

வீரமில்லையேல்
வாழ்வு இல்லையாம்
விவேகம் இல்லையேல்
உயர்வு இல்லையாம்
தீரமில்லையேல்
தியாகமில்லையாம்
தியாகமில்லையேல்
நாடு இல்லையாம்.

## பிறப்பும் இறப்பும்!

பிறப்பவன் ஒருநாள் இறப்பது நியதி
ஆனால் வாழும் நாட்களில்
மானம் இழந்து வாழ்வதா
அடிமையாக வாழ்வதா
அதை மாற்றி அமைப்போம்
மானத்துடன் வாழ்வோம்
எழுந்து வா தமிழா
தமிழீழம் பெறப் போராடுவோம்
தமிழீழம் கிடைத்ததும் – எமது
வாழ்வை சந்தோசமாக கூடிக் கழிக்கலாம்.

## காதல்!

நான் காதலிப்பது
எங்கள் தாய் நாட்டை
எனவே எந்த நேரத்திலும்
எனது உயிரை அர்ப்பணிக்க
தயாராக உள்ளேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அரிது அரிது பிரிவுத் துயர் தீர்த்தல் அரிது!

மனிதனால் வெல்ல முடியாதது சாவு
கண்ணால் பார்க்க முடியாதது காற்று
இலகுவில் பெறமுடியாதது தூய அன்பு
பிரிந்தால் தாங்க முடியாதது
உயிர்ப் போராளி நண்பர்களின் பிரிவு!!

## துன்பமும் சந்தோசமும்

அடுத்தவருடன் சந்தோசத்தை பகிர்ந்துகொள்
உன்துன்பத்தை கூடியவரை நீயே தாங்கிக்கொள்
ஆறுதல் கூறு – தீர்வுக்கான வழியைப் பார்
ஆனால் பிறர் துன்பங்களில் நீ
கலந்து கொண்டு ஆறுதல் கூறு..

## உறவு

உறவென்று ஒன்றிருந்தால்
பிரிவென்று ஒன்று இருக்கத்தான் செய்யும்
அதற்காக நாம் வருந்தக் கூடாது
உறவுகள் ஒருபோதும் அழிவதில்லை!!

## நிகழ்காலம்

மொட்டெல்லாம் பூவாவதில்லை
பூவெல்லாம் காயாவதில்லை
காயெல்லாம் கனியாவதில்லை
கனியெல்லாம் விதையாவதில்லை
காண்பதெல்லாம் நிஜங்கள் அல்ல
கற்பனைகளெல்லாம் நிஜங்களாவதில்லை..

## வேங்கைக் காற்று

தென்றல் காற்று
வீசும் பூமியிது
வேங்கைகள் வீரம்
திசையாவும்
வென்றுவரும்
உலகமிது!

## துயிற் காவல்

நான் இங்கே
உறங்கிக் கொண்டிருக்கிறேன்
ஆனால் எனக்காக
இன்னொருவன்
எல்லையில் விழித்திருக்கிறான்.

.....................................................

நன்றி:
ஆவணக் காப்பகம்,
அனைத்துலகத் தொடர்பகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

# காவல்(சென்றி)

வெட்ட வெளி மீதினிலே
கொட்டும் பனி நடுவினிலே
வாட்டும் ஒளி தனிலே
நட்ட நடு ராவினிலே
காவல் இன்றும் தொடர்கிறது.

சத்தியமே வெல்லுமென்று
நிச்சயம் நம்புகின்ற
வேங்கையணி பாய்கிறது
காவல் இன்னும் தொடர்கிறது

நெஞ்சுதனில் நஞ்சு முட்ட
நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட
பஞ்சணையில் துஞ்சும் வேளை
சென்றிதனில் நிற்கும் வேங்கை.

.....................................................

நவம் அறிவுக்கூடப் போராளி
**அன்புக்கரசன்**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நினைவுக்குறிப்பு

## தமிழர் விடுதலை வரலாற்றில் மே

**தமிழினப் படுகொலை ஆரம்பம்:**
22.05.1958 அன்று ஒரு தொடரூந்தில் பயணம் செய்துகொண்டிருந்த 500ற்கும் மேற்பட்ட தமிழர்களை சிங்களக் காடையர்கள் தாக்கி இனக் கலவரத்தை ஆரம்பித்தனர். அப்போதைய சிறிலங்காப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவினது குண்டர்களாலும், சிங்களக் காவல்துறையினராலும் தமிழர்களது வீடுகள், உடமைகள் யாவும் அழிக்கப்பட்டன. 300 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

**'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்று பெயர் சூட்டப்பட்ட நாள்:**
1972ம் ஆண்டில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களினால் 'புதிய தமிழ்ப் புலிகள்' என்ற பெயரில் உருவாக் கப்பட்டு வழிநடத்தப்பட்டு வந்த புலிகள் இயக்கம் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' எனப் பெயர் மாற்றம் பெற்று இயங்கத் தொடங்கிய நாள் 05.05.1976 ஆகும்.



**யாழ். நூலகம் எரிக்கப்பட்டநாள்:**
மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கென வந்திருந்த அமைச்சர் களான காமினி திசநாயக்கா மற்றும் சிறில் மத்தியு முதலானவர்கள் தலைமையிலான சிங்களக் காடையர்களால் தமிழ் மக்களின் பண் பாட்டு அறிவுப்பெட்டகம் 31.05.1981 அன்று தீமூட்டி எரிக்கப்பட்டது. தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்டதும் சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான பண்டைய நூல்களையும் ஏட்டுச் சுவடி களையும் கொண்ட அழகிய அரிய கலைக்கருவூலத்தை சிங்களக் காடையர்கள் எரியூட்டி, சிங்களத்தின் எண்ணம் தமிழின அழிப்பு ஒன்றையே நோக்காகக் கொண்டது என்பதை புலப்படுத்தினர்.

**கந்தர் மடம் வாக்குச்சாவடித் தாக்குதல்:**
18.05.1985 அன்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது கந்தர் மடம் தேர்தல் சாவடியில் காவலில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீதும், பொலிசார் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 10 நிமிட அதிரடித் தாக்குதலில் இராணுவக் கோப்ரல் ஜெயவர்த்தனா கொல்லப்பட்டான். ஒரு இராணுவக் கோப்ரலும், 2 பொலிசாரும் காயமுற்றனர்.

**லெப்டினன் சீலனைக் காட்டிக்கொடுத்த பொலிஸ் அதிகாரி அழிப்பு:**
தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது தாக்குதலணித் தளபதி யான லெப்டினன் சீலனின் மறைவிற்குக் காரணமாக விளங்கிய இனத் துரோகி பொன்னையா சுப்பிரமணியம் 04.05.1984 அன்று மீசாலையில் வைத்து விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டான்.

**மன்னார் பொலிஸ் நிலையத் தகர்ப்பு:**
10.05.1985 தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலணிகளால் மன்னார் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது. வெற்றிகரமாக நடந்து முடிந்த இத் தாக்குதலின்போது, மன்னார் பொலிஸ் நிலையத்தின் 7 கட்டிடங்கள் தகர்க்கப்பட்டன. பெருமளவிலான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. பல பொலிசார் கொல்லப்பட்டனர்.

**வல்வெட்டித்துறைப் படுகொலை:**
09.05.1985 அன்று வல்வெட்டித்துறை நகர்பகுதியை சுற்றிவளைத்த சிறிலங்காப் படையினர் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட 50 பொதுமக்கள், பொது நூல் நிலையத்தினுள் அடைத்துவைக்கப்பட்டு குண்டுவைத்துக் கொல்லப்பட்டனர். தெருக்களில் வைத்தும் பொது மக்கள் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டனர். எல்லாமாக 90 பொது மக்கள் ஜே.ஆரின் ஆயுதப் படைகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

**சிங்களப் படை அதிகாரி மேஜர் சிறிலால் மெண்டிஸ் பலி:**
12.05.1985 அன்று உடுப்பிட்டி பேரூந்து நிலையத்தினுள் தமிழின அழிப் பிற்கென தயாராக இருந்த சிங்களப்படையினர். மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எறிகுண்டுத் தாக்குதலில் மேஜர் சிறிலால் மெண்டிஸ் உட் பட ஐவர் கொல்லப்பட்டனர்.

**வவுனியாவில் இந்தியச் சிறையுடைப்பு:**
01.05.1989 அன்று வவுனியாவில் இருந்த இந்தியப் படையினரின் சிறை யை உடைத்து அங்கிருந்த போராளிகளும் பொதுமக்களுமாக 42 பேர் தப்பினர். இச்சிறையுடைப்பு நடவடிக்கையில் இரு போராளிகள் உட்பட நான்கு தேசத்தின் புதல்வர்கள் வீரச்சாவடைந்தனர்.

**அபித்தா கப்பல் தகர்ப்பு:**
கடலில் பல போராளிகளினது அழிவுக்கும் பல பொதுமக்களது அவல இறப்பிற்கும் காரணமாக இருந்த அபித்தா கட்டளைக் கப்பல் 04.05.1991 அன்று கடற் கரும்புலிகள் கப்டன் ஜெயந்தனாலும், கப்டன் சிதம்பரத் தாலும் அழிக்கப்பட்டது.

**இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்:**
இந்திய அமைதிப் படையை தமிழீழத்திற்கு அனுப்பி, 8000 தமிழர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி 21.05.1991 அன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். இவ ரால் அனுப்பிவைக்கப்பட்ட படைகளால் தமிழீழத்தின் பல கோடிப் பெறு மானமுள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

**தமிழீழ வைப்பகம் ஆரம்பம்:**
23.05.1994 அன்று தமிழீழ நிர்வாகக் கட்டமைப்புகளில், ஒன்றான தமிழீழ வைப்பகம் திறந்துவைக்கப்பட்டது.



**ஓயாத அலைகள்—03 மே மாதத்தில் நகர்ந்த பாதை:**
10.05..2000 அன்று நாவற்குழிப் பாலம் மீட்கப்பட்டது. 11.05.2000 அன்று தென்மராட்சிக் கோட்டத்தில் கோயிலாக்கண்டி தனங்கிளப்பு படைத் தளங்கள் கைப்பற்றப்பட்டன. யாழ். மாநகரை நோக்கிய நகர்வில் அரியா லைப் பிரதேசம், கொழும்புத்துறை இறங்குதுறைப் பகுதி கைப்பற்றப் பட்டது. 16.05.2000 அன்று தச்சன்தோப்பு நாவற்குழிப் பகுதி படை முகாம்கள் தகர்க்கப்பட்டன. ஓயாத அலைகள் -03 படையணிகளால் கைதடிச்சந்தியில் அமைந்திருந்த இராணுவத்தளம் விடுவிக்கப்பட்டது. 20.05.2000 ஓயாத அலைகள் -03 படையணிகளால் தென்மராட்சியின் தலைநகர் சாவகச்சேரி மீட்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மார்ச் 2004

# மீள்பார்வை

**01.03.2004**

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, 01.03.2004 அன்று, தனது தேர்தல் விஞ் ஞாபனத்தை வெளியிட்டது. தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றை வலியுறுத்தியும், அதன் அடிப்படையில், தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் சிறீலங்கா அரசு பேச்சுவார்த்தையை மேற் கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்தும் தேர்தல் விஞ்ஞாபனம், இடைக் கால தன்னாட்சி அதிகார சபை, உடன் வழங்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்துகின்றது.

**01.03.2004**

மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை, 01.03.2004 அன்று காலை சுட்டுக்கொல்லப்பட்டுள் ளார்.

**06.03.2004**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து, மட்டக்களப்பு அம் பாறை மாவட்டத் தளபதியாக இருந்த கருணா, நீக்கப்பட்டுள்ளார் என, விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் 06.03.2004 அன்று அறிவித் தது. இது குறித்து, அன்று கிளிநொச்சியில் செய்தியாளர் மாநாட்டில் அறி விக்கப்பட்டதுடன், இது தொடர்பான செய்தி அறிக்கை ஒன்றையும் தலைமைப்பீடம் வெளியிட்டுள்ளது. 'தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு விரோதமான சில தீயசக்திகளின் தூண்டுதலின் பேரில், மட்டு-அம்பாறைத் தளபதியாக இருந்த கருணா அவர்கள், தனியாகப் பிரிந்துசெல்ல முற் பட்டுள்ளார். இந்த அப்பட்டமான துரோகத்தனத்தை ஏற்றுக்கொள்ளாது, அவரின் கீழிருந்த தளபதிகளும், பொறுப்பாளர்களும், போராளிகளும் அவரது கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்ததோடு, தமிழீழ தேசியத் தலை மையைச் சந்தித்து, அங்குள்ள உண்மை நிலையைத் தெளிவுபடுத் தியுள்ளார்கள். இதற்கமைய, கருணா அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தும், அவரது பொறுப்பில் இருந்தும் நீக்கப் பட்டுள்ளார். என அவ் அறிக்கை தெரிவிக்கின்றது.

**08.03.2004**



சர்வதேச மகளிர்நாள் நிகழ்வுகள், 08.03.2004 அன்று, தாயகம் தழுவிய ரீதியில், மிகவும் பேரெழுச்சியுடன் நடைபெற்றுள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவினரும், அரசசார்பற்ற நிறுவனங்களும், மகளிர் அமைப்புக்களும் இணைந்து இந்நிகழ்வுகளை ஒழுங்குசெய்து நடத்தி யுள்ளன. யாழ்ப்பாணத்தில், நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு, உரையாற்றிய தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் ஆற்றுப்படுத்தலினால் தமிழீழப் பெண்கள் உலகமே வியந்துநோக்கும் வல்லமையைப் பெற்றிருக்கின்றார்கள் எனத் தெரிவித்தார்.

**13.03.2004**

13.03.2004 அன்று, கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற வீதி விபத் தொன்றில், நாட்டுப்பற்றாளர்கள் இருவர் சாவடைந்துள்ளனர். யாழ் அரசடி வீதியைச் சேர்ந்தவரும், கரடிப்போக்கில் தற்காலிகமாக வசித்து வந்த வருமான கந்தசாமி ஸ்வரச்சந்திரன், யாழ். நாவற்குழியை சொந்த இட மாகவும் புதுக்குடியிருப்பில் தற்காலிகமாக வசித்துவந்தவருமான பொன் னையா சிறீதரன் ஆகிய இரு நாட்டுப்பற்றாளர்களே சாவடைந்துள்ளனர்.

**18.03.2004**

18.03.2004 அன்று, சுகயீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந் துள்ளார். மேஜர் மோகன் என்று அழைக்கப்படும், காந்திவீதி கொக்குவில் மேற்கு யாழ்ப்பாணத்தை, சொந்த முகவரியாகவும், யூனியன்குளம் சந்தி அக்கராயன் கிளிநொச்சியை தற்போதைய முகவரியாகவும் கொண்டிருந்த அருள்ராசா ஜெசிக்குமார் என்ற போராளியே சாவடைந்தவராவார்.

**19.03.2004**

அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவெழுச்சியின், ஆரம்பநாள் நிகழ் வுகள், 19.03.2004 அன்று தாயகம் தழுவிய ரீதியில், உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகின. தமிழீழத் தாயகமெங்கும் அன்னையின் நினைவுநாளை முன்னிட்டு, நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு, அன்னையின் திருவுரு வப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

**23.03.2004**



இலங்கைக்கான உலக வங்கியின் பிரதிநிதி பீற்றர் கெரால்ட் அவர்களும், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிராஸ்கர் அவர்களும் 23.03.2004 அன்று கிளிநொச்சி சென்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து கலந்துரையா டியுள்ளனர். கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவகப் பணியகத்தில், இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

**25.03.2004**

25.03.2004 அன்று, யாழ்ப்பாணத்தில், யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மீது, ஈ.பி.டி.பி. கூலிக்குழுவினர் தாக்குதல் நடத்தினர். இதன்போது, பல் கலைக்கழக மாணவர் அமைப்புத் தலைவர் பகீரதன், மற்றும் புவிராஜ் என்ற மாணவர் ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் யாழ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவத்தைக் கண்டித்து, யாழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள், வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்தி னார்கள். இதனையடுத்து, பொலிசாருக்கும், மாணவர்களுக்கும் இடை யில் மோதல் இடம்பெற்றது. பொலிஸார் கண்ணீர்ப்புகைக்குண்டுகளை வீசி, தாக்கினர். பதிலுக்கு மாணவர்களும் பொலிஸார் மீது கற்கள் கொண்டு தாக்கினார்கள். இதன்போது பொலிஸ் வாகனம் ஒன்று சேதமடைந்தது. சில மாணவர்களை, சிங்களப் பொலிஸார் கைதுசெய்து தடுத்துவைத்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏப்பிரல் 2004

# பதிவுகள்

### சிறீலங்காவின் பதின்மூன்றாவது பாராளுமன்றத் தேர்தல்:

02.04.2004 அன்று நடைபெற்ற சிறீலங்காவின் பதின்மூன்றாவது பாராளுமன்றத் பொதுத் தேர்தலில், தமிழ்மக்கள், மிகுந்த ஆர்வத்துடன், விழிப்புணர்வுடன் கலந்துகொண்டு வாக்களித்துள்ளனர். பலதடைகள், சிரமங்கள், நெருக்கடிகளுக்கு மத்தியில், தமிழ் மக்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலாக இத்தேர்தலைக் கருதி, தமது தேசிய நிலைப்பாட்டை, சர்வ உலகத்திற்கும் தெரியப்படுத்தும் துடிப்புடன், இவ்வாக்களிப்பில் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



### வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி:

நடந்து முடிந்த சிறீலங்காவின் பதின்மூன்றாவது பாராளுமன்றத் தேர்தலில் வெளிவந்துள்ள முடிவுகளின்படி, சந்திரிகா தலைமையிலான மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி முன்னணியிலும், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி இரண்டாம் இடத்திற்கும் தள்ளப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அமோக வெற்றியைப் பெற்றுள்ளது. அளிக்கப்பட்ட வாக்குகளில், தொன்னூறு வீதத்திற்கும் மேலான வாக்குகளைப் பெற்று, அதிக இடங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுள்ளது.

தமிழ்மக்களின் தேசிய அபிலாசையை வலியுறுத்திப் போட்டியிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அமோக வெற்றி, தமிழ்மக்களின் உள்ளக் கிடக்கையை, சர்வ உலகத்திற்கும் ஆணித்தரமாக வெளிப்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகளே தமிழ்மக்களின் ஏகபிரதிநிகள் என்பதையும், மேதகு வே. பிரபாகரன் அவர்களே தமது தேசியத் தலைவர் என்பதையும் இந்தத் தேர்தலினூடாக தமிழ்மக்கள் சர்வஉலகிற்கும் அறிவித்துள்ளனர்.

### தமிழ்மக்களுக்கு நன்றி தெரிவித்து தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை:

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இரத்தம் சிந்தி உயிர்விலை கொடுத்து பெரும் தியாகங்கள் புரிந்து பெரும் இராணுவ வெற்றிகளைக் குவித்து தீர்க்கமான வரலாற்றுக்கட்டத்தை அடைந்துள்ள எமது தேச விடுதலைப் போராட்டத்திற்கும், அதனைத் தலைமை தாங்கி முன்னெடுத்துவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், நடைபெற்ற தேர்தலில் தமிழ்மக்கள் தமது தார்மீக ஆதரவை மீள உறுதிப்படுத்தி, எமது போராட்ட முன்னெடுப்புகளுக்கு தமது ஒட்டுமொத்த ஆணையை வழங்கி ஆற்றிய வரலாற்றுப் பணி மகத்தானது என, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜெனீவாவில் எழுச்சி கொண்ட பொங்கு தமிழ்ப் பேரணி:

05.04.2004 அன்று, ஜெனீவாவில் இடம்பெற்ற பொங்கு தமிழ்ப் பேரணியில், பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் கலந்துகொண்டனர். ஜெனீவா நகரின் போக்குவரத்தையே ஸ்தம்பிக்கச் செய்யும் அளவிற்கு, தமிழ் மக்களின் பொங்கு தமிழ்ப் பேரணி, நகரின் வீதிகளை முற்றாக அடைத்துக் கொண்டதுடன், ஐ.நா மன்றத்திடலையும் வியாபித்து நின்றது. சுமார் பதினையாயிரம் வரையிலான தமிழ்மக்கள் கலந்துகொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சுவிஸ்வாழ் தமிழ்மக்களுடன், ஜேர்மன், பிரான்ஸ், நெதர்லாந்து, நோர்வே, இத்தாலி, டென்மார்க் போன்ற நாடுகளில் இருந்தும் ஆயிரக்கணக்கில் தமிழ்மக்கள் கலந்துகொண்டனர். இம்முறை, கனடா, அமெரிக்கா, போன்ற நாடுகளில் இருந்தும் வந்து இப்பொங்குதமிழ் நிகழ்வில் தமிழ்மக்கள் கலந்துகொண்டனர்.

பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொள்ள தேசியத் தலைவரின் பிரதிநிதிகளாக, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கரிகாலன், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் தமிழீழத்தில் இருந்து வருகைதந்து கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர். யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் சிதம்பரநாதன், இமானுவேல் அடிகளார், விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் உருத்திரகுமார் ஆகியோரும் இந்நிகழ்வில் உரையாற்றினர்.




### தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் கொழும்பில் முதலாவது பாராளுமன்றக் குழுக்கூட்டத்தைக் கூட்டினர்:

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் 06.04.2004 அன்று, கொழும்பில் முதலாவது பாராளுமன்றக் குழுக்கூட்டத்தைக் கூட்டியுள்ளனர்.

அன்றைய கூட்டத்தில், கூட்டமைப்பின் பொறுப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பாராளுமன்றக் குழுத் தலைவராக இரா. சம்பந்தன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உப தலைவராக மாவை சேனாதிராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அன்றைய கூட்டத்தில், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட, தேர்வு செய்யப்பட்ட 20 பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



### சிறீலங்காவின் புதிய பிரதமர் பதவியேற்றார்:

சிறீலங்காவின் புதிய பிரதமராக, மகிந்த இராஜபக்ஸ பதவியேற்றுள்ளார். சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா முன்னிலையில், அவர் 06.04.2004 அன்று பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

### கருணாவின் பிடியில் இருந்து, போராளிகளையும் பொதுமக்களையும் மீட்கும் நடவடிக்கை ஆரம்பம்:

மட்டக்களப்பில், கருணாவின் பிடியில் இருந்து, போராளிகளையும் பொது மக்களையும் மீட்கும் நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளால் 09.04.2004 அன்று அதிகாலை ஆரம்பிக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏப்பிரல் 2004

# பதிவுகள்

### பாராளுமன்ற உறுப்பினர்களாக ஜோசப் பரராஜசிங்கமும், ஈழவேந்தனும் நியமனம்:

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் இரு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான இடங்களுக்கு மட்டக்களப்பைச் சேர்ந்த ஜோசப் பரராஜசிங்கமும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஈழவேந்தனும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

### மீட்புப் படையணி அம்பாறை மாவட்டத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்:

கருணாவை, தாயக மண்ணில் இருந்து அகற்றும் நடவடிக்கையின், தொடர்ச்சியாக 11.04.2004 அன்று, அம்பாறை மாவட்டத்தை தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்த மீட்புப் படையணி, அங்கு நிர்வாகச் செயற் பாடுகளை ஆரம்பித்தது.

### மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள், விடுதலைப் புலிகளால் முற்றாக மீட்கப்பட்டன:

12.04.2004 அன்று மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள், விடுதலைப் புலிகளால் முற்றாக மீட்கப்பட்டுள்ளன. கருணா குழு மாவட்டத்தின் எல்லைப் பகுதியிலுள்ள காட்டுப்பகுதிக்கு தப்பியோடியுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது. மீட்கப்பட்ட பகுதிகளில் எல்லாம் பொதுமக்கள், விடுதலைப் புலிகளை வரவேற்று தமது மகிழ்ச்சிகளைத் தெரிவித்தனர்.

### மட்டு அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், சிறீலங்கா இராணுவத்திற்கும் இடையே சந்திப்பு:

விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் தலைமையிலான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், சிறீலங்கா இராணுவத்தின் 23வது படையணியின் தளபதி பிரிகேடியர் வஜிரா விஜய குணவர்த்தனா தலைமையிலான சிறீலங்காப் படையினருக்கும் இடையே, 15.04.2004 அன்று சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு மண், மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, சிறீலங்காப் படைத் தரப்பிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மட்டக்களப்பில் இடம் பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும். போர்நிறுத்தக் கண்காணி ப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் திரோன்ட் புறுாவ் கோவ்டே இச் சந்திப்புக்கு அனுசரணை வழங்கினார்.

### கருணாவுடன் தப்பிச் சென்ற, எண்மர், மீண்டும் மட்டக்களப்பு திரும்பினர்:

கருணாவுடன் தப்பிச் சென்ற, எண்மர், மீண்டும் மட்டக்களப்பு திரும்பி யுள்ளனர். கருணாவின் முக்கிய சகாக்களாக இருந்த, ஜிம்கெலிதாத்தா, திருமால், றொபேர்ட், துரை மற்றும் கருணாவின் நான்கு மெய்பாது காவலர்கள், கொழும்பில் இருந்து மட்டக்களப்பிற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளனர். தாம் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டு, கொட் டேல் ஒன்றில் விடப்பட்டதாகவும், கருணாவுடன், வரதன், நிலாவினி, மற் றும் ஒரு பெண்போராளி மற்றொரு வாகனத்தில் சென்றதாகவும் அவர்கள் எங்கிருக்கின்றார்கள் எனத் தெரியவில்லை எனவும் திரும்பிச் சென்ற வர்கள் தெரிவிக்கின்றனர். கைவிடப்பட்ட நிலையில், மட்டக்களப்பில் உள்ள விடுதலைப் புலிகளுடன் இவர்கள் தொடர்புகொண்டதையடுத்து, மட்டக்களப்பில் இருந்து இரண்டு வாகனங்களை அனுப்பி, அவர்களை மட்டக்களப்பிற்கு விடுதலைப் புலிகள் கொண்டுசென்றுள்ளனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கும், தளபதிகள் போராளிகளுக்கும் மக்கள் தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்:

துரோகத்தனத்தில் இருந்து மட்டக்களப்பு அம்பாறை மாவட்டம் மீட் கப்பட்டதற்கு, தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கும், தளபதிகள் போராளிகளுக்கும் மக்கள் தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

### அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவெழுச்சிநாள்:

அன்னை பூபதியின் 16ம் ஆண்டு நினைவெழுச்சிநாள் நிகழ்வுகள், 19.04.2004 அன்று தாயகம் தழுவிய ரீதியில் பேரெழுச்சியுடன் நடை பெற்றன. தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும், எழுச்சிக்கூட்டங்கள், கருத்தரங்குகள், கலைநிகழ்ச்சிகள், மற்றும் சமூகநலச் செயற்பாடுகள் நடைபெற்றன. அடையாள உண்ணாவிரதப் போராட்டங்கள் நடை பெற்றன. வழிபாட்டிடங்களில், விசேட வழிபாட்டுநிகழ்வுகளும் இடம் பெற்றன. தாயகத்தின் அனைத்துப் பகுதிகளும், மஞ்சள் சிகப்பு வர்ணக்




கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு, விடுதலைப்பாடல்கள் ஒலிக்க உணர் வெழுச்சியுடன் காணப்பட்டன. மட்டக்களப்பு நாவலடியில் உள்ள அன்னை பூபதியின் நினைவாலயத்தில், அன்றைய தினம் சிறப்பு நிகழ் வுகள் இடம்பெற்றன. அன்னையர் முன்னணியினால் ஏற்பாடு செய்யப் பட்ட இந்நினைவெழுச்சி நிகழ்வில், பெருந்தொகையாக பொதுமக்கள் கலந்துகொண்டனர். விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி ரமணன் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

### தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்:

20.04.2004 அன்று, கிளிநொச்சி சென்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அன்று கிளி நொச்சி சென்றிருந்தனர்.

பொதுத்தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைந்த வெற்றி, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வழங்கப்பட்ட மாபெரும் அங்கீகாரம் என, தேசியத் தலைவர் அவர்கள், தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் தெரிவித் துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு, தமிழ்த்தேசியத்தின் முக்கிய அடிப் படைகளை வலியுறுத்தியே மக்கள் வாக்களித்திருப்பதை தெரிவித்த தேசியத் தலைவர் அவர்கள், தமிழ்மக்கள் எதற்காக வாக்களித்தார்களோ அதற்காக பணியாற்றவேண்டும் எனவும் அச்சந்திப்பில் கேட்டுக் கொண்டார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏப்பிரல் 2004

# பதிவுகள்

அன்றைய அச்சந்திப்பில், தேசியத் தலைவருடன், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டுஅம்மான், கேணல் சொர்ணம், தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் பி.நடேசன், தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, கேணல் விதுசா, கேணல் துர்க்கா, அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, மற்றும் அனைத்து மாவட்டங்களினதும் அரசியல்துறைப் பொறுப்பாளர் கள் இதில் கலந்துகொண்டனர்.



மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் அவர்கள் தமிழீழத் தேசியத் தலைவரைச் சந்திக்கிறார்.



மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், தமிழீழத் தேசியத் தலைவரைச் சந்தித்து கலந்துரையாடுகிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின்னர், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திர சேகரன் அவர்களும், மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் அவர்களும் தமிழீழத் தேசியத் தலைவரைச் சந்தித்து கலந்து ரையாடியுள்ளனர்.

### வன்முறை வெறியாட்டத்தில், ஏழு விடுதலைப் புலி வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்:

மட்டக்களப்பு மாவட்டத்தில், சிறீலங்கா வவுணதீவு இராணுவ முகாம் பக்கமாக இருந்து சென்ற குழு எனக் கருதப்படும், இனந்தெரியாத குழு ஒன்றால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை வெறியாட்டத்தில், ஏழு விடு தலைப் புலி வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். இவ்வன்முறை வெறியாட் டம் 25.04.2004 அன்று நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு ஆயித்தியமலை பிரதான வீதியில், முள்ளாமுனையில் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் பண்ணையிலும், அருகில் இருந்த காவல் அரணிலும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே ஏழு விடுதலைப் புலி வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர்.

பண்ணையில் இருந்த, போரில் அவயவங்களை இழந்த நான்கு விடு தலைப் புலி உறுப்பினர்களைச் சுட்டுக்கொன்ற தேசவிரோதிகள்,திரும்பிச் செல்லும் வழியில், அருகில் இருந்த காவலரண் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர் இதில் மூவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

### குண்டு வெடித்ததில் இளைஞர் ஒருவர் பலி:

26.04.2004 அன்று அதிகாலை, குருநாகலில், மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், தான் கொண்டு சென்ற குண்டு வெடித்ததில், தானே பலியாகியுள்ளார் என, சிறீலங்காக் காவல் துறையினர் தெரிவிக்கின்றனர். அவர் வசம் இருந்த கடவுச் சீட்டில் இருந்து, நாவற்குடாவைச் சேர்ந்த கே. துரைராஜசிங்கம் என, இறந்தவர் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனக் காவல்துறையினர் தெரிவிக்கின்றனர். அவர் வசமிருந்து, கடவுச் சீட்டு, கைத் தொலைபேசி, மற்றும் கைத்துப்பாக்கி, கிளைமோர் குண்டு என்பன கண்டெடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றன.

### தேசவிரோதி கருணா கும்பலால், கொல்லப்பட்ட போராளிகளின் விபரம், புலி களின் குரல் வானொலியில் வெளியிடப்பட்டுள்ளது:

மட்டக்களப்பில், விடுதலைப் புலிகளின் முகாம் மற்றும் காவலரண் மீது தாக்குதல் நடத்தி, ஏழுபேரை படுகொலை செய்த ஆயுதக்குழு, தேச விரோதி கருணாவின் குழுவினரே என, புலிகளின் குரல் வானொலி, செய்தி வெளியிட்டுள்ளது. அத்துடன் கொல்லப்பட்ட போராளிகளின் விபரமும், புலிகளின் குரல் வானொலியில் வெளியிடப்பட்டுள்ளது.

வவுணதீவு மாயாவடியில் பண்ணை முகாம் மீது தேசவிரோதி கருணா குழு நடத்திய தாக்குதலில், கப்டன் சிசிக்குமார் என அழைக்கப்படும் மட்டக்களப்பு பெரியபோரதீவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை திருப்பாதம், கப்டன் வாமகாந் என்று அழைக்கப்படும் கிரானைச் சேர்ந்த கணேசன் லிங்கநாதன், லெப்டினன்ட் விநோரஞ்சன் என்று அழைக்கப்படும் செங் கலடியைச் சேர்ந்த செல்லையா மோறாஜ், இரண்டாம் லெப்டினன்ட் தாரணன் என்று அழைக்கப்படும் ஆயித்தியமலையைச் சேர்ந்த தெய்வ நாயகம் சந்திரகுமார் ஆகிய நான்கு விடுதலைப் புலி வீரர்களே வீரச் சாவடைந்துள்ளனர்.

வவுணதீவு புளியம்மடு காவலரண் மீது, தேசத்துரோகி கருணாவின் குழு மேற்கொண்ட தாக்குதலில், கப்டன் தியானேஸ்வரன் என்று அழைக் கப்படும் தளவாய் ஏறாவூரைச் சேர்ந்த நடராசா சுரேஸ், லெப்டினன்ட் டனிசன் என்று அழைக்கப்படும் மாங்கேணியைச் சேர்ந்த செல்லத்துரை யசீதரன், இரண்டாம் லெப்டினன்ட் செல்வவீரன் என்று அழைக்கப்படும் சித்தாண்டியைச் சேர்ந்த சேதுநாதப்பிள்ளை பிரபா ஆகிய மூன்று போராளிகளே வீரச்சாவடைந்துள்ளனர்.

இம்மாவீரர்களுக்கு எரிமலை தனது இதயவணக்கத்தைத் தெரிவித் துக்கொள்ளுகின்றது.

### சிறீலங்காப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், மூன்று தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்:

நுவரெலியா, கந்தப்பொல என்ற இடத்தில் சிறீலங்காப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், மூன்று தமிழர்கள் கொல்லப் பட்டுள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். சிறீலங்காப் பொலி ஸார், ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்துள்ளபோதும் அங்கு பதட்டநிலை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

28.04.2004 அன்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றையடுத்து, ஏற்பட்ட முறுகல் நிலை, தமிழ் சிங்கள மக்களுக்கிடையிலான மோதலாக உருவெடுத்தது.

தமிழர்களுக்குச் சொந்தமான, பதின்நான்கு வர்த்தக நிலையங்கள், சிங்களவர்களால் அடித்துடைத்துச் சேதமாக்கப்பட்டதைத்தொடர்ந்து, அதற்கு எதிராக தமிழர்கள் மேற்கொண்ட எதிர்த்தாக்குதலில், சிங்களவர் களுக்குச் சொந்தமான நான்கு வர்த்தக நிலையங்கள், எரிபொருள் நிரப்பு நிலையம் என்பன சேதமாக்கப்பட்டன.

இதனையடுத்து, அங்கு விரைந்த சிங்களப் பொலிஸார், தமிழ்த் தொழிலாளர்களை நோக்கி கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில், மூன்று பொதுமக்கள், அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

சிங்களப் பொலிஸார் பாரபட்சத்துடன் செயற்பட்டுள்ளனர் என, மலையக அரசியல் தலைவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக சஞ்சிகை



விடுதலை வேட்கை மிக்க எழுச்சிப் படைப்புக்கள்,
ஒடுக்குமுறைக்கு எதிரான ஆவேசக்குரல்,
போர்க்கால இலக்கியத்தின் யதார்த்தப் பதிவு,
மண்ணின் மணத்தோடு மன உணர்வுகளை
வெளிப்படுத்தும் உன்னத இலக்கியமாக எரிமலை

Fax: (33) 1 43 58 11 91 Email: erimalai@erimalai.com
ERIMALAI,
C/O T.C.C France, 341, Rue Des Pyrenees,
75020 Paris, FRANCE.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐ.நாவை நோக்கிய...
பொங்குதமிழ்ப் பேரணி 2004




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்